உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 15 கார்த்திகை 25ஆம் நாள் திங்கட்கிழமை 11 டிசெம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

உள்ளூராட்சித் தேர்தலையொட்டி

# தமிழ் அரசுக் கட்சிக்குள் பங்கீடு குறித்து அதிருப்தி

*அளவுக்கு மீறிய விட்டுக்கொடுப்பு என விசனம்*

யாழ்ப்பாணம், டிசெம்பர் 11

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆசனப் பங்கீடு தொடர்பில், முதன்மைப் பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இரண்டாம் நிலைத் தலைவர்கள், மாவட்ட நிர்வாகிகள் மட்டத்தில் பெரும் அதிருப்தி நிலவுகின்றது.

ஒற்றுமை என்ற பெயரில், பங்காளிக் கட்சிகளுக்கு அதிகளவான உள்ளூராட்சி மன்றங்களை, கூட்டமைப்பின் தலைமை மற்றும் தமிழ் அரசுக் கட்சியின் உயர் பீடத்தினர் தாரைவார்த்துள்ளதாக அவர்கள் குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆசனப் பங்கீட்டில் முதல் சுற்றில் 80 சதவீத இணக்கம் எட்டப்பட்டிருந்தது. இரண்டாம் சுற்றில் ஏற்கனவே எட்டப்பட்ட இணக்கமும் இல்லாமல்போனது. இதனையடுத்து பங்காளிக் கட்சிகளுள் ஒன்றான ரெலோ, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியுடன் இணைந்து தேர்தலை எதிர்கொள்ள முடியாது என்று அறிவித்திருந்தது.

இதனையடுத்து ஏற்பட்ட பிணக்கை சரி செய்யும் நோக்குடன், கொழும் » 25

## இடைக்கால அறிக்கை மீது மீண்டும் இன்று விவாதம்

யாழ்ப்பாணம், டிசெ. 11

புதிய அரசமைப்புத் தொடர்பாக, அதற்கான வழிகாட்டல் குழு முன்வைத்துள்ள இடைக்கால அறிக்கை மீது அரசமைப்புச் சபையில் (நாடாளுமன்றத்தில்) முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கை மீதான இறுதி நாள் விவாதம் இன்று நடைபெறவுள்ளது.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி அரசமைப்பு நிர்ணயச் சபையில் முன்வைக்கப்பட்டது. இந்த அறிக்கை மீது, ஒக்ரோபர் 30, 31 மற்றும் நவம்பர் முத » 25

## ராணுவம் நடத்தும் உணவுத் திருவிழா

*யாழ். நகரத்தில் 15 முதல் 17 வரை*

யாழ்ப்பாணம், டிசெ. 11

யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதியில் இராணுவத்தினரால், யாழ். உணவுத் திருவிழா நடத்தப்படவுள்ளது. எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம், 17ஆம் திகதி வரை உணவுத் திருவிழா இடம்பெறவுள்ளதாக இராணுவம் அறிவித்துள்ளது.

வடக்கு மாகாண விடுதிகள் சங்கத்துடன் இணைந்து இராணுவத்தின் யாழ். படைகளின் தலைமையகம் இந்த உணவுத் திருவிழாவை நடத்தவுள்ளது.

யாழ். கோட்டைக்கு முன்பாக நடைபெறவுள்ள இந்தத் திருவிழாவில் இசை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு- கிழக்கில் இராணுவம் சிவில் மற்றும் வணிகச் செயற்பாடுகளில் இருந்து விலக வேண்டும் என்று பன்னாட்டு அளவில் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்ற நிலையிலும், » 25

## சாவகச்சேரி நகர சபைக்கு இன்று முதல் வேட்பு மனு

*மேலும் 92 சபைகளுக்கும்*

யாழ்ப்பாணம், டிசெ. 11

சாவகச்சேரி நகரசபை உள்ளிட்ட 93 உள்ளூராட்சி சபைகளுக்கு வேட்புமனுத் தாக்கல் இன்று ஆரம்பமாகவுள்ளது. முதற் கட்டமாக வேட்பு மனுக்கள் கோரப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கே வேட்புமனுத் தாக்கல் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 14ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யமுடியும் என்று » 25

## புளொட்டுக்கும் திருப்தியான பங்கீடு!

யாழ்ப்பாணம், டிசெ. 11

உள்ளூராட்சித் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் புளொட்டுக்கான பங்கீடு தொடர்பில் இருந்து வந்த இழுபறிக்கு நேற்றுத் தீர்வு காணப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் சுன்னாகம் பிரதேச சபை, மானிப்பாய் பிரதேச சபை, சங்கானைப் பிரதேச சபை என்பவற்றைப் புளொட் கோரியிருந்தது. தமிழ் அரசுக் கட்சியும் பலமாக உள்ள அந்தப் பகுதிகளை அந்தக் கட்சிக்கு வழங்குவதில் இழுபறி நீடித்தது. அதற்கு நேற்றுத் தீர்வு காணப்பட்டுள்ளது.

சுன்னாகம் பிரதேச சபை புளொட்டுக்கு » 25

## மக்கள் விருப்பப்படும்போது மாகாணங்கள் இணையலாம்

*சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு*

வவுனியா, டிசெ.11

இரு மாகாணங்களில் வாழும் மக்கள் விரும்பும்போது மாகாணங்கள் இணையலாம். அது மக்களின் விருப்பப்படியே நடக்கலாம் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

மனித உரிமைகள் மற்றும் புதிய அரசியல் அமைப்பு தொடர்பான கலந்துரையாடல் நேற்று வவுனியாவில் நடைபெற்றது. அதில் வடக்கு- கிழக்கு மற்றும் மலையகத்தை சேர்ந்த மூவின இளைஞர்களும் கலந்துகொண்டனர்.

இளைஞர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதில்களையும் அது தொடர்பான விளக்கங்களையும் நாடாளுமன்ற உறுப்பினர் வழங்கினார்.

"தற்போது உருவாக்கப்படவுள்ள அரசமைப்பில் கூறப்படுகின்ற ஒரு விடயம் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்பு. இது அவசியமா என் » 25

## மகிந்த அணியின் பலம் குறைகிறது

கொழும்பு, டிசெ. 11

உள்ளூராட்சித் தேர்தலுக்கான ஆயத்தங்கள் பரபரப்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் கட்சித் தாவல்களும் சூடு பிடித்துள்ளது. மகிந்த அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், அரச தலைவர் மைத்திரிபால அணியுடன் நேற்று இணைந்தார்.

மகிந்த அணிக்குள் ஏற்கனவே குழப்பங்கள் ஏற்பட்டுள்ள நிலையில், இந்தக் கட்சித் தாவல் நடைபெற்றுள்ளது.

அம்பாறை தேர்தல் மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினரும் மகிந்த அணி உறுப்பினருமான சிறியானி விஜேவிக்ரமவே, அரச தலைவர் மைத்திரி அணியுடன் இணைந்தார். » 25

மைத்திரியுடன் சேர்த்து வைப்பதற்காக

## ரத்ன தேரர் மீண்டும் மகிந்தவுடன் பேச்சு

கொழும்பு, டிசெ. 11

இரண்டாகப் பிளவுபட்டுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியைத் தேர்தலுக்கு முன்னர் ஒன்றிணைப்பதற்குரிய முயற்சியில் இறங்கியுள்ள ரத்தன தேரர், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுடன் நேற்று மீண்டும் பேச்சு நடத்தியுள்ளார்.

கூட்டரசிலிருந்து சுதந்திரக் கட்சி வெளியேறும்வரை இணைப்புச் சாத்தியப்படாது என்றும், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் கூட்டு எதிரணியின் முடிவில் இனியும் மாற்றம் ஏற்படாது என்றும் தேரரிடம் மகிந்த ராஜபக்ச » 25

## வாள்களுடன் வந்தவர்கள் சங்கானையில் அட்டகாசம்

*சந்தேகநபர்கள் நால்வர் கைது*

யாழ்ப்பாணம், டிசெ.11

யாழ்ப்பாணம், சங்கானையில் வாள்களால் மக்களை அச்சுறுத்தியதுடன், கொள்ளையில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தில் நால்வர் தெல்லிப்பழைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சங்கானை மருத்துவமனைக்கும், தொட்டிலடிச் சந்திக்கும் இடையே நேற்று மாலை 5 மணியளவில் 2 மோட்டார் சைக்கிள்களில் பயணித்த ஐவர் மக்களை அச்சுறுத்தியுள்ளனர். வாள்களை வீசி, தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டனர். மக்கள் சிலர் அவர்களைப் ஒளிப்படம் » 25

## வீட்டுக் கதவை உடைத்து 24 பவுண் நகை திருட்டு

*கலட்டியில் சம்பவம்*

யாழ்ப்பாணம், டிசெ.11

யாழ்ப்பாணம் கலட்டியில் உள்ள வீடொன்றில் நேற்று முற்பகல் கதவு உடைத்து 24 பவுண் நகைகள் திருட்டப்பட்டுள்ளன என்று பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

முற்பகல் 10 மணியளவில் திருட்டு நடந்துள்ளது. வீட்டில் இருந்தவர்கள் தேவாலயத்துக்குச் சென்றுள்ளனர். அதைப் பயன்படுத்தித் திருடர்கள் வீட்டின் பின் கதவை உடைத்து நகைகளைக் திருடியுள்ளனர்.

தேவாலயத்துக்குச் சென்ற வீட்டார் திரும்பி வந்தபோது கதவு உடைக்கப்பட்டு உடைமைகள் சிதறுண்டு காணப்பட்டன. நகைகளைப் பார்த்தபோது அவை அங்கு இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-ரி)

## வாள்களுடன் வந்த குழு அச்சுறுத்திக் கொள்ளை

*ஆனைக்கோட்டையில் நேற்றிரவு சம்பவம்*

யாழ்ப்பாணம், டிசெ.11

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையில் வீடொன்றுக்குள் வாள்களுடன் புகுந்த கும்பல் அச்சுறுத்தி நகை, பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளது.

நேற்று இரவு 9 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. இலக்கத் தகடு மறைக்கப்பட்ட மோட்டார் சைக்கிளில் » 25

### முச்சந்தி முரளி



உயிர் எடுத்தவர்கள் இப்ப... உயிர் வளர்க்கினமோ!

# தேர்தலில் மூன்றில் இரண்டு சபையைக் கைப்பற்றுவது நிச்சயம்

இராதாகிருஸ்ணன் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.11

நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வரவு - செலவுத் திட்டம் வெற்றி பெற்றது போல ஐக்கிய தேசியக் கட்சி உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் நாட்டின் மூன்றில் இரண்டு சபைகளையும் கைப்பற்றுவது நிச்சயம் என கல்வி இராஜாங்க அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து அம்பேகமுவ பகுதிக்கான பொருள்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று கொட்டகலை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"புதிய தேர்தல் முறைப்படி இந்தத் தேர்தலை எமது நாட்டு மக்கள் சந்திக்கின்றார்கள். எங்களுடைய பெருந்தோட்ட மக்கள் இந்தத் தேர்தலை சதகமாக மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டும்.

தேர்தலில் அரசதலைவரையோ அல்லது தலைமை அமைச்சரையோ மாற்றி அமைக்க முடியாது.

இன்னும் மூன்று வருடங்களுக்கு இந்த நல்லாட்சி அரசாங்கமே தொடரும். புத்திசாலித்தனமாக சிந்தித்து செயற்பட வேண்டும்.

உங்கள் ஆதரவை வழங்குவதன் மூலம் நாம் முழுமையான பயனைப் பெற்றுக் கொள்ள முடியும்" - என்றார். (ற-ரி5)




# உறவுகளைத் தேடித் தரக்கோரி வடக்கு - கிழக்கில் போராட்டம்





மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு காணாமற் போனோர்களின் உறவினர்கள் நேற்று பல்வேறு இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் பேரணிகளை முன்னெடுத்தனர்.

**யாழ்ப்பாணம்**

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட செயலகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல்வேறு பகுதிகளில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றார்கள்.

வடக்கில் இராணுவத்தில் சரணடைந்தோர் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர்களைக் கண்டறிந்து தருமாறும் வலியுறுத்திப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மாவட்டச்செயலகத்தின் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டமானது பேரணியாக யாழ். மா. சோமசுந்தரம் வீதிவழியாக, நாவலர் வீதியை சென்றடைந்து அங்கிருந்து. நாவலர் வீதியில் உள்ள ஐ.நா அலுவலகத்தில் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

**மட்டக்களப்பு**

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு கல்லடிப் பாலம் அருகில் இருந்து ஆரம்பமான பேரணி புதிய கல்முனை வீதி வழியாக அரசடிச் சந்தி, மட்டக்களப்பு திருமதி வீதி சுற்றுவட்டம் ஊடாக நகரின் பிரதான மணிக்கூட்டுக் கோபுரம் ஊடாக மாகாத்மா காந்திப் பூங்காவையடைந்து அதனையடுத்து அந்த இடத்தில் ஒன்று கூடிய வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தமது கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றை வாசித்தனர். அரசதலைவர் மற்றும். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் ஆகியோருக்கான மனுக்கள் கைளிக்கப்பட்டன.

**அம்பாறை**

அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் அமைப்பால் தமிழ்.முஸ்லிம் உறவுகள் அக்கரைப்பற்றில் எதிர்ப்பு ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டமானது அக்கரைப்பற்று பாதிப்பற்ற பெண்கள் அரங்க அலுவலகத்தில் இருந்து ஆரம்பமாகி அக்கரைப்பற்று மணிக்கூட்டுக் கோபுரம் வரை சென்று மீண்டும் ஆலையடி வேம்பு முதன்மை வீதி வழியாக சதோச வர்த்தக நிலையத்துக்கு அருகாமையில் ஒன்று கூடி தமது எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகள், கணவன் மற்றும் உறவுகளின் பெயர்களைத் துணிகளில் எழுதி அதனைக் கழுத்தில் அணிந்து கொண்டு சுலோக அட்டைகளை எந்தியவாறு தமது எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டனர்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் இந்த நாட்டில் காணாமல் ஆக்கப்பட்ட ஆயிரக்கணக்கான எமது உறவுகளுக்கு ஒரு பதிலைக் கூறாது அரசு மனித உரிமை தினத்தை கடைப்பிடிப்பதில் என்ன பலன்கள் எனத் தெரிவித்தனர்.

**வவுனியா**

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் அமைப்பின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

உறவுகளை மீட்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளவில்லை தீர்வின்றித் தொடரும் தமது போராட்டத்துக்கு நிரந்தரமான ஒரு தீர்வைப் பெற்றுத்தருமாறும் மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு தீர்வின்றித் தொடரும் தமது போராட்டத்தில் பன்னாட்டு தேச மனித உரிமைகள் காப்பகம் தலையிட்டு தமது உறவுகளை மீட்டுத்தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ற-ரி5, 106)











# தேக்கு மரக்குற்றிகள் கடத்த முயற்சி

மட்டக்களப்பு,டிசெ.11

மட்டக்களப்பில் சட்டவிரோதமாக வெட்டப்பட்ட 38 தேக்கு மரக்குற்றிகள் பொலிஸாரால் நேற்றுக் கைப்பற்றப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

தொப்பிகல பகுதியில் தேக்கு மரக்குற்றிகள் வெட்டப்படுவது தொடர்பாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்தே 38 தேக்குமரக் குற்றிகளும் 10 உந்துருளிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ற -ரி4)

# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர் கைது

கொழும்பு,டிசெ.11

பல குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேகநபரை கல்பிட்டி பொலிஸார் நேற்றுக் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்டவரிடமிருந்து இரண்டு கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டதாகவும் 6 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டபோதும் பல வருடங்களாக நீதிமன்றில் முன்னிலையாகவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகள் மேற்கொண்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ற.ரி4)

## கஞ்சாவுடன் 7 பேர் கைது நேற்று மன்றில் முன்னிலை



ஹற்றன், டிசெ.11
ஹற்றன் குற்றத்தடுப்பு சிறப்புப் பிரிவால் மோப்ப நாயின் உதவியுடன் மஸ்கெலியா பகுதியில் வைத்துக் கஞ்சாவுடன் 4 பேரும் வட்டவளைப் பகுதியில் கேரளா கஞ்சா சிறிய பக்கற்றுக்கள் வைத்திருந்த 3 பேருமாக 7 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் நேற்று ஹற்றன் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்டவர்கள் வட்டவளை மற்றும் நீர்கொழும்பு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
ஹற்றன் பொலிஸ் நிலையத்தன் தலைமையக கடமைப் பொலிஸ் பரிசோதகர் ஜயரத்னவின் வழிகாட்டலுக்கமைய நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.
சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளைக் ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.
(ற-ரி5)

## மாணவர் கௌரவிப்பு

மட்டக்களப்பு, டிசெ.11
மட்டக்களப்பு கல்லடி ஹரி சிறுவர் இல்லத்திலிருந்து 2017 கல்வியாண்டுக்கு பல்கலைக் கழகத்துக்கு தெரிவான மாணவர்களுக்கான சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது.
சிறுவர் இல்லத்தின் தலைவர் எஸ். சந்திரகுமார் தலைமையில் குறித்த நிகழ்வு நடைபெற்றது.
மாவட்ட செயலர் யாழ்ப்பாணம், பேராதனை மற்றும் கிழக்கு பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான 4 மாணவர்களுக்கு நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவித்தார்.
நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்டச் செயலராகப் பதவியேற்ற மா.உதயகுமாருக்கு இல்ல நிர்வாகத்தினரால் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவித்தனர். (ற)

# சுயநலத்துடன் நடப்பது சிறந்த பண்பாடு அல்ல

## அமைச்சர் பைஸர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.11
அரசு ஒன்றை இணைந்து நடத்துவதாயின் சகலவிடயங்களிலும் ஒன்றுபடவேண்டும். தமக்கு நலனுள்ள விடயத்தில் மாத்திரம் ஒத்துச்சென்று ஏனைய விடயங்களில் ஒதுங்கிச் செல்வது நல்ல பண்பாடல்ல. இவ்வாறு அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.
அமைச்சர் ரவுப் ஹக்கீம் பிரதமருடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது. அவர் அறிக்கை விடுத்தால் மாத்திரமே தமது ஆதரவை வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டிருந்தார். கூட்டு அரசில் இருந்தால், இணைந்து பயணிக்க வேண்டும். தமக்கும் தமது கட்சிக்கும் முரணாக வருகின்றபோது பிரிந்து செயற்படுவது பண்பாடான செயல்ல.
இனவாத முகத்துடன் அரசியலில் ஈடுபடுவதை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். இனங்களின் பெயர்களில் காணப்படும் கட்சிகளைத்தான் தனிப்பட்ட வகையில் எதிர்க்கின்றேன்.
கிந்தொட்ட சம்பவத்தில் சில கட்சிகள் மக்கள் மத்தியில் போட்டோவுக்கு முகம் காட்டியமை ஏமாற்று நடவடிக்கை.
இதுபோன்ற ஏமாற்றுக்கு இடமளிக்கப் போவதில்லை. எந்தசவாலுக்கும் முகம்கொடுக்க தயார் என்று அமைச்சர் பைசர் குறிப்பிட்டுள்ளார்.
(ற)



தொண்டமனாறு கெருடாவிலிலுள்ள அம்பிகை முன்பள்ளியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நேற்று நடைபெற்றது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்குமாகாணசபை மற்றும் இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினருமான கணபதிப்பிள்ளை தர்மலிங்கம் கலந்துகொண்டார். (ற,ரி4,26)

## பாடசாலை கல்வியிலிருந்து வரலாற்றை நீக்கத் திட்டம்

கொழும்பு, டிசெ.11
இலங்கை வரலாற்றை பாடசாலைக் கல்வியிலிருந்து நீக்குவதற்கு அரசு கவனம் செலுத்தி வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.
பின்லாந்து நாட்டிலுள்ள பாடசாலை பாடத்திட்டத்தில் அந்த நாட்டின் வரலாறு இடம்பெறாது காணப்படுவதால் இலங்கையிலும் அதனை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க ஆலோசிக்கப்படுகின்றது என்று பேராசிரியர் ஒருவரை மேற்கோள்காட்டித் தகவல்கள் வெளியாகியுள்ளது.
வரலாற்றுப் பாடத்தை பாடசாலை கலைத் திட்டத்திலிருந்து நீக்குவது தொடர்பில் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன என்றும் கூறப்படுகின்றது. (ற)

## டிரம்பின் முடிவுக்கு கண்டனம்

கொழும்பு, டிசெ.11
அமெரிக்க அரச தலைவர் டொனால்ட் டிரம்பால் இஸ்ரவேலின் தலைநகராக ஜெரூசலத்தை அறிவித்தமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று இலங்கை நாடாளுமன்றத்திலுள்ள பலஸ்தீன் நட்புறவு சங்கம் அறிவித்துள்ளது.
விசேட அறிவித்தல் ஒன்றின் மூலம் இதனை தெரிவித்துள்ளது.
ஜெரூசலத்தை இஸ்ரவேலின் தலைநகராக்குவதற்கும் டெல்அவிவிலுள்ள அமெரிக்க தூதரகத்தை ஜெரூசலத்துக்கு மாற்றுவதற்கும் டிரம்ப் எடுத்துள்ள தீர்மானத்துக்கு தமது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்வதாக அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.
ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் பரிந்துரைகளுக்கு எதிராக டொனால்ட் டிரம்ப் முன்னெடுத்துள்ள தீர்மானம் மத்திய கிழக்கு சமாதானத்துக்கு பெரும் சவாலாகும் எனவும் அந்தச் சங்கம் கூறியுள்ளது. (ற)

ஆர்வமும், துடிப்பும், தேடலும் இருந்தால்......

பயிற்சிச் செய்தியாளராக வாய்ப்பு!

வயதெல்லை இல்லை.
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
முழுநேர, பகுதிநேர பணி வாய்ப்பு.

உங்கள் சுயவிவரக் கோவையை (அலைபேசி இலக்கத்துடன்) தபாலிலோ, வைபர் மூலமோ, உதயன் முகநூல் பக்க தனித் தகவல் ஊடாகவோ, மின்னஞ்சல் ஊடாகவோ அனுப்பலாம்.

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
077 316 5555
UthayanPrint
uthayanprint@gmail.com

விண்ணப்ப இறுதித் திகதி:
15.12.2017

# வட்டுக்கோட்டையிலிருந்து மாற்றத்தை ஆரம்பிப்போம்

## க.குமார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 11

தமிழ்த் தேசியவாதத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் பிறந்த வட்டுக்கோட்டை மண் அதே உறுதியுடன் தொடர்ந்து தமிழ்த் தேசியத்துக்காகப் பயணிக்கவேண்டும். இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கட்சியின் வட்டுக்கோட்டை அலுவலகத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்விலேயே கஜேந்திரகுமார் மேற்கண்டவாறு கூறியதாக அந்தக் கட்சியினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கொள்கைகளைக் கைவிட்டு ஒற்றையாட்சித் தீர்வுக்கு இணங்கியிருக்கின்ற ஒரு தருணத்தில் உள்ளூராட்சித் தேர்தலைச் சந்தித்திருக்கின்றோம்.

இது வெறும் உள்ளூராட்சித் தேர்தலல்ல. கஷ்ரப்பட்டு அரசுடன் பேசிக் கொண்டு வந்திருக்கின்ற அரசமைப்புக்கு இது ஒரு கருத்துக் கணிப்பு என்று சுமந்திரன் பல இடங்களில் கூறியிருக்கின்றார். எங்களுக்கு கொள்கைதான் முக்கியம். எங்கள் கொள்கையோடு உடன்படும் தரப்புக்களை இணைத்துச் செயற்பட நாங்கள் தயாராகவே இருக்கின்றோம்.

எங்களைப் பொறுத்தவரை இந்த அரசியல் மாற்றம் வட்டுக்கோட்டையில் இருந்து ஆரம்பிக்கவேண்டும் என்று நினைக்கின்றோம். தமிழ் அரசியலின் திருப்புமுனையாக மிக முக்கியமான கட்டங்களில் வட்டுக்கோட்டை இருந்திருக்கிறது. வட்டுக்கோட்டை மக்கள் ஒரு கொள்கையுடன் மிகத் தீவிரமாக இருந்த மக்கள். இந்த மண்ணில்தான் தமிழ்த் தேசியவாதத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் பிறந்தது. அந்தக் கோட்பாடுகளை நாங்கள் கைவிட்டுவிடக்கூடாது. எல்லோரையும் விட அந்தக் கோட்பாடுகளை முன்கொண்டுசெல்லவேண்டிய கடமையும் பொறுப்பும் இந்த மண்ணுக்கே இருக்கிறது. இந்த உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பாளர்கள் அறிமுகக் கூட்டத்தை இந்த வட்டுக்கோட்டை மண்ணிலிருந்து தொடங்கியிருக்கின்றோம். இந்த மண் பிழையான தரப்புக்களில் கைகளில் சென்றுவிடக் கூடாது என்பதை கூறிக்கொள்கின்றோம். இந்தத் தேர்தல் பலருடைய கணக்குகளை மீறி ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நம்புகின்றோம் - என்றார். (5)

# பிக்கு படையணி பலம்பொருந்திய இராணுவம்!

## மகாநாயக்க தேரர் பதவி இளம் பிக்குக்கு வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்து

பௌத்த பீடங்களானவை பலம்பொருந்திய இராணுவக் கட்டமைப்புப் போன்றவை. அந்தப் பலத்தை உரியநேரத்தில், உரியவகையில் வெளிப்படுத்தவேண்டும். எனவே, மகாநாயக்க தேரர் பதவியானது இளம் பிக்குகளுக்கு வழங்கப்படவேண்டும். அப்போதுதான் கட்டமைப்பு பலமாக இருக்கும். இவ்வாறு எல்லே குணவங்ச தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பை நாடாளுமன்றத்தில் அவசரமாக நிறைவேற்றிக்கொள்ளும் வகையில் சில முன்னெடுப்புகள் இடம்பெறுவதாக எனக்குத் தகவல் கிடைத்துள்ளது. தற்போதைய அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளது. ஆனால், புதிய அரசமைப்பு வரும்பட்சத்தில் அந்த நிலமை மாறிவிடும். புதிய அரசமைப்பு எவருக்குத் தேவையாக இருக்கின்றது? அதை உருவாக்குபவர்களுக்கு பிரிட்டனால் சம்பளம் வழங்கப்படுகின்றது. இந்த விடயத்தில் பிக்குகள் விழிப்பாக இருக்கவேண்டும். உரிய வகையில் வழிநடத்தல்களை செய்யவேண்டும்.

பிக்குகள் படையணியானது, பலம்பொருந்திய இராணுவக் கட்டமைப்புப் போன்றது. மகாநாயக்க தேரர் இராணுவத் தளபதி, அனுநாயக்க தேரர் பிரிகேடியர் உள்ளிட்ட பதவிகளுக்குரியவர். கேர்ணல்களும் கூட உள்ளனர். அதனால் பிக்குகள் படையணி இளம் படையணியாகவேண்டும். அதனால் மகாநாயக்க தேரர் பதவியும் கூட இளம் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு அதனால் ஓர் இளம் பௌத்த தலைமைத்துவம் உருவாக்கப்படவேண்டும். அதனை எமது நாட்டின் பௌத்த பிக்குகள் முன்னிலையாகிச் செய்ய வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும். ஒரு தரப்பை அடிப்படையாகக்கொண்டே மகாநாயக்க தேரர் பதவி வழங்கப்படுகின்றது. ஆனால், கட்டளையிடும் நிலையில் அவர்கள் இல்லை. இதனால்தான் இளம் தலைமைத்துவம் அவசியம் - என்றார். (5)

*சீரற்ற காலநிலை;*

# பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு இலவச மின்சார இணைப்பு

யாழ்ப்பாணம்.டிசெ.11

நாட்டில் சீரற்ற காலநிலையால் முழுமையாகச் சேதமடைந்த வீடுகளுக்கான மின்சார இணைப்பை இலவசமாக பெற்றுக் கொடுப்பதற்கும், மின்சாரக் கட்டணத்தை செலுத்துவதற்கு 6 மாத காலச் சலுகை வழங்கவும் தீர்மானித்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இது பற்றித் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் அண்மைக்காலகமாகக் நிலவிய சீரற்ற காலை நிலையால் 835 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன், சுமார் 1000 குடும்பங்களுக்கான மின்விநியோகம் தடைப்பட்டுள்ளது.ஆகவே மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு சீரற்ற காலநிலையால் முழுமையாகச் சேதமடைந்த வீடுகளுக்கான மின்சார இணைப்பை இலவசமாகப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது. அத்துடன் மின்சாரக் கட்டணத்தை செலுத்துவதற்கு 6 மாத காலச் சலுகையும் வழங்கப்படவுள்ளது.

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட இழப்புகள் குறித்து, கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலர்கள் உறுதி செய்ததன் பின்னர், பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தச் சலுகைகள் வழங்கப்படவுள்ளன.இது தவிர மின் விநியோகத்தை வழமைக்கு கொண்டு வருவதற்கு மேலதிக குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

# இலங்கையின் மூலப் பெயர் ஈழம்தான்

## சிங்கலே என்பது தவறானது என்கிறார் விக்கி

யாழ்ப்பாணம், டிசெ. 11

இலங்கையின் மூலப்பெயர் 'சிங்கலே' என்பது தவறானது. ஈழம் என்பதுதான் மூலப் பெயராகும். இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

மகிந்த ஆட்சிக் காலத்தில் பிரதி அமைச்சராக இருந்த றியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்கையிலேயே, வடக்கு முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேவநம்பிய தீசன் ஒரு தமிழ் மன்னன் என்பதை சரத்வீரசேகர ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த மன்னன் சிங்கள மொழி தோன்றுவதற்கு முன்னர் வாழ்ந்த மன்னன். ஆகவே அவர் எவ்வாறு ஒரு சிங்களவராக இருக்க முடியும்? சிங்கள மொழியானது கிட்டத்தட்ட கி.பி 6ஆவது அல்லது 7ஆவது நூற்றாண்டின் பின்னர் மட்டுமே தோற்றம் பெற்றது. சிங்கள மொழி தோன்றுவதற்கு முன்னர் நாட்டை ஆட்சி செய்த மன்னனை சிங்களவர் எனக் கூறுவது முட்டாள்தனமானது. சிங்கள மொழி தோன்றியதன் பின்னர் எழுதப்பட்ட நூல்களில் எமது நிலங்கள் தொடர்பாக அவர்களுக்கு விருப்பமான கருத்துக்கள் எழுதப்பட்டிருக்கலாம். மேலும். இந்த நாட்டின் மூலப்பெயர் 'சிங்கலே' என்று றியர் அட்மிரல் வீரசேகர குறிப்பிட்டிருந்தார். இது பொய்யானது. ஈழம் என்பதே மூலப் பெயராகும். ஹெல என்பது ஈழம் என்பதன் பாளி மொழிச் சொல்லாகும். சிங்கலே என்பது கலவைச் சொல்லாகும். இது தொடர்பாக பாரபட்சமற்ற பன்னாட்டு வரலாற்று ஆய்வாளர்கள், போலி வரலாற்றாய்வாளர்களுடன் விவாதம் செய்து உண்மையைக் கண்டறியவேண்டும். இத்தகைய போலி வரலாற்று ஆய்வாளர்களால் முன்வைக்கப்பட்ட போலி வரலாற்றுப் பதிவுகளை அழிப்பதற்கு ஒரு மணித்தியாலம் கூடத் தேவையில்லை. இத்தகைய கற்பனையான கருத்துக்களை இல்லாதொழிப்பதற்கு முன்னாள் பௌத்த திராவிடன் ஒருவனை உருவாக்க வேண்டியிருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். (5)

# மன்னார் இளைஞன் சடலமாக மீட்பு

## சாவில் சந்தேகம்

மன்னார் பேசாலையில் தனிமையில் படுத்துறங்கிய இளைஞர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். உடற்கூற்றுப் பரிசோதனையை மேற்கொண்ட சட்டவைத்திய அதிகாரி கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டிருப்பதற்கான சாத்தியம் தென்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரனிஸ்சியஸ் நளின்ஸ் (வயது-29) என்னும் இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்த வியாழக்கிழமை இரவுவேளை இளைஞனின் வீட்டார் அனைவரும் அயலில் உள்ள ஆலய உற்சவம் ஒன்றுக்குச் சென்றுள்ளார்கள். இளைஞன் தனிமையில் படுத்துறங்கியுள்ளார். உற்சவம் முடிந்து வீட்டுக்குத் திரும்பிய உறவுகள் இளைஞன் நித்திரையில் இருப்பதாகக் கருதி அவரை எழுப்பவில்லை. மறுநாள் வெள்ளிக்கிழமை மதியமாகியும் இளைஞன் எழும்பவில்லை. இதன் பின்னரே இளைஞன் உயிரிழந்திருப்பதை வீட்டுக்காரர்கள் அறிந்துள்ளனர். பேசாலைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மன்னார் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. சடலத்தைப் பரிசோதித்த மருத்துவ அதிகாரி, சட்டமருத்துவ அதிகாரியின் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனையில், இளைஞரின் கழுத்தில் கயிறு அல்லது அதனை ஒத்த ஒரு பொருளால் நெரிக்கப்பட்டிருப்பதாகவும், அதனாலேயே சாவு சம்பவித்திருக்கவேண்டும் என்றும் சட்டமருத்துவ அதிகாரி சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (5,101)

# தொடருந்து தொழிற்சங்கங்களின் போராட்டத்தால் நாளாந்தம் 12 மில்லியன் ரூபா இழப்பு!

## நேற்று 4ஆவது நாளாகவும் போராட்டம் முன்னெடுப்பு இன்று பணிக்கு திரும்பாதவர்களுக்கு ஆப்பு

கொழும்பு, டிசெ. 11

உரிய தீர்வு கிடைக்கும்வரை பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுப்பதற்குத் தொடருந்து தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ள நிலையில், இன்று சேவைக்குத் திரும்பாதவர்கள் இடைவிலகியவர்களாகக் கருதப்படுவார்கள் என்று போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

அரச தலைவரின் செயலருடன் நேற்று இரவு நடைபெற்ற பேச்சிலும் உரிய தீர்வு எட்டப்படாத சூழலிலேயே மேற்படி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

தொடருந்து சேவையை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தும் வகையில் அரச தலைவரால் வெளியிடப்பட்டுள்ள அரசிதழ் அறிவித்தலுக்கமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தொடருந்து சாரதி உதவியாளர்களின் நியமனத்தில் எழுந்துள்ள சர்ச்சை, சம்பளப் பிரச்சினை உட்பட சில விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கடந்த புதன்கிழமை நள்ளிரவுமுதல் தொடருந்து தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன. தொடருந்துப் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது. ஒருசில தொடருந்துகள் சேவையில் ஈடுபட்டாலும் பயணிகளின் தேவையை உரிய வகையில் அவை பூர்த்திசெய்யவில்லை. முற்கூட்டியே பயண ஆசனங்களைப் பதிவுசெய்தவர்கள், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், பருவகாலச்சீட்டு மூலம் பயணம் மேற்கொள்பவர்கள் எனப் பலதரப்பினரும் பெரும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்தனர். இதனால், தொடருந்துகளில் முன்கூட்டியே பதிவுசெய்தவர்களும், பருவகாலச்சீட்டு உள்ளவர்களும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகளில் பயணம் மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த நடைமுறை உரியவகையில் பின்பற்றப்படவில்லை. தொடருந்து தொழிற்சங்கங்களின் போராட்டம் நேற்று 4ஆவது நாளாகவும் தொடர்ந்ததால் பயணிகள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டனர்.

இதேவேளை, தொடருந்து சொத்துகளுக்குச் சேதம் விளைவிப்பவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதாக திணைக்களத்தின் மேலதிகப் பொது முகாமையாளர் விஜய சமரசிங்க தெரிவித்தார். இதனால் சேவையில் ஈடுபடும் அனைத்து தொடருந்துகளிலும் பாதுகாப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். தொழிற்சங்கங்களின் பணிப்புறக்கணிப்பால் நாளாந்தம் சுமார் 12 மில்லியன் ரூபாவை இழக்க நேரிட்டுள்ளதாக தொடருந்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (5)

## 'நூல் விழி' நூல் வெளியீட்டு நிகழ்வு



கரணவாய் டிச 9

தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தின் நூலக வாசகர் வட்டத்தின் 'நூல் விழி' என்ற நூல் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்டு வைக்கப்பட்டது.

வித்தியாலய அதிபர் இரா. ஸ்ரீநடராசா நூலை வெளியிட்டு வைக்க முதற்பிரதியை நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட வட மாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸ் பெற்றுக்கொண்டார்.

நூலுக்கான வாழ்த்துரையை கிறிஸ்தவ பாட ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் டொறின் மன்மதநாயகமும் நூலின் வெளியீட்டுரையை வடமராட்சி வலய தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகரும் நூலக இணைப்பாளருமான வளர்மதி அம்பிகைபாகனும் நூலின் நயப்புரையை யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலகர் கலாநிதி கல்பனா சந்திரசேகரமும் ஏற்புரையை வித்தியாலய நூலகர் செல்லத்துரை செல்வரஞ்சினியும் நிகழ்த்தினர். (எ-108)

### சுகாதார அமைச்சால்

# சத்துணவாளர் பதவிக்கு பட்டதாரிகள் நியமனம்

சாவகச்சேரி, டிசெ. 11

நடுவண் சுகாதார அமைச்சு, நாட்டில் போசாக்குக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாக பல்கலைக்கழகங்களில் துறைசார்ந்த நெறியினை முழுமை செய்த பட்டதாரிகளை சத்துணவாளர் என்னும் பதவிக்கு நியமித்துள்ளது.

அந்தவகையில் மந்திகை ஆதார மருத்துவமனைக்கு சத்துணவாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு கடமைகளில் பொறுப்பேற்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து திங்கள் தொடக்கம் வெள்ளி வரையான நாள்களில் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை சிறப்புச் சிகிச்சைப் பிரிவு நடைபெறும் என மருத்துவமனைச் செய்திக் குறிப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.


போசாக்கு குறைவால் பாதிக்கப்பட்டு ஏற்கனவே இங்கு சிகிச்சை பெற்றுவரும் குழந்தைகள், சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், நீரிழிவு உயர் இரத்த அழுக்கம் மற்றும் இருதயம் ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், நிறை கூடிய சிறார்கள் மற்றும் பெண்கள் குறித்த பிரிவில் சிகிச்சை பெறலாம் எனவும் ஏனைய பிரதேசங்க ளைச் சேர்ந்த மக்கள் தகுதி வாய்ந்த மருத்துவரினால் வழங்கப்பட்ட சிபாரிசுக் கடிதத்தினைப் பெற்று வருமாறும், பாடசாலை மாணவர்கள் பிற்பகல் 2 மணியின் பின்னர் அதிபரின் கடிதத்துடனும் வருகை தருமாறும் அறிவிக்கப்பட்டது. (எ-9)

## ஒன்றுகூடலும் மதிப்பளிப்பும்

யாழ்ப்பாணம்,டிசெ.11

யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையின் மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வும் மதிப்பளிப்பு நிகழ்வும் இன்று திங்கட்கிழமை பி.ப 2 மணிக்கு இலங்கைவேந்தன் கலைக்கல்லூ ரியில் இடம்பெற வுள்ளது.

கோப்பாய் கால்நடை மருத்துவ அதிகாரி த.பிரபாகரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மைவிருந்தினராக இளைஞர் விவகார அமைச்சர் க.சர்வேஸ்வரன், சிறப்பு விருந்தி னராகவலயகல்விபணிப்பாளர் ந.தெய்வேந்திர ராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ)



சண்டிலிப்பாய் மணிமேகன் முன்பள்ளியின் வருடாந்த கலைநிகழ்வும் பரிசளிப்பு நிகழ்வும் ஓய்வு நிலை அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. முதன்மை விருந்தினராக சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் வ.நந்தீஸ்வரனும் சிறப்பு விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை உள மருத்துவ சேவையாளர் வாகீசனும் கலந்து கொண்டனர்.

## வலிகிழக்கு பிரதேச சபை தேர்தலில் போட்டியிடுகிறது புத்தூர்மேற்கு இளைஞர்அணி


அச்சுவேலி, டிசெ. 11

வலிகிழக்கு பிரதேச சபைக்கான தேர்தலில் புத்தூர் மேற்கு க.கதிர்காமநாதன் தலைமையிலான சுயேட்சைக்கு குழு போட்டியிடவுள்ளது. 'அதற்கமைய பின்தள்ளப்பட்ட சமூகத்தின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் இளைஞர் அணி போட்டியிடுகிறது என சுயேட்சைக் குழுவின் இடதுசாரி அரவியல் கட்சி ஒன்றின் பிரமுக ருமான க.கதிர்காமநாதன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எந்தவிதமான அரசியல்கட்சியின் சார்பும் இன்றி உழைக்கும்மக்களினதும்பின்தள்ளப்பட்டமக்களினதும் மேம்பாட்டை கருத்தில் கொண்டே எமது அணி சுயேட்சை குழுவாக போட்டியிடவுள்ளது. எனது தலைமையில் இளைஞர்அணி போட்டியிடும். வலிகிழக்கு பிரதேச சபையின் 22 வட்டாரங்களுக்குமான விகிதாசாரத்துக்கான வேட்பாளர் மற்றும் 25 வீத பெண் வேட்பாளர்க ளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். என்றார். (எ.11)



கோண்டாவில் குமரகோட்டம் சித்தி பைரவர் முத்துமாரி அம்மன் அறக்கொடை நிதிய அங்கத்தவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட குருதிக்கொடை நிகழ்வு குமரக்கோட்டம் சனசமுக நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. தெல்லிப்பழை வைத்தியசாலை குருதி வங்கி பொறுப்பதிகாரி எம். பிரதீபன் பரிசோதனை செய்வதையும் குருதி வழங்கும் கொடையாளர்களையும் படங்களில் காணலாம்.



பாசையூர் யுப்பிற்றஸ் குறூப்பின் 40ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குருதிக்கொடை நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நிகழ்வு பாசையூரில் அமைந்துள்ள திருமண மண்டபத்தில் இடம் பெற்றது. (எ-23)

## யாழில் இடம்பெற்ற பன்னாட்டு சிறப்புத் தேவையுடையோர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 11

உடுவில் பிரதேச செயலகமும், லீட்ஸ் நிறுவனமும் இணைந்து நடத்திய பன்னாட்டு சிறப்புத் தேவையுடையோர் தினநிகழ்வு சுன்னாகம் கதிரைமலை சிவன் கோவில் மண்டபத்தில் உடுவில் பிரதேச செயலர் மதுமதி வசந்தகுமார் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்றது. நிகழ்வில் போரினால் ஒரு காலை இழந்த ஏழாலை தெற்கைச் சேர்ந்த க. குமார் மற்றும் விபத்தில் ஒரு காலை இழந்த மயிலங்காட்டை சேர்ந்த பொ. உதயகுமார் ஆகியோருக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு துவிச்சக்கரவண்டி கள் வழங்கப்பட்டன.

அத்துடன் சிறப்புத் தேவையுடையோர்களுக்குரிய தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் 14 வயது பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் முதலிடம் பெற்ற மாணவி ஜெ.வினுசாவுக்கும் துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

அத்துடன் உடுவில் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட 30 கிராம சேவையாளர் பிரிவில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 90 சிறப்புத் தேவையுடையோர்களுக்கு அத்தியாவசிய பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன் பன்னாட்டு சிறப்புத் தேவையுடையோர் தின நிகழ்வு முன்னிட்டு வாழ்வகம், ஆர்க் நிறுவன மாணவர்கள் மற்றும் கிராம மட்ட சிறப்புத் தேவையுடையோர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (எ.23)



# தொடருந்து ஊழியர்களின் பணிப் புறக்கணிப்பால் பயணிகள் பெரும் சிரமம்

கரணவாய், டிசெ. 9

தொடருந்து ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

தொடருந்துச் சாரதி உதவியாளர்களை இணைத்துக் கொள்வது தொடர்பான முறைமையில் உள்ள இடர்பாடுகளை அடுத்து கடந்த சில நாள்களாக சாரதிகள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் கொழும்பிலிருந்து யாழ்ப்பாண குடாநாட்டுக்கு வருவோர் பெரும் இடர்களைச் சந்தித்து வருகின்றனர்

குறிப்பாக முன் ஆசனப்பதிவுகளை மேற்கொண்டவர்களும் இலவச தொடருந்துப் பற்றுச் சீட்டைப் பயன்படுத்தி முன் ஆசனப்பதிவுகளை மேற்கொண்ட அரச ஊழியர்களும் இந்தப் பணிப்புறக்கணிப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை யாழ்ப்பாண குடாநாட்டிலுள்ள தொடருந்து நிலையங்கள் அனைத்தும் பூட்டப்பட்டு பணியாளர்கள் இன்றி வெறிச்சோடிக் காணப்படுகின்றன. அத்துடன் சில ரயில் நிலையங்களின் அதிபர்கள் தங்கள் நிலையங்களைப் பூட்டி அதன் திறப்புக்களை பொலிஸ் நிலையங்களில் ஒப்படைத்துள்ளனர் எனவும் பெயர் குறிப்பிட விரும்பாத அதிபர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பணிப்புறக்கணிப்பு இன்றும் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-108)

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 900 | 1000 | 1200 |
| நண்டு | 400 | 400 | 500 | 500 |
| கணவாய் | 700 | 500 | 900 | 1000 |
| பாரை | 450 | 500 | 700 | 700 |
| சுறா | 400 | 700 | 1000 | – |
| சீலா | 400 | 400 | 500 | 600 |
| விளை | 400 | 400 | 450 | 800 |
| முரல் | 300 | 350 | 400 | 600 |
| கும்பிளா | 250 | 300 | 500 | 600 |
| கிளாக்கன் | 800 | – | 400 | – |
| ஓரா | 300 | 300 | 500 | 500 |
| திரளி | 200 | 200 | 200 | 300 |
| நகரை | 200 | 220 | 400 | – |
| சூடை | 100 | 120 | 160 | 250 |
| ஒட்டி | 150 | 200 | 300 | 300 |
| திருக்கை | 300 | 200 | 400 | – |
| மதனம் | 200 | 150 | 250 | – |
| கொய் | 100 | 80 | 50 | 100 |
| பாலை | 100 | 200 | 500 | 500 |
| வாளை | 100 | 200 | 400 | 300 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 140 | 100 | 120 | 80 |
| கத்தரி | 140 | 120 | 100 | 120 | 100 |
| மரவள்ளி | 60 | 50 | 50 | 50 | 40 |
| பயிற்றை | 140 | 320 | 280 | 220 | 240 |
| பாகல் | 200 | 320 | 300 | 250 | 320 |
| க.கிழங்கு | 80 | 80 | 60 | 80 | 60 |
| பெ.வெங்காயம் | 140 | 200 | 120 | 160 | 160 |
| சி.வெங்காயம் | 400 | 400 | 320 | 280 | 160 |
| பூசணி | 70 | 80 | 60 | 70 | 60 |
| தக்காளி | 100 | 120 | 120 | 100 | 100 |
| வாழைக்காய் | 80 | 60 | 70 | 80 | 80 |
| கீரை | 100 | 60 | 50 | 40 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 40 | 35 | 30 |
| ப.மிளகாய் | 350 | 300 | 400 | 500 | 600 |
| புடோல் | 100 | 120 | 120 | 400 | 100 |
| கோவா | 140 | 160 | 130 | 140 | 120 |
| வெண்டி | 120 | 160 | 160 | 120 | 100 |
| போஞ்சி | 160 | 200 | - | 240 | 180 |
| லீக்ஸ் | 250 | 240 | 240 | 140 | 240 |
| தேங்காய் | 90 | 90 | 100 | 100 | 70 |
| உ.கிழங்கு | 80 | 100 | 80 | 80 | 60 |
| தேசிக்காய் | 80 | 100 | 50 | 60 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 20 | 20 |
| கறிமிளகாய் | 300 | 300 | 300 | 300 | 360 |
| கரட் | 200 | 200 | 200 | 180 | 240 |
| முருங்கைக்காய் | 400 | 320 | - | 400 | 380 |

# பால்நிலை வன்முறைக்கு எதிரான நிகழ்வுகள்



யாழ்ப்பாணம், டிசெ.11

யாழ்ப்பாணம் சமூக செயற்பாட்டு மையத்தால் 'பெண்களுக்கான பாதுகாப்பான சூழலை உருவாக்குவோம்' என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்டுவரும் பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாட்டின் இறுதிநாள் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

முன்னதாக 16 நாள்க ளின்போது பெண்களுக்கான பாதுகாப்பான சூழலை ஏற்படுத்துவதற்கான கோரிக்கைகளை முன்வைத்து அமைதி ஊர்வலமும் மண்டப நிகழ்வும் இடம்பெற்றன.

சங்கிலியன் பூங்காவில் இருந்து ஆரம்பித்த அமைதி ஊர்வலம் நாவலர் கலாசார மண்டபத்தினை வந்தடைந்தது. தொடர்ந்து ஊர்வலத்தில் பங்கெடுத்த மனிதநேய பணியாளர்கள், கிராமமட்ட மக்கள், தன்னார்வத் தொண்டர்கள், மாணவர்கள் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரச தலைவரிடம் சமர்ப்பிப்பதற்கான கோரிக்கை மனுவானது யாழ்ப்பாண மாவட்டச் செயலர் ந.வேதநாயகனிடத்தில் கையளிக்கப்பட்டது. தொடர்ந்து இடம்பெற்ற மண்டப நிகழ்வில், தொனிப்பொருளுக்கமைய பெண்களின் பாதுகாப்பான சூழலை வீடு, வேலைத்தளங்கள் மற்றும் பொது இடங்களில் உருவாக்குவது தொடர்பாக பல்வேறுபட்ட உரைகள் இடம்பெற்றன.

நிகழ்வுகளில் முதன்மை விருந்தினராக பெண்கள் முகாமைத்துவத்தின் நிறுவுனர் மற்றும் தலைவருமாகிய கலாநிதி சுலோச்சனா சிகேராவும் சிறப்பு விருந்தினர்களாக கனடா உயர்ஸ்தானிகத்தின் அரசியல் அதிகாரி இந்திராணி ஜெயவர்த்தன மற்றும் மகளிர் விவகார குழுவின் யாழ்ப்பாணத்துக்கான தலைவியும் மற்றும் லயன்ஸ் கழகத்தின் வலய தலைவியுமான இராகினி இராமலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (எ)



# பரிசில் நாள் நிகழ்வு

தென்மராட்சி, டிசெ.11

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தின் பரிசில் நாள் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரியின் மகாலிங்கம் அரங்கில் நடைபெற்றது.

அதிபர் உதயகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகா ரத்துறை அமைச்சர் க.சர்வேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவ) நா.கந்ததாசனும் மதிப்புறு விருந்தினர்களாக மத்திய பொறியியல் உசாத்திணைக்கள ஓய்வு நிலைப் பொறியியலாளர் பி.கணேசலிங்கம் மற்றும் பழைய மாணவி காந்தரூபி கணேசலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-9)

## பராமரிப்பு இன்றி அந்தரித்த முதியவர் முதியோர் அரச இல்லத்தில்

யாழ்ப்பாணம்,டிசெ.11

பண்டத்தரிப்பில் எவரது பராமரிப்பும் இன்றி வீதியில் அந்தரித்த முதியவர் ஒருவரை ஊர்மக்கள் மீட்டு கைதடி அரச முதியோர் இல்லத்தில் சேர்ப்பித்தனர்.

உறவினர்களால் கைவிடப்பட்ட நிலையில் பண்டத்தரிப்பு சில்லாலை வீதியில் அந்தரித்த அதே இடத்தை சேர்ந்த செல்லையா கணபதிப்பிள்ளை (வயது-81) என்ற முதியவரே இவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமை முதியோர் இல்லத்தில் இணைக்கப்பட்டார். குறித்த முதியவரின் மனைவி இறந்து விட்டார். பிள்ளைகள் வெளிநாட்டில் தங்கியிருந்த நிலையில் அவர் உறவி னர்கனினால் பராமரிக்கப்பட்டு வந்தார்.

முதியவர் இயலாத நிலையில் இருந்ததால் உறவினர்களால் கைவிடப்பட்டார். ஊர்மக்களால் அரச முதியோர் இல்லத்தில் சேர்பிக்கப்பட்டார்.

குறித்த முதியவரின் தகவல் அறிய உடனடியாக உறவினர்களை முதியோர் இல்லத்துடன் தொடர்பு கொள்ளுமாறு இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் கேட்டுள்ளார். (எ-17)




**இது புதுசு**

ஆண்களுக்கான புதிய வகை ரீ-சேர்ட் வகைகள் அறிமுகமாகியுள்ளன. இவை 750 ரூபாவிலிருந்து 1000 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.




## யாழ்ப்பாண பிரதேசத்துக்கு கலாசார மத்திய நிலையம்

யாழ்ப்பாணம், டிசெ.11

உள்ளக அலுவல்கள் வடக்கு, மேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாசார அமைச்சால் யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்துக்கு கலாசார மத்திய நிலையம் அமைக்கப்படவுள்ளது எனதெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

கலாசார அமைச்சால் பிரதேச செயலகங்களுக்குஎனதனித்தனி கலாசார மத்திய நிலையம் அமைக்கும் திட்டத்தீன் கீழ் யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்துக்கான கலா சார மத்திய நிலையம், யாழ்ப்பா ணப் பிரதேசசெயலகம்முன்னர்அமைந்திருந்தவளாகத்தில்அமைக்கப்படவுள்ளது எனவும்அதற்கானபணிகள் 2018ஆம்ஆண்டுஆரம்பிக்கபடும் எனவும் யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசார உத்தியோகஸ்தர் தமிழ்மாறன் தெரிவித்தார். (எ-23)

## நாவலர் குருபூசை நிகழ்வு



யாழ்ப்பாணம்.டிசெ.11

கோப்பாய் ஆசிரிய கலாசாலை இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை நாவலர் குருபூசை நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன், விரிவுரையாளர் கு.பால ஷண்முகன், இந்துசமய சிறப்புக் கற்கை நெறி ஆசிரிய பயிலுநர் அமுதராணீ துரைசாமி ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றினர். நிகழ்வில் கலாசாலையின் முகப்பில் உள்ள நாவலர் திருவுருவச்சிலைக்கு விரிவுரையாளர்களும் ஆசிரிய பயிலுநர்களும் மலர்மாலை சூடி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (எ)

## கல்வி அபிவிருத்தி நிதி வழங்கும் நிகழ்வு

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் ஜீ.சி.ஈ சாதாரண வகுப்பில் கற்கும் 24 மாணவர்களுக்கு மாதாந்த கல்வி அபிவிருத்தி நிதி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் எற்பாட்டில், கழகத்தின் லண்டன் கிளையால் பொருளாதார நிலையில் பின் தங்கிய குடும்பங்களைச்சேர்ந்த 24 மாணவர்களுக்கு இந்த நிதி வழங்கப்படவுள்ளதென கழகப் பிரதிநிதி க. அரசநாதன் தெரிவித்தார். நிதி வழங்கும் நிகழ்வில் லண்டன் கிளை பிரதிநிதி கலந்து கொள்வார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## வடக்கு கூட்டுறவு திணைக்களத்தால் புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது

யாழ்ப்பாணம், டிசெ.11

மாகாண, உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்களில் களமிறங்கும் கூட்டுறவுத்துறை சார்ந்த வேட்பாளர்களுக்கு வடக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்களத்தால் கடந்த 2004ஆம் ஆண்டு, மார்ச், 12ஆம் திகதி விடுக்கப்பட்ட சுற்றறிக்கையில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்தச் சுற்றறிக்கையில் உள்ள சில பிரிவுகள் நீக்கப்பட்டும் புதிய பிரிவுகள் சேர்க்கப்பட்டும் புதிய அறிக்கை ஒன்று வடக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்களத்தால் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

2004ஆம் ஆண்டு, மார்ச், 12ஆம் திகதி விடுக்கப்பட்ட சுற்றறிக்கையில் 2ஆவது பந்தியின் 2.3ஆவது பிரிவில் வேட்புமனுத் தாக்கல் செய்த பின் கூட்டுறவு ஊழியர் ஒருவர் தனது தேர்தல் நடவடிக்கைக்கு அனுகூலமான எந்தவொரு சங்க நடவடிக்கையிலும் ஈடுபடாதிருத்தல் வேண்டும் எனவும், 2.4ஆவது பிரிவில் வேட்பு மனுத் தாக்கல் செய்த பின் தாமாகவே சங்க நடவடிக்கைகளில் ஈடுபடாதிருக்க விரும்பின், இயக்குனர் சபையின் தீர்மானத்தூடாக அவ்வாறு செயற்பட முடியும் என்றும் பிரசுரிக்கப்பட்டிருந்தது. தற்போது அது மாற்றியமைக்கப்பட்டு 2ஆவது பந்தியின் 2.3ஆவது பிரிவில் வேட்புமனுத் தாக்கல் செய்த பின் கூட்டுறவுச் சங்க நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடாதிருத்தல் வேண்டும் எனவும், 2.4ஆவது பிரிவில் வேட்பு மனுத் தாக்கல் செய்த பின் தேர்தல் தேர்தலில் வெற்றிபெறும் சந்தப்பத்தில் மாத்திரம் குறித்த உறுப்பினரது பதவி தாமாகவே வெறிதாகியதாகக் கருதப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது. அதே போன்று 2ஆவது பந்தியில் பிரிவு 2.5 என்று புதிதான நிபந்தனை சேர்க்கப்பட்டுள்ளது. அதில் தேர்தல் முடிவுற்ற பின்னர் குறித்த சட்டவாக்க அலகுக்குத் தேர்வு செய்யப்படாத இயக்குனர் சபையின் அனுமதியைப் பெற்று மீளத் தனது சேவையைத் தொடரமுடியும் என்று கூற ப்பட்டுள்ளது.

அதே சுற்றறிக்கையில் 3ஆவது பந்தியின் 3.4அவது பிரிவில் தேர்தல் முடிவுற்ற பின்னர் வேட்புமனு தாக்கல் செய்த அலுவலகர் அல்லது பணியாளர் இயக்குனர் சபையின் அனுமதி பெற்று மீளத் தனது சேவைத் தொடர முடியும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது அது மாற்றியமமைக்கப்பட்டு, குறித்த சட்டவாக்க அலகுக்குத் தேர்வு செய்யப்படும் பணியாளர் ஒருவர் இயக்குனர் சபை அனுமதியுடன் கொடுப்பனவற்ற விடுமுறையில் விடுவிக்கப்படல் வேண்டும் எனவும் குறித்த பதவிக்கான கடமைக்கென பதிலேற்பாடு செய்யப்பட வேண்டும் என்பதுடன் குறித்த ஆளணி நிரந்தர நியமனமொன்றால் நிரப்பப்படலாகாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 4ஆவது பந்தியில் தெரிவிக்கப்பட்ட, தேர்தல் முடிவுற்ற பின்னர் வேட்புமனுத் தாக்கல் செய்த அலுவலகர் அல்லது பணியாளர் இயக்குனர் சபையின் அனுமதி பெற்று மீளத் தனது சேவையைத் தொடரமுடியும் என்பது தற்போது நீக்கப்பட்டுள்ளது. மாற்றத்துடன் கூடிய இந்தச் சுற்றறிக்கை வடக்கு மாகாணத்தின் அனைத்து கூட்டுறவுச் சங்களின் தலைவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. (எ-21)

## ஆலயங்களில் முடிவழிப்பதற்கு கட்டணமாக ரூ.500 நிர்ணயம்

யாழ்ப்பாணம் டிசெ 10

ஆலயங்களில் நேர்த்திக்கடனுக்கு முடிவழிப்பதற்கு யாழ்ப்பாண மாவட்டசிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத்தால் கட்டணமாக 500 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என சங்கத்தின் தலைவர் ஆ.உதய சங்கர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்கட்டிருப்பதாவது:

எமது வாடிக்கையாளர்களின் நலன் கருதி நேர்த்திக்கடன்களை நிறை வேற்றும் முகமாகச் சிறப்பாக ஆலயங்களில் ஒன்றியத்தின் அனுமதியுடன் அமைக்கப்பட்டுள்ள சிகை அலங்கரிப்பு நிலையங்களில் முடிவழிப்பதற்கு கட்ட ணம் ஐந்நூறு ரூபாவாக நிர்ண யித்துள்ளோம்.

எனவே இதற்கு மேல திகமாகக் கட்டணம் அறவிடுவதோ குறைவாக அறவிடுவதோ குற்றமாகும் என்பதனை அறியத்தருகின்றோம்.

அண்மைக்காலமாக ஆலயங்களில அமைக்கப்பட்டுள்ள தொழில் நிலையங்களில் கட்டணம் அதிகமாக அறவிடப்படுகின்றன என எம்மிடம் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக முறைப்பாடுகள் இருப்பின் 0776430671 என்ற அலைபேசி இலக்கத்துக்கு வாடிக்கை யாளர்கள் எமக்கு அறியத்தரவும் என்றுள்ளது. (எ)

# பெண்களுக்கான விழிப்புணர்வுகள் இன்று காலத்தின் கட்டாயம்

### போருக்கு முன்னர் அது மிகமிக அரிது என்றார் ஐக்கியநாடுகள் பிராந்திய அலுவலகத்தின் முகாமைத்துவ நிபுணர்

முல்லைத்தீவு, டிசெ.11

"பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தூண்டுகின்ற சம்பவங்களுக்கு எதிரான சமூகச் செயற்பாடுகள் 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் பெரியளவில் நடைபெறவில்லை. ஏனெனில் அன்று வன்முறைகள் மிகமிக அரிதாகவே இடம்பெற்றிருந்தன. இன்று இந்த நிகழ்வுகள் காலத்தின் கட்டாயத் தேவையாக உள்ளது". இவ்வாறு மேற்கு ஆபிரிக்கா நாடுகளின் ஐக்கியநாடுகள் பிராந்திய அலுவலகத்தின் முகாமைத்துவ நிபுணர் வி. நவநீதன் தெரிவித்தார்.

உலக மனிதஉரிமை நாளான நேற்று முன்தினம் முல்லைத்தீவு, கரைதுறைப் பற்றுப் பிரதேச செயலக மண்டபத்தில் யாழ்ப்பாணம் சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற 'பெண்களுக்கான பாதுகாப்பான சூழலை உருவாக்குவோம்' எனும் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில் கூட இலங்கையின் வறுமையான மாவட்டங்களாக கேகாலையும், மொனராகலையும் இருந்தன. இன்று போர் முடிந்து 8 ஆண்டுகளுக்குப் பிறகு இலங்கையின் வறுமையான மாவட்டங்களாக கிளிநொச்சியும் முல்லைத்தீவும் காணப்படுகின்றன. போர் உக்கிரமாக நடைபெற்ற காலத்தில் கூட வறுமை என்பது இங்கு இல்லை, பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இல்லை. அவை ஏன் இன்று எழுகின்றன என்றால் அதற்கு மிகமுக்கியமாக மூன்று காரணங்கள் உள்ளன. முதலாவது குடும்பத்தில் இருக்கக்கூடிய வறுமை விரக்தி, வேலையின்மை, இரண்டாவது கல்வியறிவின்மை விழிப்புணர்வின்மை, மூன்றாது அதிகரித்த மதுப்பாவனை இந்த மூன்றும் தான் இவ்வாறான நிலைக்கு இட்டுச்செல்கின்றது. இலங்கையில் கல்வியில் கடைசியாக உள்ள மாகாணங்களாக வடக்கும் கிழக்கும் காணப்படுகின்றன. போருக்கு முன்னர் அப்படி இருக்கவில்லை எங்களிடம் போருக்கு முன்னர் காப்பற் வீதிகள் இருக்கவில்லை, நிறைந்த கல்வி இருந்தது. தொலைத்தொடர்பு வலையமைப்புக்கள் இருக்கவில்லை, ஆனால் வறுமை இல்லாமல் இருந்தோம். பொருளாதாரத் தடை இருந்தபோதும் நாங்கள் வறுமை இல்லாமல் இருந்தோம். இன்று நிலமை தலைகீழாக மாறிவிட்டது. எங்களிடம் சகல வசதிகளும் இருக்கின்றன ஆனால் எங்களால் வளரமுடியவில்லை. போருக்கு முன்னர் மிகக்குறைந்த வளங்களுடன் நாங்கள் ஒரு நிறைவான வாழ்வை வாழ்ந்தோம். எங்களுடைய பெண்கள் நூறுவீத சுதந்திரத்துடன் வாழ்ந்தார்கள். இதனை அனுபவ ரீதியாகச் சொல்கிறேன். உலகத்தில் அதிக வளங்களையும் நல்ல காலநிலையையும் கொண்ட நாடுகள் ஆசிய நாடுகள். ஐரோப்பியநாடுகள், அமெரிக்க நாடுகளைப் பார்த்தால் அங்கு வளங்கள் குறைவாகவே இருக்கின்றன. காலநிலையிலும் மாற்றம் இருக்கின்றது. அப்படியிருந்தும் அந்த நாடுகள் வளர்ந்த நாடுகளாகக் காணப்படுகின்றன. ஆனால் நாங்கள் வளத்தை வைத்துக்கொண்டு வளராமல் இருக்கின்றோம். ஏன் என்றால் எங்களிடம் உள்ள மனநிலையில் வளர முடியும் என்ற எண்ணம், முயற்சி, சிந்தனை என்பவை தட்டுப்பாடாக இருக்கின்றன.

மக்களின் மனதில் ஒரு மாற்றம் வர வேண்டும். மாற்றம் ஒவ்வொரு தனிமனிதனுடைய மனதிலும் இருந்து தொடங்க வேண்டும். அந்த எண்ணத்தின் மாற்றம் தான் பெண்களுடைய விடுதலையின் ஒரு தொடக்கமாக அமையும்-என்றார். (எ-21-ரி3)

## வன்முறைகளை மூடி மறைக்காது பெண்கள் சட்டத்தை நாடவேண்டும்

### அப்போது தான் நிவாரணத்தைப் பெறமுடியும் என்றார் சட்டத்தரணி சுபா

முல்லைத்தீவு. டிசெ.11

"பெண்களுக்கு எதிராக நடக்கும் வன்முறைகளை மூடி மறைக்காது. அவற்றை உலகுக்குத் தெரியப்படுத்துவதன் மூலமே அதற்குரிய நிவாரணத்தைப் பெறமுடியும்" என்று முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சட்டத்தரணி சுபா விதுரன் தெரிவித்தார்.

பன்னாட்டு மனித உரிமைகள் நாளான நேற்றுமுன்தினம் முல்லைத்தீவில் இடம்பெற்ற 'பெண்களுக்கான பாதுகாப்பான சூழலை உருவாக்குவோம்' என்ற தொனிப்பொருளிலான கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்றுக் காலை நிகழ்வு இடம்பெற்றது. யாழ்ப்பாணம் சமூக செயற்பாட்டு மைய இணைப்பாளர் ந.சுகிர்தராஜ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் மேற்கு ஆபிரிக்கா நாடுகளின் ஐக்கியநாடுகள் பிராந்திய அலுவலகத்தின் முகாமைத்துவ நிபுணர் வி. நவநீதன், வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், சட்டத்தரணி சுபா விதுரன் ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகரித்துச் செல்லும் கள்ளச் சாராய உற்பத்தியினால் குடும்பங்களில் வன்முறைகள் அதிகரித்துள்ளதுடன் பெண்கள் மீதான வன்முறைகளும் அதிகரித்துள்ளன. இதனைக் கட்டுப்படுத்த ஒவ்வொரு குடும்பமும் தம்மைப் பாதுகாப்பதோடு பக்கத்தில் உள்ள குடும்பங்களையும் பாதுகாக்கவேண்டும்.



அருகில் ஒரு வீட்டில் இவ்வாறான பிரச்சினை நடந்தால் நாங்கள் அதனைப் பார்த்துக்கொண்டிருக்காமல் 119இற்கு அழைப்பை ஏற்படுத்தி விடயத்தைத் தெரிவிக்க வேண்டும். நாங்கள் எங்கள் வீட்டில் இருந்து கொண்டு பக்கத்து வீட்டுக் குடும்பத்தை எங்களால் பாதுகாக்கமுடியும். பெண்களுக்குக் கிடைத்துள்ள உரிமைகளைச் சரிவரப் பயன்படுத்தவேண்டும். அவ்வாறு பயன்படுத்துவதன் மூலம் தான் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிக்கமுடியும்.

எனவே சட்டம் பெண்களுக்கு உதவி செய்யவில்லை, நிவாரணம் செய்யவில்லை என்று கூறுவதை நிறுத்தி பெண்கள் எல்லோரும் வன்முறைக்கு எதிராகச் சட்டத்தை நாட வேண்டும். சட்டத்தில் நிவார ணத்தைப் பெறவேண்டும். என்றார்

நிகழ்வில் இலங்கையில் 90வீதமான பெண்கள் பொதுப்போக்குவரத்தின் போது பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்படுத்தப்படுகின்றனர் என யாழ்ப்பாணம் சமூக செயற்பாட்டு மையத்தால் புள்ளிவிவரம் ஒன்றும் வெளியிடப்பட்டது.

(எ-21-ரி3)

## வடக்கில்

# பட்டதாரிகளிடத்திலும் பாட ரீதியான ஆசிரியர்கள் இல்லை

### வட மாகாண கல்வி அமைச்சர் தெரிவிப்பு

சாவகச்சேரி, டிசெ. 11

வடக்கின் கல்வி வீழ்ச்சிக்கு ஆசிரியர் பற்றாக்குறையும் ஒரு காரணமாகும். இங்குள்ள பெரும்பாலான பாடசாலைகளில் பாட ரீதியான ஆசிரியர்கள் இல்லை. பட்டதாரி ஆசிரியர்களிடமும் போதிய தகைமை இல்லை.

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் முன்னைய அளவை விட கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கு மாணவர்களை அதிகரிக்குமாறு கொழும்பு கல்வி அமைச்சரைக் கோரியுள்ளோம்.

இவ்வாறு மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற பரிசில் நாள் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட வட மாகாண கல்விப் பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் க. சர்வேஸ்வரன் உரையாற்றினார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:

கல்வி மேம்பாட்டில் மேல்மாகாணத்துடன் போட்டியாக இரண்டாம் இடத்தில் இருந்து வந்த வடமாகாண கல்வி நிலை திடீரென கடைசி இடத்துக்கு தள்ளப்பட்டிருப்பதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன.

எமது மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்கு ஒருவகையில் புலம்பெயர் நாடுகளுக்கு ஒரு மில்லியன் மக்களின் வெளியேற்றமும் போர் வேளையில் 18 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட 20 லட்சத்துக்கும் அதிகமான சாவுகளும் காரணமாகின்றன. 198்ஆம் ஆண்டு நடத்தப்பட்ட குடிசன மதிப்பீட்டில் வடக்கில் 8.75 லட்சமாகக் காணப்பட்ட சனத்தொகை தற்போது 14 லட்சமாக இருக்க வேண்டும் ஆனால் 6 லட்சத்துக்கும் குறைவான மக்களே உள்ளனர்.

ஆயிரம் பிள்ளைகளுடன் காணப்பட்ட பல பாடசாலைகள் மிகக் குறைந்த மாணவர்களுடன் இப்போது காணப்படுகின்றன. மாகாணத்தில் உள்ள ஆயிரத்து 10 பாடசாலைகளில் 50க்கு குறைந்த மாணவர்களும் 20க்கு குறைந்த மாணவர்களுடனும் பாடசாலைகள் காணப்படுகின்றன. பாடசாலையில் ஒரு பிள்ளை படித்தாலும் பாடசாலை நடத்த வேண்டிய கட்டாயம் உள்ளது. நகர்ப்புற பாடசாலைகளை நோக்கி மாணவர்கள் செல்வதால் கிராமப்புற பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைகின்றது என குற்றம் சாட்டப்பட்டு வருகிறது.

தமிழ் மாணவர்களின் கல்வி உயர்ச்சியைக் கட்டுப்படுத்த பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் திட்டம் அறிமுகப்படுத்திய வேளையில் எமது மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற்றிருந்தனர் பல்வேறு தடைகளைப் போட்ட போதிலும் அவற்றைத் தகர்த்தெறியும் வகையில் கல்வியில் பெருமளவு முன்னேற்றம் கண்டனர்.

முன்னைய காலத்தில் தமிழ் மருத்துவர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள் போன்றோர் வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களுக்கு வேலைக்கு அமர்த்தப்பட்டனர். தற்போது அந்த நிலைமை மாறி தென் பகுதியைச்சேர்ந்த பலர் வடமாகாண அரச திணைக்களங்களில் கடமைக்காக நியமிக்கப்பட்டு வருகின்றனர். பாடசாலைகளின் வளங்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம்மிடம் உள்ளது. பாடசாலைகளில் வளப் பற்றாக்குறையுடன் ஆசிரியர் பற்றாக்குறையும் காணப்படுகிறது. சில பாடசாலைகளில் மேலதிகமாக ஆசிரியர்கள் காணப்படுகின்ற போதிலும் பல பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகிறது. 2 ஆயிரம் ஆசிரியர்கள் தேவையாக உள்ள நிலையில் எமது மாணவர்கள் உரிய துறைகளைத் தேர்ந்தெடுத்து கற்கப்பின்னடிப்பதால் பல பதவிகளுக்கு தென்னி லங்கையிலிருந்து அதிகாரிகளைப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது - என்றார்.

(எ-9)

## திருடியது மட்டுமல்லாமல் உணவுண்டுவிட்டுத் தப்பித்த திருடர்கள்

வவுனியா, டிசெ.11

தென்னிந்தியச் சினிமாவில் வரும் நகைச்சுவை நடிகர் வடிவேலு பாணியில் வவுனியாவில் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணியளவில் வவுனியா குருமன்காடு குரப்பன்காட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. அந்தப் பகுதியில் இரண்டு வீடுகளில் அலைபேசி, பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

வீட்டில் நுழைந்த திருடர்கள் உரிமையாளர்கள் அங்கு இருக்கும்போதே யாருக்கும் தெரியாமல் கைப்பையை எடுத்து அதிலிருந்த பணம், மற்றும் அலைபேசிகளைத் திருடியுள்ளனர். திருடியது மட்டுமன்றி வீட்டின் சமயலறைக்குச் சென்று இரவு உணவுக்காக சமைத்து வைத்திருந்த றொட்டியையும் கறியுடன் சேர்த்து சாப்பிட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

பணம் மற்றும் அலைபேசியைக் காணவில்லை என்று தேடிய வீட்டின் உரிமையாளர் தன்னைச் சுதாரித்துக் கொண்டு பொலிஸ் அவசர இலக்கத்துக்குத் தொடர்பு கொண்டு சம்பவத்தை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அந்தப் பக்கத்திலுள்ள மற்றுமொரு வீட்டிலும் அலைபேசி திருடப்பட்டுள்ளது என பொலிஸாருக்கு தெரிவிக்கப் பட்டது.

நேற்றுமுன்தினம் காலை சம்பவ இடத்துக்கு மோப்ப நாய்களுடன் பொலிஸார் வந்தனர். எனினும் திருடர்கள் பிடிபடவில்லை.

இந்தச் சம்பவம் தென்னிந்தியச் சினி மாவில் வருவது போன்று உள்ளது என பலரும் பேசிக் கொண்டனர். வீட்டில் ஆள்கள் இருக்கும் போதே இவ்வாறு திருடர்கள் உள்நுழைந்து ஆறஅமர தமது வேலைகளை முடித்துச் சென்றது அனைவரிடத்திலும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் பாதுகாப்புக்கும் கேள்வி எழுப்பப்பட்டது.

(எ-21)



# ஆள்கள் இல்லாத வீடுகளின் சுற்றுப்புறச் சூழல்களிலேயே டெங்கு நுளம்புப் பெருக்கம்

*14 நாள்களுக்குள் துப்புரவு செய்யாது விடின் சட்டம் பாயும் என்கின்றனர் வவுனியா சுகாதாரத் தரப்பினர்*

வவுனியா, டிசெ.11

வவுனியாவில் ஆள்கள் இல்லாது தனித்து விடப்பட்ட வீடுகள், மற்றும் சுற்றுப்புறச் சூழல்களில் அதிகளவில் டெங்கு நுளம்புகள் இனங்காணப்பட்டன. அவற்றுக்கு உரித்துடையவர்கள் உடனடியாக வருகை தந்து துப்புரவுப் பணிகளை முன்னெடுக்க வேண்டும் இல்லை எனில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வவுனியா வடக்கு சுகாதார மருத்துவ அதிகாரிப் பணிமனையினர் தெரிவித்தனர்.

நாட்டின் பல பகுதிகளிலும் பெய்து முடிந்த கனமழையை அடுத்து வவுனியாவில் டெங்கு நுளம்புகளின் உற்பத்தியை ஒழிப்பதற்கு வவுனியா வடக்கு சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. அதன் ஒரு கட்டமாக வவுனியா நெடுங்கேணிப் பகுதியில் நகரத்தை அண்டிய பகுதிகள், வியாபார நிலையங்கள், அரச அலுவலகங்கள், வீடுகள் என்பன நேற்றுமுன்தினம் சோதனையிடப்பட்டன.

இதன்போது நெடுங்கேணி நகரப்பகுதியிலுள்ள பல இடங்களில் ஆள்கள் இல்லாத வீடுகளில் குறிப்பாக வெளிமாவட்டங்களில் தங்கியுள்ளவர்களின் இருப்பிடங்கள், காணிகளிலேயே டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் இனங்காணப்பட்டன. குறித்த பகுதிகளைத் துப்புரவு செய்ய 14நாள்கள் கால அவகாசம் வழங்கப் பட்டது.

இந்தச் சோதனை நடவடிக்கையில் சுகாதாரப்பரிசோதகர்கள், பொலிஸார், பொதுமக்கள், பிரதேச செயலாளர், வவுனியா வடக்குப் பிரதேச செயலர், மேற்பார்வைப் பரிசோதகர்கள், கிராம அலுவலர், சமுர்த்தி அலுவலகர் அகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

(எ-21)

## காணி இணக்கசபை ஊழியர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாண மாவட்டத்தில் காணி சம்பந்தமான இணக்க சபையாளர்களுக்கான கொடுப்பனவு யாழ்ப்பாண செயலகம் ஊடாக வழங்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் காணி சம்மந்தமான சிறப்பு இணக்கசபையாளர்களாக 27 பேர் பணியாற்றுகின்றனர். இவர்களுக்கான மூன்று மாதக் கொடுப்பனவு வழங்கியதை தொடர்ந்து மாதாந்தம் தவிசாளர் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் காணி சம்மந்தமான பிரச்சினையுள்ளோர் யாழ்ப்பாணம் கொட்டடி நமச்சிவாயத்தில் இயங்கும் காணி இணக்க சபை நிலையத்தில் சனிக்கிழமையில் தொடர்பு கொண்டு பிணக்குகளை தீர்க்கலாம் என இணக்க ஆணைக்குழு உயரதிகாரி தெரிவித்தார். (எ-50)

## நீதிபதி சிறிநிதி நந்தசேகரனுக்கு மதிப்பளிப்பு






யாழ்ப்பாணம், டிசெ.11

சாவகச்சேரி மாவட்ட நீதிபதியாக இருந்து எதிர்வரும் ஜனவரி 2ஆம் திகதி முதல் வவுனியா மாவட்ட நீதிபதியாக மாற்றலாகிச் செல்லும் திருமதி சிறிநிதி நந்தசேகரனுக்கு யாழ்ப்பாணம் மேல் நீதி மன்றில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதிப்பளிக்கப்பட்டது.

பெரும் நெருக்கடியான காலப் பகுதியிலும் அதன் பின்னரும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நியாயாதிக்க வலயத்திலுள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் நீதிவானாக வும் மாவட்ட நீதிபதியாகவும் சேவையாற்றியமைப் பாராட்டியே அவருக்கு நேற்று மதிப்பளிக்கப்பட்டது.

மேல் நீதிமன்றிலிருந்து இடமாற்றம் பெற்றுச் செல்வோருக்கான மதிப்பளிப்பும், வருடாந்த விருந்துபசார விழாவின் போதே அவர் மதிப்பளிக்கப்பட்டார். யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன், யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் ஆகியோரின் தலைமையில் மேல் நீதிமன்றங்களின் உத்தியோகத்தர்களும் இதில் கலந்து கொண்டனர். நீதிபதி திருமதி சிறிநிதி நந்தசேகரனுக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப் பதிவாளர் திருமதி மீரா வடிவேற்கரசன் மலர் மாலை, பொன்னாடை அணிவித்து மதிப்பளித்தார். யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன், நீதிபதி சிறிநிதி நந்தசேகரனின் சேவையைப் பாராட்டி மதிப்புறுச் சின்னமும் மேல் நீதிமன்ற நீதிபதி இ. கண்ணன் வாழ்த் துப்பாவும் வழங்கி வைத்தனர்.

(21,37)



# பணத்தை வைத்து நஞ்சைக் குடிப்பதா?

மட்டக்களப்பு, டிசெ. 11

உரமானியத்துக்கு அரசு பணம் வழங்கியும், உரம் இல்லை. அரசு வழங்கிய பணத்துக்கு நஞ்சை வாங்கிக் குடிப்பதா? இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கொக்கட்டிச்சோலை கமநல கேந்திர நிலையத்தின் முன்பாக நேற்றுமுன்தினம் கவன வீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தின்போதே விவசாயிகள் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்கள்.

அரசால் உரத்துக்கான மானியத்தொகை வழங்கப்பட்டுள்ளபோதிலும், உரத்தை எந்த வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ள முடியாத நிலையேற்பட்டிருக்கின்றது. உரிய காலத்துக்குள் பயிர்களுக்கு உரம் இடமுடியாதுள்ளதாகவும், இதன் காரணமாகப் பயிர்கள் வளர்ச்சி குன்றி, அறுவடையின்போது சிறந்த விளைச்சலைப் பெறமுடியாத நிலையேற்படும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

எனவே உரத்தைக் கொள்வனவு செய்வதற்கு உரிய வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5)

வளிமண்டலவியல் திணைக்களத்துக்கு

# நிரந்தர தமிழ் உத்தியோகத்தர்களை நியமிக்க அமைச்சு நடவடிக்கை

வளிமண்டலவியல் திணைக்களத்துக்கு நிரந்தரத் தமிழ் மொழி பெயர்ப்பாளர்களை உள்வாங்குவதற்கு இடர் முகாமைத்துவ அமைச்சு நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மொழி பெயர்ப்பாளர்களை வளிமண்டலவியல் திணைக்களத்துக்கென நிரந்தரமாக உள்வாங்குவதற்காகப் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுடன் பேச்சு நடத்தியுள்ளோம்.

தற்போது தமிழ் மொழி மூலம் அறிக்கைகளை வெளியிட ஆரம்பித்துள்ளோம். நிரந்தர ஊழியர்களை உள்வாங்கும் வரையில் இடர் முகாமைத்துவ அமைச்சுக்கும் வளிமண்டலவியல் திணைக்களத்துக்கும் தற்காலிகமாகத் தமிழ்மொழி பெயர்ப்பாளர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளார்கள். தற்காலிக ஊழியர்களை உள்வாங்குவதற்கான வேலைத்திட்டம் இன்னும் இரண்டு வாரங்களில் முன்னெடுக்கப்படும் - என்றார். (5.31)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமை புரியும் சின்னராசா விக்கினேஸ்வரன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி செல்லம்மா சின்னராசா**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.



## 80ஆவது பிறந்தநாள் நினைவு தினம்

11.12.2017

அமரர் திருமதி

**சரஸ்வதி கனகேஸ்வரன்**

(இளைப்பாறிய ஆசிரியை - தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி)

7ஆம் கட்டை, கே.கே.எஸ்.றோட்,மல்லாகம்.



அகவை எண்பதை நினைவு கூருகிறோம்

குடும்பத்தினர், உற்றார், உறவினர்.

கு.விசுவலிங்கம், சட்டத்தரணி, மல்லாகம்

## 2ஆம் ஆண்டுதனில்



திதி: 11.12.2017

**செல்வி பிரியங்கா (லக்கி) நந்தகோபால்**



தோற்றம் 04.02.1992 மறைவு 04.12.2015

பாதி வழியில் நீ எம்மை
பரிதவிக்க விட்டுச் சென்று
ஆண்டுகள் இரண்டு ஆனதம்மா
தனிமையில் நாம் உம்மை நினைத்து
வாய்விட்டுப் புலம்புவது
ரணமாய்க் கொல்கின்றது
ஆறாத உன் ஞாபகங்கள்
மீண்டும் மனதில் உறுண்டோட
மீள முடியாது நலிக்கின்றோம்
கணப்பொழுதில் கண்மூட
நம்பமுடியவில்லை நீ இல்லாத
வாழ்க்கையை
நெஞ்சில் உன் நினைவுகள் என்றும்
நீங்காது உயிர் வாழும்

உன் நினைவில்
குடும்பத்தினர்.
023 225 0238

தாழ்வுபாடு வீதி, எமில்நகர், மன்னார்.

## 19ஆம் ஆண்டு நினைவஞ்சலிகள்



அமரர் பொன்னுத்துரை நித்தியானந்தன்
அன்னை மடியில் :- 30.03.1940
ஆண்டவன் அடியில் :- 03.08.1998
திதி:வளர்பிறை தசமி

முதலாமாண்டு



நித்தியானந்தன் முகுந்தன்
அன்னை மடியில் :- 07.12.1970
ஆண்டவன் அடியில் :- 10.10.2016
திதி:வளர்பிறை நவமி

முதலாமாண்டு



அமரர்
திருமதி நித்தியானந்தன் லக்கினேஸ்வரி
அன்னை மடியில் :- 25.10.1945
இறைவன் பாதத்தில் :- 22.12.2016
திதி:தேய்பிறை நவமி

கணம்தோறும் மாறும் உலகில் கண்காணாத தூரம் நீங்கள் சென்றாலும்
கனக்கத்தான் செய்கிறது எம்மனம் கண்களும் பனிக்கின்றன - நீங்கள்
இறைபதத்தில் இணைந்திருந்து இளைப்பாறுங்கள்

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



**சின்னத்தம்பி சிவஞானசுந்தரம்**

திதி :- (11.12.2017)

தோற்றம் 25.09.1928

மறைவு 07.12.2012

இவ்வுலகை விட்டு இறைவனடி சேர்ந்து விட்டீர்
ஆண்டைந்தாகியும் அதை மறந்து அழுகின்றோம்.
உம் ஆத்மா சாந்தியடைய என்றும் வேண்டி நிற்போம்.

21/5 1ம்,ஒழுங்கை பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 24 . 06 . 1945

மறைவு 22 . 11 . 2016

அமரர்

**கனகரத்தினம் நகுனகுலசிங்கம்**

(ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆயுட்காலத் தலைவர்)

திதி: நவமி

குடும்பத்தின் ஒளிவிளக்காய்
எம்வாழ்வில் ஒளியேற்றிய தெய்வமே !
இப்பாரினில் எம்மை பரிதவிக்கவிட்டுச்
சென்றாலும் என்றும் விடி வெள்ளியாய்
வழிநடத்தும் எங்கள் அப்பாவே

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

என்றும் நினைவில்
கனகரத்தினம் குடும்பத்தினர்.

297, பலாலி வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 11.11.2017 சனிக்கிழமை அன்று நயினை மாதா இறைபதம் அடைந்த எமது அன்புத் தந்தை

அமரர்

**தாமோதரம்பிள்ளை தர்மகுலசிங்கம் (இந்துமதி)**

அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் நேற்று (10.12.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் சாட்டி வெள்ளைக் கடற்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (11.12.2017) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெற இருக்கும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

இருபாலைச் சந்தி, பேச்சியம்மன் கோயிலடி.
077 548 8919

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# மாணவர்களின் போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்த ஏன் நிதி ஒதுக்கப்படவில்லை?

## வரவு – செலவுத் திட்ட விவாதத்தில் சரா எம்.பி. கேள்வி

கொழும்பு, டிசெ. 11
வடக்கு - கிழக்கு மக்களின் தற்போதைய ஆயுதமான கல்வியை அழிப்பதற்குப் போதைப் பொருள் பாவனை ஊக்கப்படுத்தப்படுகின்றது. இதனைக் கட்டுப்படுத்த, பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு மேற்கொள்வதற்குக் கல்வி அமைச்சு ஏன் வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் கல்வி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:

### நிதி ஒதுக்கீடு இல்லை

வடக்கு - கிழக்கு மக்களின் தற்போதைய ஆயுதம் கல்வியும் பேனாவும்தான். இதனை நன்கு உணர்ந்த அரசு அதனைத் திட்டமிட்டுச் சீர்குலைக்கும் வகையில், வடக்கு - கிழக்கில் கஞ்சா, போதைப்பொருள் பாவனை என்பவற்றை இறுக்கமாகச் சட்டரீதியாகக் கட்டுப்படுத்தாமல், பெயரளவுக்கு மட்டும் சட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றது.
வாரா வாரம் கஞ்சா, போதைப் பொருள், மதுப்பாவனை போன்றவை பிடிபடும் சம்பவங்களை வடக்கு-கிழக்கில் பத்திரிகைச் செய்திகளாகக் காணலாம். உண்மையில் இதனை ஏன் கட்டுப்படுத்த முடியாமல் உள்ளது? விடுதலைப் புலிகளை அழித்துவிட்டதாகக் கூறி மார்தட்டும் அரசு, ஏன் இந்தக் கஞ்சா, மற்றும் போதைப்பொருள் பாவனையை இதுவரை கட்டுப்படுத்தவில்லை? இதற்குப் பின்னால், நிச்சயம் அரசியல் தூரநோக்கு உண்டு.
பாடசாலை மாணவர்கள் மத்தியில் இந்தப் பழக்கம் அதிகரித்து வருகின்றது. இந்தப் பழக்கத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக மாணவர்களுக்கான விழிப்புணர்வுச் செயற்றிட்டத்துக்கு இந்த வரவு - செலவுத் திட்டத்தில் ஒரு சிறியளவு நிதிகூட ஒதுக்கியிருப்பதாகத் தெரியவில்லை.

### போதைப் பொருள் பாவனை

நாடு முழுவதிலும் உள்ள 10 ஆயிரத்து 162 பாடசாலைகளில் கல்வி கற்கின்ற 41 லட்சத்து 43 ஆயிரத்து 330 மாணவர்களில் 13 சதவீதமானவர்கள் குறிப்பாக 5 லட்சத்து 38 ஆயிரத்து 632 பேர் போதைப் பாவனையுடன் தொடர்புபட்டிருப்பதாகவும், அதிலும் குறிப்பாக, இதில் 3 வீதமான பெண்கள் 16 ஆயிரத்து 158 பேர் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுவது மிகவும் மனம் வருந்தத்தக்க தகவலாகும். இவ்வாறான ஒரு பெரிய சமூகப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இறுக்கமான சட்டக் கட்டுப்பாடும், முறையான ஆற்றுப்படுத்தலுமே அவசியம். குறிப்பாக, இளம் வயது மாணவர்களால் பெருமளவு விரும்பப்படும் இராஜ பிரமுகர்கள் மூலம் பரப்புரையொன்றை மாணவர்கள் மத்தியில் 'டிஜிட்டல்' தொழில்நுட்பத்தினூடாக நடைமுறைப்படுத்தி, மாணவர்களைப் போதைப் பழக்கங்களிலிருந்து மீட்டெடுக்க வேண்டிய கட்டாயச் சூழ்நிலையில் நாம் உள்ளோம். இதற்காக ஏதாவது நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா? என்று கௌரவ நிதி அமைச்சர் அவர்களிடம் நான் வினவ விரும்புகின்றேன். தயவுசெய்து, இந்த விடயத்தைக் கவனத்திலெடுத்து, கல்வி அமைச்சினூடாகப் போதைப் பொருள் பாவனை தொடர்பான விழிப்புணர்வுகளை முடுக்கிவிடும்படி கேட்டுக்கொள்கின்றேன்.



### கல்விக் கொள்கை

இலங்கையின் கல்விக் கொள்கை தொடர்பாக இன்னும் ஒரு முக்கிய விடயத்தைச் சர்வதேச நாடுகள் சிலவற்றுடன் ஒப்பிட்டுக் குறிப்பிடவேண்டியுள்ளது. வெளிநாடுகளில் கண்டுபிடிப்பாளர்கள் உருவாகுவதுபோல் ஏன், எமது நாட்டில் இடம் பெறுவதில்லை? எமது நாட்டைச் சேர்ந்த பல திறமைசாலிகள் வெளிநாடுகளுக்குச் சென்று அங்கு சில கண்டுபிடிப்புகளில் ஈடுபடுவதை ஊடகங்களினூடாக நாங்கள் அறிகின்றோம். இது எவ்வாறு சாத்தியப்படுகின்றது? நாம் இலங்கையின் கல்விக் கொள்கைகள் தொடர்பாக மேலும் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்.
50 ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்த குழந்தைகளுக்கும் தற்போது பிறக்கும் குழந்தைகளுக்கும் இடையில் பிறப்பிலேயே உருவாகும் தனித்திறமை தொடர்பாகப் பல் வேறுபாடுகள் இருப்பதாக விஞ்ஞானம் கூறுகின்றது. அதனை எமது பச்சிளம் குழந்தைகளின் வளர் நிலையில் நேரில் கண்டு மகிழ்ந்தும் வருகின்றோம். இவ்வாறான அதிசிறப்புத் திறன்கொண்ட மாணவர்கள் ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வொரு துறையிலும் இருக்கின்றார்கள் என்பதை நாம் மறுக்க முடியாது.

### மீத்திறன் மாணவர்களை அடையாளம் காணுதல்

எமது நாட்டில் நடைமுறையில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கான பாடத்திட்டக் கல்விக்காகக் கல்வி அமைச்சு ஒதுக்கியுள்ள காலப் பகுதியை, அதாவது தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையுள்ள 11 ஆண்டுகளை, இவ்வாறான அதிசிறப்புத் திறன்கொண்ட மாணவர்களால் நிச்சயம் 4 ஆண்டுகள் முன்னராவது கற்றுத்தேற முடியும். இவ்வாறான மாணவர்களை ஒவ்வொரு படிநிலையிலும் சரியாக இனங்காணக்கூடியவாறு ஒரு சரியான மதிப்பீடு ஒன்றைக் கல்வி அமைச்சு நடைமுறைப்படுத்தி, சேமிக்கப்படும் நான்கு வருடங்களில் அவர்களைத் துறைசார்ந்த வல்லுனர்களாக உருவாக்குவதற்கான கல்லூரிகளை உருவாக்குவது தொடர்பான புதிய சிந்தனைக்கு நாம் சென்றால், நம் நாட்டிலும் புதிய கண்டுபிடிப்புக்கள் உருவாக வாய்ப்புண்டு.
முன்னைய காலங்களில் 'இரட்டை வகுப்பேற்றம்' என்ற ஒரு விடயத்தை அரசு நடைமுறைப்படுத்தியிருந்தும், அதிலிருந்த நடைமுறைப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகள், அதற்கான அங்கீகாரம் இல்லாமை, சரியான வழிப்படுத்தல் இன்மை போன்றவற்றால் அரசு அதிலிருந்து பின்வாங்கியது. உண்மையில் இவ்வாறான மாணவர்களை இனங்கண்டு அவர்களைத் தனித்துவமான வல்லுனர்களாக உருவாக்குவதற்கான கல்லூரிகள் வெளிநாடுகளில் தனித்துவமாக அரசதுறையிலும் தனியார் துறையிலும் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆனால், எமது நாட்டில் அதிசிறப்பு திறமைசாலிகளை மாணவப் பருவத்தில் இருந்தே இனங்கண்டு, அவர்களுக்கு அங்கீகாரம் வழங்கி, அவர்களை வளர்க்க எமது கல்வி அமைச்சு சிந்திக்கவில்லை.
ஒட்டுமொத்தமாக எமது நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு எமது நாட்டிலுள்ள அதிசிறப்பு மாணவர் குழுவை மிகச் சரியான முறையில் இனங்கண்டு, தனித்துவமாகப் பயிற்றுவிக்கும் சிறப்புக் கல்லூரிக்கான நாளைய தேவை உண்டு என்பதை இங்கு ஆணித்தரமாகக் கூற விரும்புகின்றேன் - என்றார். (5)


## மரண அறிவித்தல்கள்



### நாகநாதி கணபதிப்பிள்ளை (கணபதி)

10/1, B.A தம்பிலேன், வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதி கணபதிப்பிள்ளை 09.12.2017 சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதி பூபதி தம்பதிகளின் அன்பு மகனும் முத்துத்தம்பி காலஞ்சென்ற இராஜேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் சூரிய கலாவின் அன்புக் கணவரும் நிரோசனா, டிபோசன், நிதுஷா, கேதுஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், செல்லத்துரை, இராமு ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2017) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**10/1, B.A தம்பிலேன்,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 556 6489**



### வடிவேலு மதியழகன் (மதி)

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வெற்றிலைக்கடை மதி என செல்லமாக அழைக்கப்படும் வடிவேலு மதியழகன் 10.12.2017 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வடிவேலு - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராஜா - பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும் சாந்தரூபி(ரூபி) யின் அன்புக் கணவரும் சந்துசன்(ஜேர்மனி), டினோஜன், சதீசன், தாட்சாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும் தமிழ்மாறன்(பிரான்ஸ்), தமிழ்ச்செல்வி(ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாலசுதா(பிரான்ஸ்), விக்கினேஸ்வரன் (ஜேர்மனி), சிவனேசன்(பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் சிவபாக்கியத்தின் பெறாமகனும் புஸ்பவதி(பிரான்ஸ்) இன் மருமகனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று(11.12.2017) திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**93/12, இராசாவின் தோட்டம்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி ஜொவிற்றா கிறேஸ் செல்வநாயகம் (புஸ்பா)



யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜொவிற்றா கிறேஸ் செல்வநாயகம் (புஸ்பா) நேற்று (10.12.2017) ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான பிறின்ஸ் எதிர்மனசிங்கி நன்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மாட்டீன் - றெஜினா (தங்கம்மா) தம்பதிகளின் அன்பு மருமகளும், M.A.R. செல்வநாயகம் (இளைப்பறிய மதுவரி பிரதம பரிசோதகர்) அவர்களின் அன்பு மனைவியும், சாமினி, சுதர்சினி (இலங்கை வங்கி - காத்தான்குடி), நிலாந்தினி (நிலா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பற்றிக், ஜோனதாஸ், பிரசாந் (ஆசிரியர் - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், றோஸ்மலர், காலஞ்சென்ற அன்ரன் மற்றும் பபி, இன்பம், சுகி, ஜோ, காலஞ்சென்ற பெஞ்சி மற்றும் அலோஸ்சியா, ஜீவா, சிராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சகுந்தலா, காலஞ்சென்ற நிர்மலா மற்றும் துரைநாயகம், மதுரநாயகம், கமலா, கிறிஸ்ரி, மோசஸ், காலஞ்சென்ற திரேஸ் மற்றும் மகாராணி, ரஞ்சன், காலஞ்சென்றவர்களான ஜெயம், தர்மினி மற்றும் மாறி, யூஜின், ரஞ்சன் பத்திநாதர் ஆகியோரின் மைத்துனியும், நிதுர்ஷா, ஜோனத்தன், கபிஷாந், பிரபிஷான், பற்றிக்நிலக்சன்(SPC), எறிக்பிரவீன்(SPC), அல்றின்பிரசாலினி, சில்வறின் பிரதுர்ஷிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் இன்று (11.12.2017) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் (இல.181, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்) அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.181(665),**
**ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**M.A.R. செல்வநாயகம்**
**(கணவர்)**

# பொலிஸ் இடமாற்றங்களை இடைநிறுத்தப் பணிப்பு

கொழும்பு, டிசெ. 11

பொலிஸ் திணைக்களத்தில் மேற்கொள்ளப்படும் சகலவிதமான இடமாற்றங்களையும் தற்காலிகமாக ஒத்திவைக்குமாறு பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர பணிப்புரை விடுத்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறவுள்ளமையாலேயே குறித்த இடமாற்றங்கள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

சகல இடமாற்றங்களும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி வரையில் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

## பெயர்மாற்றம்

நிர்சாமம் சங்கானையை வதிவிடமாகக் கொண்ட மரிசிலின் நாகம்மா ஆகிய நான் இன்று முதல் மரிசிலின் நல்லம்மா என பெயர் மாற்றம் செய்வதோடு இனி இப்பெயரையே சகல ஆவணங்களிற்கும் உபயோகப்படுத்துவேன் என இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

மரிசிலின் நல்லம்மா

## ரிப்பர் வாகனம் விற்பனைக்கு

ஓடிக் கொண்டிருக்கும் நல்ல நிலையில் உள்ள TATA ரக (2 1/4 கியுப் வெள்ளை) ரிப்பர் வாகனம் விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு :- 077 407 3046

## English Classes

Spoken English / Group Class / Personal Class

O/L, A/L மாணவர்கள் மற்றும் தொழில் புரிவோர் வெளிநாடு செல்வோர் அனைவருக்குமான நவீனமுறையிலான ஆங்கிலக் கற்கை நெறிகள் உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

077 448 1790




## பகிரங்க கேள்விகள் மூலம் விற்பனை செய்தல்
## மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

கீழே குறிப்பிடப்பட்ட பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான பொருள்களை விற்பனை செய்வது தொடர்பாகக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப் படிவங்களை 2017.12.27 ஆம் திகதி பி.ப 12.30 வரை யாழ்ப்பாண மேல்நீதிமன்றக் கணக்குக் கிளையில் மீளளிக்க முடியாத வைப்பாக ரூபா 100/= ஐ செலுத்தி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பிட்ட பொருள்களை குறிப்பிட்ட நீதிவான் நீதிமன்றப் பதிவாளரின் அனுமதியுடன் அலுவலக நேரத்தில் பார்வையிட முடியும். வாகனம் தொடர்பான விவரங்களும் மீளளிக்கக்கூடிய கேள்விப் பத்திர வைப்புத் தொகை விவரங்களும் பின்வருமாறு.

| விவரம் | மீளளிக்கக் கூடிய வைப்பு (ரூபா) | பார்வையிடக்கூடிய நீதிவான் நீதிமன்றம் |
|---|---|---|
| 1. பவுன் சங்கிலி(11.6g - 22கரட்) | 1000.00 | நீதிவான் நீதிமன்றம், பருத்தித்துறை |
| 2. T.V.S மோட்டார் சைக்கிள் | 1000.00 | நீதிவான் நீதிமன்றம். யாழ்ப்பாணம் |
| 3. Bajaj Pulsor மோட்டார் சைக்கிள் | 1000.00 | நீதிவான் நீதிமன்றம். யாழ்ப்பாணம் |
| 4. Bajaj Pulsor மோட்டார் சைக்கிள் | 1000.00 | நீதிவான் நீதிமன்றம். யாழ்ப்பாணம் |
| 5. Auto Mahendra முச்சக்கர வண்டி | 2000.00 | நீதிவான் நீதிமன்றம். யாழ்ப்பாணம் |
| 6. Isusi ElF (250 கன்ரர்) | 1000.00 | நீதிவான் நீதிமன்றம். யாழ்ப்பாணம் |
| 7. Hero Honda (Black) | 1000.00 | நீதிவான் நீதிமன்றம். யாழ்ப்பாணம் |
| 8. Hero Honda (Black) | 1000.00 | நீதிவான் நீதிமன்றம். யாழ்ப்பாணம் |
| 9. Bajaj (Black) | 1000.00 | நீதிவான் நீதிமன்றம். யாழ்ப்பாணம் |
| 10. Bajaj (Red) | 1000.00 | நீதிவான் நீதிமன்றம். யாழ்ப்பாணம் |
| 11. Bajaj (Black) | 1000.00 | நீதிவான் நீதிமன்றம். யாழ்ப்பாணம் |
| 12. Bajaj (Black) | 1000.00 | நீதிவான் நீதிமன்றம். யாழ்ப்பாணம் |
| 13. Mahendra (Silver) | 1000.00 | நீதிவான் நீதிமன்றம். யாழ்ப்பாணம் |

கேள்விப்பத்திரங்களை மேல்நீதிமன்ற நீதிபதி. மேல்நீதிமன்றம். யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு தபால் உறையிலிட்டு ஒட்டப்பட்டு சீலிடப்பட்டு 2017.12.27 ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக மேல் நீதிமன்றக் கணக்கீட்டுக் கிளையில் உள்ள கேள்விப் பெட்டியில் (Tender) இடுதல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் பகிரங்க கேள்வி மூலம் "பொருள்கள் கொள்வனவு செய்வதற்கான கேள்விப்பத்திரம் - 2017 " எனக்குறிப்பிடல் வேண்டும்

**தவிசாளர்/ மேல் நீதிமன்ற நீதிபதி,**
**மேல் நீதிமன்ற பெறுகைக்குழு,**
**மேல் நீதிமன்றம்,**
**யாழ்ப்பாணம்.**




## Invitation for Bids (IFB)
## Department of Probation and Child Care Services, Northern Province
### Procurement of Cleaning Services and Security Services

1. The Chairman, Procurement Committee on behalf of Department of Probation and Child Care Services, Northern Province now invites sealed bids from eligible and qualified biddersfor the items listed below.

| S.No | Bid Number | Item | Bid Security Amount |
|---|---|---|---|
| 01 | NPC/30/02/02/CS/2017 | Cleaning Services | 20,000.00 |
| 02 | NPC/30/02/02/SS/2017 | Security Services | 20,000.00 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been black-listed and shall meet the following requirements;
   a. Bidders shall have valid business registration
   b. and approval of the Ministry of Defense to provide security service
   c. and shall have its registered office or branch in Northern Province
4. To qualify for award of the Contract, bidders shall meet the minimum qualifying criteria if given in Section2 –Bidding Data.
5. Interested bidders may obtain further information from Department of Probation & Child Care Services– Northern Provincial Council, Meenadchi Amman Road,Pannai, Jaffna and inspect the bidding documents at Department of Probation & Child Care Servicesfrom 9.00hrs to 15.00hrs on working days.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Commissioner, Department of Probation & Child Care Services, NP from 12December 2017 to 26thDecember 2017 from 09.00 hrs to 15.00 hrs. Upon payment of a non-refundable fee of Rs.1,000.00 The method of payment will be cash.
7. Bids shall be delivered to Department of Probation & Child Care Services– Northern Provincial CouncilMeenachi Amman Road,Pannai, Jaffna on or before10.00AM on 27thDecember 2017. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
8. All bids shall be accompanied by a Bid-Security of Rs.20,000.00
9. The Chairman reserves the right to accept or reject or partially accept any bid and to annul the bidding process and reject all bids at any time without there by incurring any liability to the bidders.

Mr.T.Viswarupan
Chairman – PDPC, Department of Probation and Child Care Services– Northern Province,
Meenadchi Amman Road ,Pannai, Jaffna.
Phone: 021-205-7102 Fax: 021-205-7103

# 25 ஆவது ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
09 . 05 . 1919

மறைவு
11 . 12 . 1992

## சின்னத்தம்பி இளையதம்பி

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும் "* - வள்ளுவர் -

கால் நூற்றாண்டுகள் கழிந்தது ஐயா ! நினைவில் இருந்து மறையவில்லை உங்கள் அன்பு முகம் 25 வருடங்கள் என்ன 50 வருடங்கள் ஆனாலும் நீங்கள் எம்மீது காட்டிய அன்பை எம்மை வளர்த்த வளர்ப்பை மறந்து விட முடியுமா ஐயா?

எங்கள் அம்மாவுக்கு இனியதொரு வாழ்க்கைத் துணையாக இருந்து உலக மக்களுக்கு நீங்கள் இருவரும் உதாரணத் தம்பதிகளாய் வாழ்ந்து காட்டினீர்கள் பிள்ளைகளாகிய எம் எல்லோருக்கும் உடல், பொருள், ஆவியை ஒப்படைத்த தந்தையாக நமக்கு 'நல்லன' எல்லாம் கற்றுத்தரும் முதல் ஆசானாக பேரப்பிள்ளைகளை உளமாற நேசித்த பேரனாக உற்றாரும் மற்றாரும் அயலவரும் உங்களிடம் பணி புரிந்த தொழிலாளரும் நேசித்த உயர் மனிதனாக வாழ்ந்தீர்கள்

நாம் வளமாய் வாழ வழிசமைத்து நம் குடும்பத்தை சிறப்புற வாழ வைத்து எமக்கெல்லாம் ஒரு வழிகாட்டியாய் வாழ்வின் ஒளியாய் நின்ற எங்கள் தந்தையே ! தாயாரைப் போலவே எம்மைத் தோளிலும் மார்பிலும் தூக்கி வளர்த்தீர்கள் ஐயா ! அறிவூட்டும் அற்புதக் கதைகள் பல சொல்லி அம்மாவைப் போலவே எமக்கு அன்போடு அமுதாட்டும் பணியினையும் செய்தீர்கள் எங்கள் சிந்தையிலே தர்மத்தை, நியாயத்தை, அன்பை விதைத்தீர்கள் விலை மதிப்பில்லா உங்கள் அன்பால், உழைப்பால், தியாகத்தால் அன்றோ பிள்ளைகள் நாம் சிறப்புற வளர்ந்தோம் உங்கள் பிள்ளைகள், பேரக்குழந்தைகள், பூட்டப்பிள்ளைகள் பெருமைகள் பல பெற்று சிறப்புற வாழ்வதைப் பார்க்கும் பாக்கியத்தை நீங்கள் அடையாதது ஏன் என்பதே நாங்கள் இன்றளவும் இறைவனிடம் எழுப்பும் கேள்வி உங்களின் சிறப்பை, சிறப்பான வளர்ப்பை உங்கள் பிள்ளைகளாகிய எமது சிறந்த வாழ்வில் ஒவ்வொரு தருணத்திலும் உணர்கின்றோம். உங்கள் உருவத்தை பிள்ளைகளாகிய எம்மிலும் உங்கள் பேரக்குழந்தைகளாகிய எம் பிள்ளைகளிலும் தினமும் கண்டு வணங்குகின்றோம்.

நீங்கள் வகுத்து தந்த பாதையில் நீங்கள் புகட்டிய அறிவு என்னும் தீபம் ஏந்தி அறத்துக்கு உட்பட்ட வாழ்க்கை வாழ்வோம் என்று உங்கள் 25 ஆவது ஆண்டு நினைவு நாளில் சபதம் செய்கிறோம் தந்தையே !

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

*"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் – வேண்டா
நமக்கும் அதுவழியே நாம்போம் அளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும்."* - ஔவையார் -

**இல-06, கன்னாதிட்டி லேன்,
யாழ்ப்பாணம்.**

**மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**


## மலேசியத் தூதுவர் திடீரெனத் திருப்பியழைப்பு

கொழும்பு, டிசெ. 11

மலேசியத் தலைமை அமைச்சர் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், கொழும்பில் உள்ள தமது தூதுவரை மலேசிய அரசு திருப்பி அழைத்துள்ளது. மலேசியத் தலைமை அமைச்சர் நஜிப் ரசாக் எதிர்வரும் 17ஆம் திகதி கொழும்பு வருகின்றார். அவரது பயணத்துக்கு இன்னமும் ஒரு வாரமே உள்ள நிலையில், கொழும்பில் இருந்த மலேசியத் தூதுவர் வான் சைதி வான் அப்துல்லா திடீரென மலேசிய அரசால் திருப்பி அழைக்கப்பட்டுள்ளார். தீவிரமான காரணங்களாலேயே மலேசியத் தூதுவர் திருப்பி அழைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்ற போதிலும், திருப்பி அழைக்கப்பட்டமைக்கான காரணம் தெரியவரவில்லை. (5)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
1941 . 03 . 27

உதிர்வு
2016 . 12 . 11

## அமரர் பி.பி.அந்தோனிப்பிள்ளை

(இளைப்பாறிய அதிபர்)

[illegible] நீர் இருந்தபோது
கவிதையாய் வாழ்வு சொன்னீர்
கண்விழித்தெழுந்தபோது
எம் மனதிலே கவிதையானீர்
காற்றோடு கலந்து இன்று
ஆண்டொன்று ஆனதப்பா

இனியார் கவி கேட்டிடினும் எம் செவிக்கினித்திடாது
தெகிட்டாத கவிச்சுரங்கம் எமக்கெட்டாது போனதுவே
எம் சிந்தையின் வேதனையையாரிடம் சொல்வோமய்யா !

எமையெல்லாம் தவிக்க விட்டு
தொலைதூரம் சென்றிடினும்
உயிர் வாழும் சொத்தாக நீர் எமக்கு ஈந்திட்ட
அரிய நல்ல புத்தகங்கள் உயிரோடு பேசுதப்பா
ஆண்டொன்று ஆனாலும்
ஆறவில்லை எங்கள் மனம்

**ஆத்திக்குளி,
முருங்கன்.**

**மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.**



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## அமரர்
## சின்னத்தம்பி சோமசுந்தரம் சண்முகரத்தினம்



பிறப்பு
12.10.1926

இறப்பு
11.11.2017

கடந்த 11.11.2017 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சின்னத்தம்பி சோமசுந்தரம் சண்முகரத்தினம் அவர்களின் 31ஆவது தின வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (11.12.2017) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

145/4, பிரப்பங்குளம் ஒழுங்கை,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**



## சிறார்களின் பிரிவுபசார விழா

சாவகச்சேரி,டிசெ.11
சாவகச்சேரி சங்கத்தானை ஸ்ரீமுருகன் முன்பள்ளி சிறார்களின் பிரிவுபசார விழாவும், கலைவிழாவும் முன்பள்ளி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.
முன்பள்ளி அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.நரகரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதனும், மதிப்புறு விருந்தினர்களாக பிரிவு கிராம அலுவலர் எஸ்.உலகநாதன், மருத்துவர் சி.சு.அருளானந்தம் சங்கத்தானை முருகன் ஆலய பரிபாலன சபைத்தலைவர் கு.சதாசிவ மூர்த்தி ஆகியோரும் கலந்துகொண்டனர். (ந.ரி4,9)

# எய்ட்ஸ் நோயால் பலர் பாதிப்புக்குள்ளாகின்றனர்

## மருத்துவர் அனுஷியா தெரிவிப்பு



மட்டக்களப்பு,டிசெ.11
மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த ஆண்டு டிசெம்பர் மாதம் வரை 31 எய்ட்ஸ் நோயாளிகள் இனங்காணப் பட்டுள்ளனர் என மட்டக்களப்பு மாவட்ட பாலியல் பரிமாற்ற நோய், எய்ட்ஸ் நோய் கட்டுப்பாட்டு பொறுப்பு வைத்தியர் அனுஷியா ஸ்ரீசங்கர் தெரிவித்தார். எய்ட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவுகளிலும் முழு முயற்சியுடன் இடம்பெற்று வருவது தொடர்பாக நேற்றுக் கலந்துரையாடப்பட்டது.
இந்தக் கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
"மட்டக்களப்பு மாவட்டத்தில் பாலியல் பரிமாற்ற நோய் மற்றும் எய்ட்ஸ் நோய் கட்டுப்பாட்டு செயற்திட்டங்களின் விழிப்புணர்வு முழுமூச்சாக இடம்பெற்று வருகின்றது. குருதிப் பரிசோதனை செய்து கொள்வதன் மூலம் எய்ட்ஸ் தொற்று அடுத்தவருக்கு பரவாமல் இருப்பதையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கும் மக்களிடம் ஊக்குவிப்பதே எமது விழிப்பூட்டலின் நோக்கம். எய்ட்ஸ் ஒரு ஆட்கொல்லி நோய் என்பதாலும் சமூக அந்தஸ்து மற்றும் அவமானம் என்பனவற்றாலும் எய்ட்ஸ் தொற்றுக்குள்ளானவர்கள் தங்களை மருத்துவ சிகிச்சைகளுக்குக் கூட வெளியே இனங்காட்டிக் கொள்ளாமல் இருந்து வரும் நிலமை தற்போதைய விழிப்பூட்டல்களால் மேம்பாடு கண்டு வருகின்றது. 'எல்லோரும் முக்கியம்' என்ற எய்ட்ஸ் நோய்த் தடுப்பு தொனிப் பொருளின் அடிப்படையில் எச்ஐவி தொற்றுள்ளவரையும், தொற்றில்லாதவரையும் கவனத்தில் எடுக்க வேண்டும். தொற்றுள்ளவருக்கு சிகிச்சை யளிப்பதன் மூலம் மற்றவருக்கு எச்ஐவி தொற்று ஏற்படாமல் தடுக்க முடியும். எச்ஐவி தொற்றில்லாதவருக்கு விழிப்பு ணர்வை யூட்டி அவரைத் தொற்றிலிருந்து பாதுகாக்கவேண்டும். எய்ட்ஸ் ஆட்கொல்லி நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும் என்பதில் மருத்துவ உலகம் முன்னேறியிருக்கின்றது" - என்றார். (ற-ரி5)

# முஸ்லிம் சமூகத்தை பிளவுபடுத்த வேண்டாம்

## யூ.எல்.எம்.என்.முபீன் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.11
உரிமை வேறு அபிவிருத்தி வேறு என்று கூறி சமூகத்தைப் பிளவுபடுத்தி அரசியல் செய்ய முடியாது என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய கொள்கை பரப்புச் செயலரும் நகரத் திட்டமிடல் நீர் வழங்கல் அமைச்சின் இணைப்புச் செயலாளருமான யூ.எல்.எம்.என்.முபீன் தெரிவித்தார்.
உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான வியூகம் பற்றி நேற்றுக் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"சிலர் சமூகத்துக்கு அபிவிருத்தி முக்கியமா? உரிமை முக்கியமா? என விதண்டாவாதத்தை முன்வைக்கின்றனர்.
கடந்த 30 வருடகால ஆயுத முரண்பாடுகளின் விளைவாக இந்த நாட்டின் முஸ்லிம் சமூகம், இடையில் அகப்பட்டுக் கொண்டு இழந்தவைகள் ஏராளம். போர் கால உதவி, வாழ்வாதார உதவித் திட்டங்கள், புனர்வாழ்வு, புனரமைப்பு என்பனவற்றிலும் போருக்குப் பின்னரான மீளமைப்பிலும் முஸ்லிம் சமூகம் ஆட்சியாளர்களாலும் உதவி வழங்கும் பன்னாட்டு அமைப்புக்களாலும் கண்டு கொள்ளப்படவில்லை.
போர் காலத்திலும், போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட காலத்திலும் கோலோச்சிய இனவாத ஆட்சியாளர்களால் இலங்கை முஸ்லிம் சமூகம் இனவாதக் கண்ணோட்டத்துடன் நோக்கப்பட்டு அபிவிருத்திகளுக்குள் உள்வாங்கப்படாது புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கின்றது.
உள்ளூராட்சி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களிலும் எமது உறுதியான பலத்துடன் பேரம்பேசுகின்ற சக்தியாக உருவெடுத்து உரிமைகளையும் அபிவிருத்திகளையும் அடைந்து கொள்ளவேண்டும் - என்றார்.
(ற-ரி5)

எசட்லைன்
முல்லைத்தீவு கிளையானது
2017 டிசம்பர் மாதம் 11ம் திகதி முதல்
புதிய பரிணாமத்துடன்
கடற்கரை வீதி, முல்லைத்தீவு
எனும் இடத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.
உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள பல நிதிச்சேவைகள்
• லீசிங் வசதி • வாடகைக் கொள்வனவு • கடன்வசதிகள் • பக்டரின் (Factoring)
Member of
0114 700 100
எசட்லைன்



## கிழக்கு ஜெருசலேமில்

# பதற்றநிலை அதி உச்சம்



ஜெருசலேம், டிசெ. 11
இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அங்கிகரித்து அமெரிக்கா கடந்த வாரம் அறிவித்துள்ள நிலையில், இந்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பலஸ்தீனர்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். காசா நகரம், மேற்குக் கரை, ஜெருசலேம் ஆகிய இடங்களில் பதற்ற நிலை உச்சம் தொட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டது.

யூதம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மூன்று மதங்களுக்கும் அடிநாதமாக விளங்குகிறது ஜெருசலேம். இந்த நகரத்தின் கிழக்குப் பகுதியை கடந்த 1967ஆம் ஆண்டு இஸ்ரேல் கைப்பற்றியது. அதிலிருந்து ஜெருசலேமை தனக்குத்தான் சொந்தம் என்று இஸ்ரேல் அறிவித்திருந்தது. அங்கு குடியிருப்புத் தொகுதிகளையும் அமைத்து யூதர்களை குடியேற்றி யது இஸ்ரேல். குடியிருப்புக்களை நிறுத்துமாறு ஐ.நா. பலமுறை எச்சரித்த போதிலும் இஸ்ரேல் கண்டுகொள்ளவில்லை. இந்த நிலையில் கடந்த வாரம் ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அறிவித்திருந்தார் ட்ரம்ப். இதனால், மத்திய கிழக்கு பகுதியில் பதற்றம் தொற்றியுள்ளது. குறிப்பாக, இஸ்ரேல் பலஸ்தீனம் இடையே உச்சக்கட்ட மோதல் வெடிக்கும் அபாயம் உருவாகியுள்ளது.


இஸ்ரேலிடம் இருந்து பலஸ்தீனத்தை மீட்பதற்காக உருவாகிய ஆயுதக் குழுவான ஹமாஸ், காசா எல்லையில் இருந்து நேற்றுமுன்தினம் ரொக்கெட் தாக்குதல் நடத்தினர். இஸ்ரேலும் பதிலுக்கு வான் தாக்குதல்களை நடத்தியது. மேற்குக் கரை, கிழக்கு ஜெருசலேம் உள்ளிட்ட இடங்களிலும் பலஸ்தீனர்கள் தொடர்ந்தும் போராடி வருகின்றனர். இந்தப் பகுதிகள் போர்க்களமாக காட்சி தருகின்றன என்று ரொயிட்டர்ஸ் மேலும் குறிப்பிட்டது. (ம)



## பிஜி தீவுகளில் நிலநடுக்கம்

பசிபிக் கடலில் பிஜி தீவுகள் அருகே உள்ள டோங்காத் தீவில் நேற்று முன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவு கோலில் 5.7 அலகுகளாக இந்த நில அதிர்வு பதிவானது. ஹிகிபோ நகருக்கு தென்கிழக்குத் திசையில் 29 கிலோமீற்றர் தொலைவில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது என்று அமெரிக்க புவியியல் சார் ஆய்வு மையம் எச்சரித்தது. (ம)

## அலெஸ்காவில் நிலநடுக்கம்



வொஷிங்டன், டிசெ. 11
அமெரிக்காவின் அலெஸ்காவில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவுகோலில் இந்த நில அதிர்வு 5 அலகுகளாகப் பதிவானது என்று அமெரிக்கப் புவியியல்சார் ஆய்வுமையம் தெரிவித்தது. அலெஸ்காவின் அத்கா நகரின் தென்மேற்குப் பகுதியில் சுமார் 83 கிலோமீற்றர் தொலைவிலும், கடலுக்கு அடியில் 46.8 கிலோமீற்றர் ஆழத்தில் நடுக்கம் மையம் கொண்டிருந்தது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம)



## ஏவுகணைகளை வாங்குகிறது ஜப்பான்

டோக்கியோ, நவ. 11
வடகொரியாவின் மிரட்டலைச் சமாளிக்க ஜப்பான் நீண்ட தூரம் பாய்ந்து சென்று தாக்கும் திறன் படைத்த ஏவுகணைகளை அமெரிக்க நிறுவனத்திடம் இருந்து வாங்கத் திட்டமிட்டுள்ளது.

வடகொரியா கடந்த சில தினங்களுக்கு முன்னர் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனையை நடத்தியது. வடகொரியாவில் இருந்து புறப்பட்டுச் சென்று அமெரிக்காவின் எந்தப் பாகத்தையும் தாக்கும் திறன் இந்த ஏவுகணைக்கு உண்டு. இதையடுத்து கொரியத் தீப கற்பத்தில் உள்ள நாடுகளான தென்கொரியாவும், ஜப்பானும் தம்மைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளன.

அமெரிக்காவுடன் இணைந்து தொடர்ந்து போர்ப் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகிறது தென்கொரியா. இந்த நிலையில் அமெரிக்க நிறுவனம் ஒன்றிடம் இருந்து ஏவுகணைகளை வாங்கத் திட்டமிட்டுள்ளது ஜப்பான். (ம)



## முழுவதுமாக மீண்டது ஈராக்

*அந்த நாட்டின் தலைமை அமைச்சர் அறிவிப்பு*

பக்தாத், டிசெ. 11
"ஈராக்கை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்து முழுவதுமாக மீட்டுள்ளோம் " என்று ஈராக் தலைமை அமைச்சர் அல் அபாடி அறிவித்தார்.

ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் இருந்து ஈராக் விடுபட்டுள்ளது என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் ஈராக் பாலை நிலங்கள் தொடர்ந்தும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியிலேயே இருந்தன. இந்த நிலையில் அவையும் தம்மால் மீட்கப்பட்டுள்ளன என்று அறிவித்தார் அபாடி. (ம)



சீனாவின் ஹார்ன்பின் மாகாணத்தில் சண் தீவில் பன்னாட்டுப் பனிக் கண்காட்சி இன்னும் சில வாரங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் துரித கதியில் தற்போது அங்கு நடைபெற்று வருகின்றன. (ம)



## கட்டுக்குள் அடங்கவில்லை கலிபோர்னியக் காட்டுத் தீ

வொஷிங்டன், டிசெ. 11
அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தின் சாண்டியாகோ, சாண்டா அனா உள்ளிட்ட பகுதிகளில் காட்டுத் தீ வேகமாகப் பரவி வருகிறது. இதுவரை சுமார் 500 கட்டடங்கள் தீயிற்கு இரையாகியுள்ளன.

தீ அதிவிரைவாகப் பரவி வருவதை அடுத்து, வனப்புகுதியை ஒட்டியுள்ள லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் இருந்து 2 லட்சம் மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். வாகனங்கள், வீடுகள் எனப் பலவும் தீக்கிரை ஆகியுள்ளன. இதுவரை பல மில்லியன் டொலர் பெறுமதியான சொத்துக்கள் தீயில் எரிந்து சேதமடைந்துள்ளன. (ம)


17 வருடங்களாக வாடிக்கையாளர்களின்
நம்பிக்கை
மாபெரும்
கலண்டர் திருவிழா!
JANUARY 2018
கலண்டர்களின் கொண்டாட்டம் மீண்டும்
கரிகணனில்
நந்தவனப் பூக்களைப்போல் எண்ணிலடங்கா வடிவமைப்புக்கள்
எதை எடுப்பது? எதை விடுப்பது?
இவ்வளவு குறைந்த விலையில் வேறு யார் கொடுப்பது?
முதற்கட்டப் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம்
குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
கல்விச் சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம்
Offset | Digital | Screen | Design
கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்
இல.681, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
+94 21 222 2717 | 8

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# கொழும்பு அரசு தவறு செய்கிறது

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழங்கும் பெயர்ப் பட்டியலுக்கும் இனி அரச வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்று கொழும்பு அரசு அறிவித்துள்ளது. சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல நாடாளுமன்றத்தில் இதனைத் தெரிவித்துள்ளார். இது தவறு. தன்னை நல்லாட்சி அரசு என்று கூறிக் கொள்ளும் ஒரு அரசு அரசியல் நியமனங்களை வழங்குவது எந்தவகையில் சரியானது? இது அரசமைப்பின் கீழ் இலங்கையின் குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டுள்ள சம உரிமையைக் கேள்விக்குள்ளாக்கும் மிக மோசமான செயல். அது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

அரச வேலைகளுக்கு ஆள்சேர்ப்புச் செய்யும்போது அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். அது ஒவ்வொருவரதும் அடிப்படை உரிமை. இந்த அடிப்படையிலேயே பட்டதாரிகள் நியமனம் உள்ளிட்ட பல அரச வேலைகளுக்குப் போட்டிப் பரீட்சைகள் நடத்தப்பட்டு நேர்முகத் தேர்வும் நடத்தப்பட்டு வெற்றிபெற்றவர்களுக்கு மட்டுமே வேலைவாய்ப்பு வழங்கப்படுகின்றது. அப்படியிருக்கும்போது அரசின் ஒரு தொகுதி வேலைகளுக்கு மட்டும் போட்டிப் பரீட்சையோ நேர்முகப் பரீட்சையோ இன்றி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பட்டியலின்படி வேலை வழங்குவது என்பது கேவலமான ஆட்சியின் வெளிப்பாடு.

இத்தகைய செயற்பாடுகள் ஊழல், மோசடி என்பவற்றுக்கே வழிவகுக்கும். பணத்தைப் பெற்றுக்கொண்டு வேலை வழங்கும் நிலமையை இது தோற்றுவிக்கும். பணம் கொடுத்து வேலையைப் பெற்றுக்கொண்ட ஒரு தகுதியற்ற நபர் தனது பணியைத் திறம்படச் செய்யமுடியாமல் தனக்கு மட்டுமன்றி அந்தத் துறைக்கே சாபக்கேடாக மாறுவதும் நடக்கும்.

இதுபோன்ற அரசியல் நியமனங்களால் அரச நிர்வாக இயந்திரத்தின் பல பகுதிகள் இப்படி முடங்கி, நைந்துபோய்க்கிடக்கின்றன. இவர்களைப் போன்றவர்களாலேயே அரசநிர்வாகம் வினைத்திறன் அற்றதாகவும் உள்ளது.

அமைச்சர் கிரியெல்ல இந்த விடயத்தை நாடாளுமன்றத்தில் அறிவித்த சூழ்நிலையைக் கருத்தில் எடுப்பதும் மிக முக்கியமானது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள அரசதிணைக்களங்களில் பணிகளுக்கு அதிலும் சிற்றூழியர் தரங்களுக்கு சிங்களவர்களே நியமிக்கப்படுகிறார்கள் என்று வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றச்சாட்டுக்களை எழுப்பியிருந்தனர். அதற்குப் பதிலளிக்கும்போதே தமிழ்பேசும் நாடாளு மன்ற உறப்பினர்களைச் சமாளிக்கும் விதத்தில் அமைச்சர் இந்தப் பதிலை வழங்கியுள்ளார்.

அதன் மூலம் அவர், ஏற்கனவே வடக்கு கிழக்கில் சிங்களவர்களுக்கு வழங்கப்பட்ட நியமனங்களில் எந்தவித இன விகிதாசாரமும் பின்பற்றப்படவில்லை என்பதை ஏற்றுக்கொண்டுள்ளார். அத்தோடு அப்படி வழங்கப்பட்ட நியமனங்கள் எல்லாம் அரசியல் நியமனங்கள்தான் என்பதையும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இது நல்லாட்சி என்று கூறிக்கொண்டு தமக்கு வாக்களித்த மக்கள் அனைவரையும் ஏமாற்றும் செயல். நேர்மையாக நடப்போம் ஊழல், மோசடிகள் அற்ற ஆட்சியை வழங்குவோம் என்று கூறிவிட்டு அதற்கு நேர்எதிர்மாறாக, தலைகீழாக நடக்கும் இந்த அரசு உண்மையில் ஆட்சியைத் தொடரும் அருகதையற்றது.

இந்த விடயத்தில் வடக்கு மாகாண சபை வெகுவாகப் பாராட்டப்பட வேண்டியது. முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் மிகமிகப் பாராட்டப்பட வேண்டியவர். வடக்கு மாகாண சபை பதவியேற்றது முதல் இதுபோன்ற அரசியல் நியமனங்கள் அனைத்தையும் நிறுத்திவிட்டது. சிற்றூழியர்களாக இருந்தால் என்ன எந்தப் பணி நியமனமாக இருந்தால் என்ன போட்டிப் பரீட்சையின் ஊடாக அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்கியே பணி நியமனங்களை வழங்கிவருகின்றது.

இந்த முறையை மாற்றி அரசியல் நியமனங்களை வழங்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் சிலர் தலைகீழாக நின்றபோதும் வடக்கு மாகாண முதலமைச்சரின் உறுதியான நிலைப்பாட்டால் அது நடைபெறமலேயே போய்விட்டது. இப்போதும் வடக்கு மாகாண சபையின் கீழான நியமனங்கள் ஒப்பீட்டளவில் மிக நேர்மையாகவே நடக்கின்றன. கட்சிசார் அரசியல் நியமனங்கள் எவையும் வழங்கப்படவில்லை.

கொழும்பு அரசு இந்த முன்னுதாரணத்தைக் காணவேண்டும், பின்பற்றி நடக்கவேண்டும். வடக்கு மாகாண சபையின் மீது பல்வேறு விமர்சனங்கள் இருந்தாலும் இந்த விடயத்தில் அதன் நேர்மையை கொழும்பு பின்பற்றி நடக்கவேண்டும். அரசியல் ரீதியான அரச பணி நியமனங்கள் அனைத்தையும் நிறுத்திவிட்டு நேர்மையான, அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்கக்கூடிய நியமனங்களை வழங்கவேண்டும்.



# ஐ.தே.க. விரித்த வலைக்குள் கூட்டமைப்பு சிக்கி விடுமா?

சேரலாதன்

அமைச்சரவைக்குள் கூட்டமைப்பை உள்ளீர்ப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி பகீரதப் பிரயத்தனம் செய்வதாகச் செய்தியொன்று தெரிவிக்கின்றது. மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறீலங்கா சதந்திரக்கட்சி மகிந்த தரப்புடன் இணைந்து கொள்வதற்கான பேச்சுகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ள குழப்பமானதொரு நிலையில். அமைச்சரவையில் இணைந்து கொள்ளுமாறு கூட்டமைப்புக்கு அழைப்புவிடுக்கப் பட்டுள்ளது. சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் இரண்டு அணிகளும் இணைந்து கொள்ளும் பட்சத்தில் இன்றைய கூட்டு அரசில் பிளவு ஏற்படுவது நிச்சயமாகிவிடும். இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி தனித்து ஆட்சியமைக்க வேண்டுமானால் கூட்டமைப்பின் ஆதரவு அதற்கு அவசியம் தேவைப்படும். இதன் காரணமாகவே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சித் தேர்தல்கள் இடம் பெறப்போகும் நிலையில் இன்றைய கூட்டு அரசில் பிளவு ஏற்படுவது பெரும் குழப்பநிலையைத் தோற்றுவித்து விடும். மக்களும் குழம்பிப்போய் விடுவார்கள். மேலும் அரசுடன் ஒட்டி உறவாடுவதாக கூட்டமைப்புக்கு எதிரானவர்கள் தொடர்ந்து கூட்டமைப்பைக் குற்றம் சாட்டி வருகின்றனர். இதனால் நிலைமையை மிகுந்த அவதானத்துடன் கையாளவேண்டிய தேவை கூட்டமைப்புக்கு எழுந்துள்ளது.

**அரச தலைவருக்கு ஆதரவான சுதந்திரக் கட்சியினரது தயவால் அரசை நிறுவினார் ரணில்**

கடந்த 2015ஆம் ஆண்டு, ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி அதிக நாடளுமன்ற ஆசனங்களைப் பெற்ற போதிலும், அதனால் தனித்து ஆட்சிஅமைக்கமுடியவில்லை. மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த நாடளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடனேயே ஆட்சியை அமைக்க முடிந்தது.

அரசதலைவரைத் தெரிவுசெய்வதற்கான தேர்தலின்போது ஐக்கியதேசியக்கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேனவுக்கு முழு ஆதரவையும் வழங்கினார். அவரது ஆதரவு கிடைக்காமல் போயிருந்தால் தற்போதைய அரசதலைவரால் அந்தப் பதவியில் அமர்ந்திருக்க முடியாது. ஆனால் அதையெல்லாம் மறந்துவிட்டு மகிந்தவுடன் உறவைப் பேண அவர் முயற்சி செய்வதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

**ஐ.தே.கட்சியை தமிழ் மக்கள் நம்ப இயலாதென்பதே கள நிலவரம்**

இதேவேளை கூட்டுஅரசு தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு எதையும் காணவில்லை. காலத்தை இழுத்தடிக்கின்ற செயற்பாடுகளே இடம்பெற்று வருகின்றன. ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து செய்யமுடியாததை ஐக்கிய தேசியக்கட்சி தனித்து நிறைவேற்றி வைக்குமென்பதை ஒருபோதுமே ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.ரணிலின் தலைமையிலான அரசுடன் இணைந்து, அமைச்சுப் பொறுப்புக்களையும் ஏற்றுக்கொள்வதால் நன்மை எதுவும் கிடைக்கப்போவதில்லை.

விடுதலைப்புலிகள் பிளவுபடுவதற்கு ரணில் விக்கிரமசிங்கவே காரணமாக இருந்துள்ளார். இதைத் தமிழர்கள் இன்னமும் மறந்துவிடவில்லை. அத்துடன் இம்முறை புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் நிகழ்வையும், மாவீரர்தின நிகழ்வையும் தமிழ் மக்கள் சிறப்பாக கொண்டாடியுள்ளனர். இவை புலிகள் மீதான அவர்களின் ஈடுபாடு மங்கிவிடவில்லை என்பதை எடுத்துக்காட்டுகின்றன. இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்கவுடன் கூட்டமைப்பினர் உறவைப் பேணுவது சரியானதொரு செயலாக அமையமாட்டாது.

**கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஒரு பழுத்த அரசியல்வாதி. தமிழர்களின் நல் வாழ்வுக்காக அல்லும் பகலும் உழைப்பவர். இவர் தவறான முடிவு எதையும் எடுக்கமாட்டாரென உறுதியாக நம்பலாம். அந்த நம்பிக்கையைக் காப்பாற்றுவது கூட்டமைப்பி னரின் தலையாய கடமையாகும்.**

**இன்றைய நிலையில் அரசில் இணைவது கூட்டமைப்புக்கு பாதகமாகவே அமையும்**

மேலும் உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெறுகின்ற வேளையில் கூட்டமைப்பினர் அமைச்சர் பொறுப்புக்களை ஏற்பதும் சரியானதாகத் தெரியவில்லை. தவறான பரப்புரைகளில் ஈடுபடுவதற்கு எதிரணியினருக்கு இது வாய்ப்பு வழங்குவதாக அமைந்துவிடும். ஆகவே கூட்டமைப்பினர் பங்காளிகளுடன் இது தொடர்பாக நன்குபேசி ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டும். ஏற்கனவே எதிர்க்கட்சித் தலைமைப்பொறுப்பை ஏற்றுக் கொண்ட நிலையிலும், கூட்டமைப்பு இன்றைய அரசுக்கு வெளியிலிருந்து தனது ஆதரவைத் தெரிவித்து வருகின்றது. வரவுச்செலவுத்திட்டத்தின் மீதான வாக்கெடுப்பின்போதும் அரசுக்கு ஆதரவாகவே செயற்படுகின்றது. இதையே ஐக்கிய தேசியக்கட்சி அரசிலும் தொடர முடியும்.

தமிழ் அரசுக்கட்சி தனித்துச் செயற்பட்ட போது அன்றைய ஐக்கிய தேசியக்கட்சி அரசில் எம். திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராகப் பதவிவகித்தமை நினைவுக்கு வருகின்றது ஆனால் அன்றைய சூழ்நிலை வேறு இன்றைய சூழ்நிலை வேறு என்றுதான் கூற வேண்டும். இன்று தமிழ் மக்கள் தமது பிரச்சினை களுக்குத் தீர்வைக் காண முடியாது திண்டாடிக் கொண்டிருக்கின்ற வேளையில் கூட்டமைப்பினர் அமைச்சுப் பதவி போன்ற வரப்பிரசாதங்களைப் பெற்று அனுபவித்துக் கொண்டிருப்பது நல்லதாகத் தெரியவில்லை.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஒரு பழுத்த அரசியல்வாதி. தமிழர்களின் நல் வாழ்வுக்காக அல்லும் பகலும் உழைப்பவர். இவர் தவறான முடிவு எதையும் எடுக்கமாட்டாரென உறுதியாக நம்பலாம். அந்த நம்பிக்கையைக் காப்பாற்றுவது கூட்டமைப்பினரின் தலையாய கடமையாகும்.

> தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தமிழர்களின் ஓர் அடையாளம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாகக்கூட்டமைப்புடனேயேபேசவேண்டும்என்றநிலையே இன்றுவரைகாணப்படுகின்றது. இதைஉடைத்தெறிவதுதமிழ்மக்களையே உடைத்துப் பிளவு படுத்துவதற்குச் சமனானதாகும்.

# கூட்டமைப்பு பிளவுபடுவதற்கு மக்கள் ஆணை வழங்கி உள்ளார்களா?

இந்துமதி

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் ஆசனங்களைப் பங்கீடு செய்வதில் கூட்டமைப்புக்குள் குழப்ப நிலையொன்று தோன்றியுள்ளது. ஆசனப்பங்கீடு தொடர்பான பங்காளிக் கட்சிகளுடனான பேச்சுக்கள் சுருக்கமாக இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்ட நிலையில் தற்போது குழப்ப நிலை தோன்றியுள்ளதாகத் தகவல் வெளி வெளியானமை கூட்டமைப்பின் ஆதரவாளர்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே ஈபி ஆர்.எல்.எப் கூட்டமைப்பிலிருந்து கழன்று சென்றுவிட்டது. எஞ்சியுள்ளமூன்றுபங்காளிக்கட்சிகளும் கூட்டமைப்பில் தொடரும் என்ற நம்பிக்கை நீடித்துள்ள நிலையில், அது பொய்யாகி விடுமோ என்ற அச்சமும் தற்போது எழுந்துள்ளது. கூட்டமைப்பில் இருந்து ரெலோ அமைப்பும் வெளியேறி விட்டதாகப் பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழரசுக் கட்சியுடனான உறவை கூட்டமைப்பில் எஞ்சியுள்ள புளொட்டும் முறித்துக் கொள்ளுமானால் கூட்டமைப்பு என்ற பேச்சே அடங்கிவிடும்.

**தமிழ் மக்களை ஐக்கியப்படுத்த உருவாக்கப்பட்டதே கூட்டமைப்பு**

தமிழ் மக்களின் ஐக்கியத்தைப் பேணும் பொருட்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டது. ஆயுத பலத்தைப் புலிகளும், அரசியல் பலத்தைக் கூட்டமைப்பும் கொண்டிருந்ததால் தமிழர்கள் பலம் பொருந்தியவர்களாகக் காணப்பட்டனர்.

புலிகளின் காலத்துக்குப்பின்னரும் கூட்டமைப்பு தொடரவே செய்தது. கூட்டமைப்பில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய நான்கு கட்சிகள் அங்கம் வகித்தன. வடக்கில் இடம்பெற்ற மாகாணசபைத் தேர்தலில் வீ. ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியும், கூட்டமைப்பில் இணைந்து கொண்டது. கூட்டணியின் தலைவர் புலிகள் விரோதப் போக்கைக் கொண்டிருந்தார். நாடாளுமன்றத் தேர்தலில் தாம் தோல்வியைத் தழுவியமைக்குப் புலிகளே காரணமென அவர் குற்றம் சாட்டியிருந்தார். ஆனால் கடந்த மாகாணசபைத் தேர்தலில் அவரது சொந்தத் தொகுதியான கிளிநொச்சியிலேயே மக்கள் அவரை நிராகரித்து விட்டனர். தற்போது கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்ற ஈ.பி.ஆர். எல்.எப், ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து கொண்டதுடன் அந்தக் கட்சியின் சின்னத்தையும் ஏற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாடு சுதந்திரம் அடைந்ததன் பின்னர் கட்சி அரசியலால் தமிழர்கள் பிளவு பட்டு நின்றனர். ஆயுதப் போராட்டத்தின்போதும்போராளிகளிடையே பிளவுகளைத்தான் காண முடிந்தது. ஒருவரையொருவர் அழித்துவிடுவதற்கும் அவர்கள் தயங்கவில்லை. போராளிக்குழுக்கள் அனைத்தும் ஒன்றாகக் களத்தில்நின்றுபோராடியிருந்தால் போராட்டத்தின் முடிவு வேறுவிதமாக அமைந்திருக்கவும் கூடும்.





**எம்மவர்கள் இன்னமும் கடந்தகால அனுபவங்கள் மூலம் பாடம் கற்றுக் கொள்ளவில்லை**

கடந்தகாலஅனுபவங்களிலிருந்து பாடம் படிக்காதவர்களென எம்மவர்களைக்கருத வேண்டியுள்ளது. கொடிய போர் தந்த தீய விளைவுகளையும் அவர்கள் மறந்துவிட்டவர்கள் போன்று நடந்து கொள்கின்றனர். தமிழ் அரசியல் வாதிகள் பதவிகளை முன்நிறுத்தியே செயற்படுவதைக் காண முடிகின்றது. பதவிகளைப் பெறுவதற்காக அவர்கள் போட்டிபோடுவதையும் காண முடிகின்றது. உள்ளூராட்சித் தேர்தலிலும் இதே நிலைதான்.

இதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தமிழ் அரசியல் வாதிகளின் உள்ளக் கிடக்கையைத் தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டது. சிலர்தமிழ்அரசுக்கட்சியைக்குறை கூறுவதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளனர். கூட்டமைப்பின் பிளவுக்குதமிழ்அரசுக்கட்சியையே இவர்கள் குறை கூறுகின்றனர். இதே வேளை உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொகுதிவாரியாகவும் இடம்பெறவுள்ளதால் தமிழ் அரசுக் கட்சி தனித்துப் போட்டியிட்டாலும் அதனதுவெற்றிவாய்ப்புபிரகாசமாகவே காணப்படுகின்றது.

**தமிழ் மக்களது அடையாளமாகக் கருதப்பட்டது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**

ஆனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தமிழர்களின் ஓர் அடையாளம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் கூட்டமைப்புடனேயே பேச வேண்டும் என்ற நிலையே இன்றுவரை காணப்படுகின்றது. இதை உடைத்தெறிவது தமிழ் மக்களையே உடைத்துப் பிளவு படுத்துவதற்குச் சமனானதாகும்.

இதைத் தவிர்க்க வேண்டுமானால், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் விட்டுக் கொடுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். குறிப்பாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு இதில்முக்கியபங்குஉள்ளது. இந்த நிலையில், கூட்டமைப் பின் தலைவர் சம்பந்தன் கூட்டமைப்பின்ஒற்றுமையைக்கட்டிக்காக்கத் தாம்எதற்கும்தயாரெனக்கூறியுள்ளனர். அவர் அவ்வாறு கூறியது மட்டுமல்லாது செயலிலும் உடனடியாக இறங்கியுள்ளார். சம்பந்தனின் பிரதிநிதியொருவர் ரெலோவின் தலைவருடன் பேசியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இதன் பலாபலன்களைத் தெரிந்துகொள்ள ஒருசில தினங்கள் காத்திருக்க வேண்டியுள்ளது தற்போதுதமிழ்மக்கள்நிர்க்கதியான நிலையிலேயே உள்ளனர். அவர்களின் பிரச்சினைகளுக்கு கூட்டு ஆட்சி அரசினால் தீர்வு எதுவும் காணப்படவில்லை. இந்த நிலையில் அவர்களின் ஏக பிரதிநிதிகளாகக் கருதப்படும் கூட்டமைப்பு பிளவுபடுவது நல்ல சகுனமாகத் தெரியவில்லை. இதனால் அவர்கள் மேன்மேலும் இடர்களை எதிர்கொள்ளவே நேரிடும்.

ஆகவேகூட்டமைப்பின்பங்காளிக் கட்சிகள் தலைவர் சம்பந்தனுடன் விரிவாகப்பேசிஒருநல்லமுடிவுக்கு வர வேண்டும். கூட்டமைப்பில் இருந்து பிரிந்து செல்வது என்ற நிலைப்பாட்டை மனதில் வைத்துக் கொண்டு பேச்சுக்களில் ஈடுபடுவதால் எந்தப் பயனும் கிடைத்துவிட மாட்டாது. மேலும் கூட்டமைப்பை உடைப்பதற்கு மக்கள் இவர்களுக்கு ஆணையைவழங்கவில்லை என்பதையும் இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.



## ஆசிரியருக்கான கடிதம்

### நாங்களெல்லாம் ஏமாளிகளல்ல!

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பான ஆயத்த நடவடிக்கைகள் சூடு பிடித்துள்ளன. அந்தக் காலத்துத் தமிழ்த் திரைப்படமொன்றில் இரு நடன மங்கையர்களுக்கு இடையிலான நடனப்போட்டியை ரசித்துக் கொண்டிருந்த நடிகர் பீ.எஸ்.வீரப்பா, தன்னை மறந்து "சபாஷ் சரியான போட்டிதான்" என்று தெரிவித்திருப்பார். கட்சிகள் சார்பில் கட்டுப்பணம் செலுத்த முண்டியடிக்கும் எம்மில் ஒரு தரப்பினரைப் பார்க்கும்போது நடிகர் வீரப்பாவின் அன்றைய 'சபாஷ் சரியான போட்டிதான்' என்ற வசனத்தைத் தான் உச்சரிக்கத் தோன்றுகிறது. வருகுது! வருகுது! உள்ளூராட்சித் தேர்தல்! மூலை முடுக்கு களில் இருந்து வரிந்து கட்டிக் கொண்டு களத்தில் குதிக்க வரிசையில் வரப்போகிறார்கள் எம்மவர்கள் என்று கடந்த மாதம் நண்பரொருவர் சொன்ன வார்த்தை கண்முன்னால் நிதர்சனம் ஆகி வருகின்றது.

கடந்தநாடாளுமன்றத்தேர்தல், வடக்குமாகாணசபைத் தேர்தல் ஆகியவற்றில் எம்மவர்களால் வெறுத்தொதுக்கப்பட்ட, நிராகரிக்கப்பட்ட, போதிலும்தாமும் ஈழத்தமிழ் மக்களது பாதுாகவலர்கள் தான் தலைவர்கள்தான், என்று தப்புக்கணக்குப் போட்டு, எங்கேயோ ஒரு புறம் ஒதுங்கியிருந்த பிரபலங்கள் எல்லாம் இப்போது புற்றீசல்க ளாக வாக்குப் பிச்சைக்குப் புறப்பட்டிருப்பதுதான் வேடிக்கையாக இருக்கிறது. அதே சமயம் அவர்கள் மீது அனுதாபப்படவும் தோன்றுகிறது.

இத்தனைக்கும் இவ்விதம் குடைகொடி ஆரவாத்துடன், ஒரு கூட்டம் வால்பிடிகளோடு வாக்குவேட்டைக்கு வீட்டுக்கு வீடு வெளிப்படலையைத் தட்டப்போகும் இந்த முன்னாள் பிரபலங்கள் இன்னமும் கூட தமது முன்னைய சிண்டு பிடித்தனத்தினின்றும் தம்மை மாற்றிக் கொள்ளாது களத்துக்கு வந்தகையோடு ஒருவரை மற்றவர் வம்புச் சண்டைக்கு இழுக்கும் விதத்தில் கருத்து வெளியீட்டு வருகின்றனர்.

'முதுகில் புண் உள்ளவன் காடு நுழைய அஞ்சுவான்' என்றொரு முதுமொழி தமிழில் உள்ளது. இளம் சமுதாயத்தை இவர்களெல்லாம் கிள்ளுக்கீரையாக, குடுமி கட்டிய அந்தக்காலத்து வயது போனதுகளாகக் கருதுகிறார்களா?இவர்களதுஅரசியல்திருவிளையாடல்களை புட்டுப் புட்டு வைப்பதற்கு, இவர்களெல்லாம் ஈழத் தமிழ் மக்களை நம்பவைத்து மோசம் செய்வதற்கு ஒரு பாடம் கற்பிப்பதற்கான வாய்ப்பல்லவா எம்மைத் தேடித் தானாக வந்துள்ளது. இதனை எம்மவர்கள் இம்முறை வரிசை முறையில் பயன்படுத்தத் தவறவே போவதில்லை என்பது எனது கணிப்பு.

சரி, இந்த அரசியல் வெத்து வேட்டுக்கள் முன்னைய காலகட்டங்களில் மேற்கொண்ட 'கோணக்க மாணக்க' செயற்பாடுகள் குறித்து எமது இன்றைய இளம் சமுதாயத்தினரில் ஒரு சிலர் அறியாதிருந்தாலும் குடாநாட்டு ஊடகங்கள் நிச்சயம் அவற்றையெல்லாம் தோண்டித் துருவி வெளிக்கொண்டு வர தம்மிடையே போட்டி போட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில் இந்த முன்னாள்பிரபலங்களது'கோணக்க மாணக்க' செயற்பாடுகளெல்லாம் பத்திரிகைகளுக்குச் சிறந்த தீனியாக அமையத்தக்க சுவாரஸ்யம் மிக்கவை.

இத்தனைக்கும், இவர்களெல்லாம் இதுவொரு உள்நாட்டு மன்றங்களுக்கான தேர்தல் என்ற வகையில் எம்மவர்களது நாளாந்த வாழ்க்கையில் எம்மவர்கள் எதிர்நோக்கும் வசதியீனங்கள், தேவைப்படும் அபிவிருத்திச் செயற்பாடுகள் பற்றிக் கொஞ்சமேனும் கருத்தில் கொள்ளாது, ஆண்டாண்டு காலமாகத் தாம் பேசிப்பழகியிருந்த தமிழ் மக்களது அரசியல் பிரச்சினைக ளுக்குத்தாம் தீர்வுகள் கண்டு உதவுவதாகத் தமக்கு வாக்களித்துத் தம்மைத் தேர்ந்க்குதெடுக்குமாறு 'விடுகை' விட ஆரம்பித்திருப்பதைக்கேட்டு நாங்களெல்லாம் சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்த்தமை போன்று பேதலித்து விடுவோம் என இவர்களெல்லாம் நம்புகிறார்களா?

ப.உருத்திரன், நீர்வேலி.

# ‘மெய்ப்பொருள் நாயனார்’



## சிவ பக்தியின் தீராத மெய்யுணர்வாளன்

கனகசபை

சிவனடியார்களிடத்திலும், சிவவேடம் தரித்தலிலும் மிகுந்த அருளுவகையும் பக்தியும் கொண்ட மெய்ப்பொருள் நாயனாரின் குருபூசை தினம் இன்று நாடெங்கிலும் உள்ள சைவ மக்களால் கொண்டாடப்படுகிறது.

**மெய்ப்பொருள் நாயனார்**

மலையமான் நாட்டிலே திருக்கோவிலூரிலே ஓர் அரசர் இருந்தார். அவர் விபூதி, உருத்திராக்கம் முதலான சிவ வேடங்களை மெய்ப்பொருளாக மதிப்பவர். அதன் காரணம் கொண்டே அவருக்கு மெய்ப்பொருள் நாயானார் எனும் பெயரும் வழங்கலாயிற்று.

**சிவ பக்தி**

தனது இராச்சியத்தை நீதி தவறாது நன்னெறியோடு ஆட்சி புரிந்து வந்தார். சிவாலயங்களில் பூசை மற்றும் திருவிழாக்களை எந்தவித குறையுமின்றி மிகவும் சிறப்பாக நடத்தி வந்தார். சிவனடியார்களை அன்பாக உபசரித்தும், அவர்களுக்கு வேண்டிய பொன், பொருள் போன்றவற்றையும் கொடுத்து வந்தார்.

**முத்தி நாதன் கொண்ட அகங்காரம்**

இப்படிச் சிறப்பாக நாட்டினை அரசாட்சி புரிந்துவரும் போது, முத்திநாதன் எனும் அரசன் மலையமான் நாட்டின் மீது பல முறை போர் தொடுத்தான். மெய்பொருள் நாயனாரோடு பல முறை போர்புரிந்தாலும் தோற்றுப்போனான். இறுதியில் மெய்ப்பொருள் நாயனாரை பேர் நெறிமுறையூடு வெல்ல முடியாது என்பதை உணர்ந்துகொண்ட முத்திநாதன் அவரை வஞ்சனையால் வென்றுவிடுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டான். நாயனார் சிவனடியாரிடத்தில் மிக்க அன்புள்ளவரென்பதையும் முத்தி நாதன் நன்கறிந்திருந்தான்.

**வேடம் புனைதல்**

அதன்படியே முத்திநாதன், ஒரு நாள் தன் உடல் முழுமையுமாக விபூதியை பூசிக் கொண்டு சடைகளை முடித்துக்கட்டி, காவியுடை அணிந்து ஒரு புத்தகப்பையினுள்ளே ஈட்டியை மறைத்து வைத்தபடி நாயனாரது அரண்மனைக்குச் சென்றான். அரண்மனையின் வாயிற் காவலர்களும் அவரைச் சிவனடியார் என்றே நினைத்து எந்தவித சோதனையும் செய்யாது அரண்மனையின் உள்ளே செல்வதற்கான அனுமதியை வழங்கினர். இந்த சந்தர்ப்பத்திலே கடை வாயிலில் நின்ற 'தத்தன்' என்னும் சேவகன், சிவனடியார் வேடத்தில் இருந்த முத்திநாதனை விழித்து, “சுவாமி…! அரசர் தற்பொழுது ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறார். அவர் துயில் எழும்பும் நேரத்தில் செல்வதே நன்று.” என்றான்.

**சிவனடியார் வேடத்தில் உள்ள எதிரிக்கு மதிப்பளித்தல்**

தத்தன் கூறியவற்றை கேண்மையுற்ற முத்திநாதன், “வாயிற் காப்போனே…! நான் அவருக்கு ஞான நூலை கற்பிக்கவே போகிறேன். என்னைத் தடுக்க வேண்டாம்.” என்று கூறி அரண்மனை வாயிலைத் தாண்டி உள்ளே நுழைந்தான். சிவனடியார் ஒருவரின் வருகையை அறிந்த மெய்ப்பொருள் நாயானாரின் துணைவியார், அவரை உறக்கத்திலிருந்து துயிலெழச் செய்தார். சிவனடியார் ஒருவரின் வருகை குறித்து எடுத்துரைத்தார். காலதாமதமின்றி அரண்மனை நீங்கி வெளிப்பட்ட மெய்ப்பொருள் நாயனார், வருகை தந்திருந்த முத்திநாதனை சிவனடியார் என்று நினைத்துத் தலைவணங்கினார். பின்பு, “சுவாமி…….! இங்கே தாங்கள் எழுந்தருளியதன் காரணம் யாது..?” என்று வினவினார்.

**மெய்ப்பொருள் நாயனாரைக் காயப்படுத்தல்**


அதற்கு முத்திநாதன் பதிலுரைத்தான். “வேறு எவரிடத்திலும் இல்லாத ஓர் ஆகம ஞானத்தினை உமக்குப் போதிக்கும் காரணம் கொண்டே உமை நாடி இங்கு வருகை தந்துள்ளேன்.” என்றான். இதையறிந்த மெய்பொருள் நாயனார் மிகுந்த ஆனந்தம் கொண்டார். பின்பு, “சுவாமி அடியேனுக்கு அதைப் போதித்தருள வேண்டும்.” எனக் கூறி சிவனடியாரை ஆசனத்தில் அமர்த்தினார். ஆசனத்தின் அருகாகவே தரையில் கீழே அவரும் அமர்ந்து கொண்டார். கண்களை மூடி சிவனடியார் வேடத்தில் இருந்த முத்திநாதனை தியான நிலையில் வணங்கினார். சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்ட முத்திநாதன் தான் மறைத்து வைத்திருந்த ஈட்டியை எடுத்து நாயனாரை குத்தினான். நடைபெறும் விபரீதங்களைக் அவதானித்த தத்தன் அவ்விடம் வருகை தந்தான். தன் கைவாளினாற் சிவனடியாராக வந்த முத்தி நாதனை வெட்டிச் சாய்த்திட விரைந்தான்.

**இறை பக்தியின் மெய்யுணர்தல்**

மெய்ப்பொருள் நாயனார் தத்தனைத் தடுத்து நிறுத்தினார். அவனை விழித்து, “தத்தா…! இவர் சிவனடியாராதலால், இவருக்கு ஒரு துன்பமும் செய்யாதே” என்றார்.

ஏதுமறியாதவனாய் நின்ற தத்தன், நாயனாரைப்பார்த்து “சுவாமி…! அடியேன் செய்யக் கூடிய ஏவல் யாது…?” என்று வினவினான். மெய்ப்பொருள் நாயனார் பக்தியின் ஆசுவாசத்தோடு “வழியிலே ஒருவரும் துன்பம் செய்யாதபடிக்கு இவரை அழைத்துச் சென்று நம் ஊர் எல்லையில் விட்டுவிட்டு வா” என்றார். அதன்படியே தத்தன் ஒழுகினான். சிவனடியார் எந்தவித இடையூறுமின்றிப் போய்விட்டார் என்ற செய்தியை அறிய வேண்டும் என விரும்பிய நாயனார் உயிருடன் இருந்தார். இந்தநிலையில் நடந்த சம்பவங்கள் அத்தனையையும் அறிந்துகொண்ட ஊர் மக்கள் முத்திநாதனைத் தண்டிக்கப் புறப்பட்டனர். இருப்பினும் “சிவபக்தருக்கு ஒரு துன்பமும் செய்யக் கூடாதென அரசர் கட்டளையிட்டார்” என்று கூறி தத்தன் அவர்களைத் தடுத்து நிறுத்தினான்.

> மலையமான் நாட்டிலே திருக்கோவிலூரிலே ஓர் அரசர் இருந்தார். அவர் விபூதி, உருத்திராக்கம் முதலான சிவ வேடங்களை மெய்ப்பொருளாக மதிப்பவர். அதன் காரணம் கொண்டே அவருக்கு மெய்ப்பொருள் நாயானார் எனும் பெயரும் வழங்கலாயிற்று.



இன்று மெய்ப்பொருள் நாயனார் குருபூசை தினம்

**கைலயம் பெருமான் மெய்ப்பொருளாருக்கு முக்தியளித்தல்**


முத்திநாதனை ஊர் எல்லையில் சேர்ப்பித்து மெய்ப்பொருள் நாயனார் முன்பாக வந்து நின்றான் தத்தன். அவரைப் பணிந்து, “சுவாமி…! சிவபக்தருக்கு இடையூறு ஒன்றும் நேராதபடி ஊர் எல்லையில் கொண்டு போய் அவரைச் சேர்ப்பித்துவிட்டேன்” என்றான். அப்போது மெய்ப்பொருள் நாயனார், “இன்றைக்கு நீ செய்த உபகாரத்தை வேறு யார் செய்ய வல்லவர்” என்று கூறி கண்ணீர் மல்கினார். தத்தனை பரிவுடன் அரவணைத்தார். தன்னுடைய குமாரர்களையும், அரசவை மந்திரிமார்களையும் அவ்விடம் அழைப்பித்தார். வேத ஆகமங்களைப் போதித்து, கைலயம் பெருமானை தியானம் கொண்டார். என்ன ஆச்சரியம், சிவப் பரம்பொருள் அவர் முன்பாக திருக்காட்சி தந்து, அவரை தம்முடைய திருவடியிலே சேர்த்து முக்தியளித்தார்.

**இறையருளைப் பணிவோம்**

இது புராணங்கள் கூறும் திருத்தொண்டர் பக்தியின் மகிமையுறு தன்மை. இறை அருளின் மேன்மைமிகு சிறத்தல். பார்வையுள் காண்பியம் கொண்டு அருள் இன்பம் தனை சுகிப்போம். ஆக, சைவ சமயிகளாக நாங்களும் அவருடைய வழியைப் பின்பற்றியிருப்போம். சைவசமயத்தை மேன்மைபெறச் செய்திட ஆக்க பூர்வமான பங்களிப்பை வழங்கியிருப்போம்.

> “இது புராணங்கள் கூறும் திருத்தொண்டர் பக்தியின் மகிமையுறு தன்மை. இறை அருளின் மேன்மை மிகு சிறத்தல். பார்வையுள் காண்பியம் கொண்டு அருள் இன்பம் தனை சுகிப்போம். ஆக, சைவ சமயிகளாக நாங்களும் அவருடைய வழியைப் பின்பற்றியிருப்போம்.

**“இறை சிந்தனை தரும் சித்தியை தியானம் கொள்வோம்”**



# 'மகாகவி பாரதியார்'



## தமிழின் கோ(மே)ன்மையுடைய வே(பூ)ட்கை உடையோன்

சிவரம்யா

"சுவைபுதிது, பொருள்புதிது, வளம்புதிது, சொற்புதிது, சோதிமிக்க நவகவிதை எந்நாளும் அழியாத மகா கவிதை" என்று தனதான எழுத்தாளுமையைபெருமையுடனும், கர்வத்துடனும் கூறித்தமிழ்க்கவிதைக்குப்புதியசகாப்தத்தைஏற்படுத்திய மகாகவி பாரதியாரை நாம் என்றும் நினைவு கொள்ள வேண்டும். "தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்" என்று பாடிக் களித்து இன்புற்றிருந்தான் அவன். இத்தகு மேன்மையுடைய பெருந்தகை தாய்த் தமிழ் மொழி மீது கொண்டிருந்த காதலையும், தன் தாய் நாட்டின் பால் கொண்ட பற்றினையும், கடவுளின்மீதுகொண்டபக்தியையும்நாம்மறந்திடலாகாது.

**பிறப்பு**

இந்தியாவின்தமிழ்நாட்டில்மார்கழிமாதம்11ஆம்திகதி 1882ஆம்வருடம்ஸ்ரீசின்னசாமிஐயாவுக்கும், ஸ்ரீமதி லக்ஷ்மிஅம்மாளுக்கும் இறையருளால்கிடைத்ததிவ்ய கடாட்சமாக ஸ்ரீசுப்பிரமணிய பாரதியார் அவதாரம் கொண்டார். 'செல்லப்பா', 'சுப்பையா' என்ற அன்புக்குரிய நாமகரணங்களையும் கொண்டு விளங்கினார்.

**கல்வி**

பாரதியார் ஐந்து வயதுடைய பாலகனாய் அழகியல் நடைபயின்றதருணத்தில்அவருடையதாயார்லக்ஷ்மி அம்மாள்காலமானார். அதன்பின்பு1889ஆம்ஆண்டு பாரதியாரின் தந்தை மறுதார மணம் புரிந்து கொண்டார். பாரதியாருக்குஉபநயனமும்செய்வித்தார். பாரதியார்பதினொருவயதினைஅடைந்ததும், எட்டயபுரம் சமஸ்தானப் புலவர்கள் இவருக்கு 'பாரதி'என்ற பட்டத்தை வழங்கினர். இவர் திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் ஐந்தாம் வகுப்புவரை கல்வி பயின்றார். 1897ஆம் ஆண்டு பாரதியார் செல்லம்மாளை மணம் புரிந்துகொண்டார். 1921 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 11 ஆம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தார்.

**பாரதி கொண்ட சுதந்திர வேட்கை**

இவர் கொண்ட அமைதி அற்புதமானது. சுதந்திரம் என்கின்ற வேட்கை விடியலின் ஆயுதமானது. அந்தவகையிலே, தமிழ்நாட்டில்சுதந்திரம்என்கின்றஉரிமையின் ம(த)ந்திரத்தை மக்களுக்குப் போதித்தார். அவர்களிடையே சமூக விடுதலையின் ஆர்வத்தை ஊட்டினார். அதன்வழி தனிச்சிறப்பொடு மேன்மையுற்று விளங்குகிறார்.

என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்
என்று பாடி பாரதி கொள்ளும் விடியலின் (வி)வேகம் ஆத்மார்த்தமானது.

**பாரதி கண்ட பெண் விடுதலை**

பெண்விடுதலை குறித்து அவர் கொண்ட கருத்தின் கண்ணியங்கள்பேசற்கரியது. இவருடைய காலத்தில் பெண்கள் கீழ்மைப்படுத்தப்பட்ட நிலை கண்டு மனம் வெதும்பினார். அவர்களுக்காககுரல்கொடுத்தார். குறிப்பாக, பெண்களை ஆண்களுக்குச்சரிநிகர் சமானமாய் நடத்தவேண்டுமென்றஉயரியஎண்ணக்கணிப்பைக் கொண்டிருந்தார்.

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்

என்று அறிவுரையின் பணிப்புரையை 'புதுமைப் பெண்' என்ற பாடல் பகுதியிலே பாடிப் பரவியுள்ளார். மக்களிடையே காணப்பட்ட சாதி பற்றிய உயர்வு, தாழ்வுகள்களையப்பட்வேண்டும்என்றுகருத்துரைகளை விதந்துரைத்தார். சுதந்திர உணர்வோடு புதுமை வேண்டி பாரதத்திலே புரட்சிகள் செய்தார்.

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்
வையவாழ்வு தன்னிலெந்த
வகையினும் தன்னிலெந்த
வகையினும் நமக்குள்ளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழ்வோம் இந்த நாட்டிலே

என்றுவார்த்தைநயம்சூடிவிடுதலைப்பாடல்பாடினார். தமது இலட்சிய வேட்கையை ஆழமான கருத்தூட்டமாக வெளிப்படுத்தினார்.

**பாரதி ஒன்றுகூட்டிய தாய் மொழிப் பிடிமானம்**

நாம் இன்று ஆங்கில மொழி பேசுவதையும், புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் பணம் சம்பாதித்து வாழ்வதையும்பெருமையாககொண்டுள்ளோம். தாய்மொழி மீதும், தாய்நாட்டின் மீதும், இறைவன் மீதும் அன்பும் பக்தியும் இன்றி அங்கலாய்க்கிறோம். மாயையுள் சிக்குண்டு இடர் மிகுந்து அறிவிலி மனிதர்களாக வாழ்கிறோம். இந்தநிலையிலேஎட்டயபுரத்துக்கவியாய்பாரதி பகர்ந்த கவிதைகள் நல் அறிவை ஊட்டுகின்றன.

வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ
வீட்டுவார்த்தை கற்கிலாய் போ போ போ

என்று அவன் கடிந்து பாடும் தன்மை அளப்பரியது. இயற்கையிடத்தே பாரதி கொண்ட ஈடுபாடு போற்றுதற்குரியது. இயற்கையை, சுற்றுப்புறச்சூழலை இரசித்து, கற்பனையில் அவன் கொண்ட பாக்கள் தீராத களிப்புடையவை.

**பாரதி தரித்த இயல்பாளுமை**

இளமைப் பருவத்திலேயே கடவுள் பக்தி மிகுந்தவராக விளங்கினார். பத்திரிகைத்துறையில் சிறந்து விளங்கினார். தமிழ் கவிதைகளை எல்லோரும் பொருள் உணர்ந்துவிளங்கிப்படிக்கும்வகையில்எளிமையான வார்த்தைப் பிணைப்புகளை கட்டமைத்தார். தமிழை நீக்கமற பூஜித்து வாழ வைத்தார். நிறைவான தமிழ்த் தொண்டாற்றினார். வாழ்க்கைமுழுமையையும்இலட்சிய வாழ்க்கைப் பயணமாகவே அமைத்துக்கொண்டார். எல்லோரிடத்தும் கள்ளங்கபடமின்றிய அன்பினைக் கொண்டிருந்தார். குழந்தையுள்ளமாய் தமிழை மழலையுற செழிப்புறச் செய்தார்.

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்

என்று பாரதி பாக்கள் சூடியமைக்கு அவனே தக்க சான்றாக திகழ்கிறான். உண்மை நிலவிய உள்ளத்தின் வெளிகண்டு எழுந்த வாக்குகள் ஒவ்வொன்றும் ஒளியின் பிரவாகமாய் இருண்மையை நீக்கின.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்

என்று கனவு கண்டான்.

**பாரதி பூண்ட குழந்தை உள்ளம்**

மேலும், பாரதியாரின் பாப்பாப்பாட்டு, முரசுப்பாட்டு மற்றும் ஆத்தி சூடி முதலியன சிறுவர்களின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டன. எளிய பாடல்களாய் இளைஞர்களுக்கு ஊக்கமும், உணர்ச்சியும் அளித்தன. முரசுப் பாட்டிலேஅன்பு, ஒற்றுமை, சமத்துவம்முதலியவற்றை மிக எளிமையாகப் பாடியிருக்கிறார் பாரதி. பாப்பாப்பாட்டிலே அவர் கூறியுள்ள அறிவுரைகள் அனைத்தும்அற்புதமானவை. அவைதரும்அறிவுரைகள் சிறப்பானவை.

உயிர்களிடத்தில் அன்பு வேணும் –தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
வயிரமுடைய நெஞ்சு வேணும் – இது
வாழும் முறைமையடி பாப்பா

குழந்தைகளுக்காக பாரதி கொண்ட வார்த்தைகள் பிள்ளைநேயப் புரிதலுடையவை.

ஓடிவிளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா..!
கூடிவிளையாடு பாப்பா – ஒரு
குழந்தையை வையாதே பாப்பா..!

**பாரதி பாடிய தமிழ் வாழ்த்து**

வீரம், சத்தியம், நேர்மை, கடமை, அன்பு, இறைபக்தி என்பவற்றை கூறுவதாக பாரதியார் தந்த கவிதைகள் வாழ்வியல் கூறானவை. மகத்துவமானவை. அவர் தமிழழைப் போற்றித் துதிக்கும் தன்மை அருளின் பார்வை. குறிப்பாக,

வாழிய செந்தமிழ்...! வாழ்க நற்றமிழர்..!
வாழிய பாரத மணித்திரு நாடு..!

மற்றும்

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்...!
தே மதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்
வகை செய்தல் வேண்டும்!
என்ற கவி நாடங்களைக் குறிப்பிடலாம்.

**பாரதியின் காதல் வழி இலட்சியம் கொள்வோம்**

ஆதிபராசக்தியவளைவேண்டிப்பணிந்தார். அவளிடத் தாய் நிறை அன்பு காட்டி வரங்கள் கேட்டார். காதலைப் போற்றினார். 'கண்ணம்மா என் குழந்தை' , 'கண்ணன் என் விளையாட்டுப் பிள்ளை' என்று பாடிப் புதுமைகள் செய்தார்.
தீமைகள், சூழ்ச்சிகள், கவலைகள், துன்பங்களை வெற்றிக் கொள்ள தாங்கும் சக்தி எமக்கு வேண்டும் என்று இடித்துரைத்தார். சிறுமைத்தனம்கண்டுபொங்கினார். அவர் எமக்காய் பாடிய பணிவை நாம் பணிவோம். என்றும் பாடிப் பரவுவோம்.

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
இச்சகத்துளோரெலாம் எதிர்த்து நின்ற போதினும்



இவர் கொண்ட அமைதி அற்புதமானது. சுதந்திரம் என்கின்ற வேட்கை விடியலின் ஆயுதமானது. அந்தவகையிலே, தமிழ்நாட்டில் சுதந்திரம் என்கின்ற உரிமையின் ம(த)ந்திரத்தை மக்களுக்குப் போதித்தார். அவர்களிடையே சமூக விடுதலையின் ஆர்வத்தை ஊட்டினார். அதன்வழி தனிச்சிறப்பொடு மேன்மையுற்று விளங்குகிறார்.

# யார் முட்டாள்?





ஒரு பண்ணையாரிடம் வேலைக்காரன் ஒருவன் இருந்தான். அவனிடம் எதைச் சொன்னாலும் அதற்கு எதிர்க் கேள்வி கேட்காது அதைச் செய்யவே மாட்டான். இல்லாத சந்தேகங்களையெல்லாம் எழுப்புவான், ஒரு நபரைப் பார்த்து விட்டு வா என்றால், அவர் அங்கு இல்லாவிட்டால் என்ன செய்வது? அவர் வெளியூர் சென்றிருந்தால் அவர் வருகின்றவரை இருந்து பார்த்து விட்டு வரவோ? எத்தனை நாள் தங்குவது? என்று கேள்விமேல் கேள்வி கேட்டுக் குழப்புவான்.

பண்ணையார் பல சந்தர்ப்பங்களில் "இவனோடு பெரும் தொல்லையாக இருக்கிறதே!" என்று கூட நினைப்பதுண்டு. அவன் அவரிடம் பல வருடங்களாக வேலை செய்வதாலும். அவன் நேர்மையுள்ளவன் என்பதாலும் அவனின் இந்தத் வேண்டாத தொல்லையை அவர் சகித்துக் கொண்டார். ஆனால் எப்படியும் அவனைத் திருத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்ட பண்ணையார் ஒரு நாள் அவன் கழுத்தில் "இவன் ஒரு முட்டாள்"என்று ஒரு தகட்டில் எழுதி மாட்டி விட்டார். இதனைப்பார்த்தாவது அவள் திருந்துவான் என்பது அவர் நினைப்பு, ஆனால் அவன் அதைப் பொருட்படுத்தவே இல்லை. வழக்கம் போலவே நடந்து கொண்டிருந்தான்.

ஒரு நாள் பண்ணையார் நோய் வாய்ப்பட்டு படுத்த படுக்கையானார். "இனி நான் பிழைக்க மாட்டேன் சாகப் போகிறேன்" என்றார். "சாவது என்றால் என்ன?" என்று கேட்டான் வேலைக்காரன்.

"தெரியாத ஊருக்குப் போதல்" என்றார் பண்ணையார். தொடர்ந்து வேலைக்காரன் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தான். பண்ணையாரும் பதில் கூறிக் கொண்டிருந்தார். "தெரியத ஊருக்கு எந்த வழியால் செல்வீர்கள்? அது எவ்வளவு தூரம்?"

"தெரியாது."

"தேரில் போகலாமா?"

"தேர் போகாது."

"குதிரையில் ஏறிப் போகலாமா?"


"குதிரையும் போகாது."

"வண்டி அல்லது பல்லக்கு?"

"எதுவுமே போகாது. என்றார் பண்ணையார்"

"ஐயா! தாங்கள் ஊருக்குப் போவதாகக் கூறுகிறீர்கள். ஆனால் அது எங்கிருக்கிறது? எந்த வழியால் செல்வது? ஊர் எவ்வளவு தூரம்? என்ற விவரங்கள் எதுவும் உங்களுக்குத் தெரிய வில்லை என்றும் குதிரை மட்டுமல்ல வாகனங்கள் எதுவும் போகாது என்றும் கூறகிறீர்கள். ஆதலால் என்கழுத்தில் நீங்கள் மாட்டிவிட்ட அட்டையை அணிந்து கொள்ளத்தகுதியானவர் நீங்கள் தான்" என்று கூறி படுத்த படுக்கையில் இருந்த பண்ணயையாரின் கழுத்தில் தன்கழுத்தில் இருந்த 'இவன் ஒரு முட்டாள்' என்ற வாசகம் எழுதப்பட்ட தகட்டை மாட்டி விட்டான்.

அந்த இயலாத நிலையிலும் வேலைக்காரனின் இந்தச் செயலால் அவர் கோபமடைய வில்லை. மாறாக அவன் சொல்வது கூட ஒரு வகையில் சரிதானோ என்றும், இப்போது அவன் முட்டாளா? தான் முட்டாளா? என்றும் சிந்திக்கத் தொடங்கினார்.



# வேங்கைப் புலி

புலிகளில் பல இனங்கள் உள்ளன. ஆனால் வேங்கைப் புலிதான் பூனை வகை இனத்திலேயே மிகப் பெரியது. வேங்கைப்புலி பங்களாதேஷ், இந்தியா, வியட்நாம், மலேசியா மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகளின் தேசிய மிருகமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு வேங்கை ஒரு முறையில் 88 இறாத்தல் இறைச்சியை உண்ணக் கூடியது. இதன் உடலில் காணப்படும் வரிகள் அதன் உரோமத்தில் மட்டுமன்றி அதன் உடலின் சருமத்திலும் காணப்படும்.

வேட்டையாடும் போது புலியானது தனது இரைக்குரிய மிருகத்தின் தொண்டைப் பகுதிலேயே தனது பலமுள்ள பற்களால் ஆழமாகக் கடித்து நிலத்தில் சரித்து அது உயிர் துறக்கும் வரை விடாமல் பிடித்திருக்கும், பங்களாதேஷ் மற்றும் சைபீரியன் புலிகளில் வெள்ளைப் புலிகளும் அருமையாகக் காணப்படுகின்றன. இருந்தாலும் இவைகளின் உடலில் வரிகள் காணப்படும்.

புலிகள் பெரும்பாலும் தனித்துத் தமக்கென எல்லைகளை வகுத்துக் கொண்டு வாழும் வெப்பப் பிரதேசங்களில் காடுகள் புல்வெளிகள் மற்றும் விசாலமாக பற்றைக் காடுகளில் இவை வாழும். நீந்தும் திறமையுள்ள இந்தப் புலிகள் குளங்கள் தடாகங்கள் போன்ற நீர்நிலைகளில் விருப்பமுடன் நீந்தி மகிழும். இவை பெரும்பாலும் இரவுகளிலேயே வேட்டையாடும். இவை மான், மரை மற்றும் எருமைகளைக் கொன்று சாப்பிடும். வேங்கைப் புலிகளில் ஆறு வகை இருப்பதாகக் கூறப்படுகிறது.

பெங்கால் புலி, இந்தோசி சீனப்புலி, சுமத்திரப் புலி என அது வகைப்பட்டுள்ளது. இவைகளில் பாலி,கஸ்பியன் மற்றும் ஜாவா புலிகள் அழிந்து விட்டதாகக் கூறப்படுகிறது. புலிகளுக்குரிய விஞ்ஞானப் பெயர் பந்தேராடை க்ரிஸ் என்பதாகும்.

## பாடசாலை செல்லும் சிறார்கள்




சின்னச் சின்னக் கால்களே!
எங்கு நடந்து போகிறீர்?
பள்ளிக் கூடம் போகவே!
பாங்காய் நடந்து போகிறோம்.

அசைந்து ஆடும் கைகளை!
ஏன் அசைத்துப் போகிறீர்?
கைகள் பலம் கொள்ளவே
கைகள் அசைத்துப் போகிறோம்

அங்கும் இங்கும் தலைகளை
ஆட்டிக் கொண்டு போகாதீர்
ஆபத்துக்கள் வந்துவிடும்
அவதானம் கொண்டு வருவீர்

## ஐந்து வித்தியாசங்களை கண்டுபிடிப்போம்.





## இளமையில் சாதனை

- அக்பர் தன் 12ஆவது வயதில் முடி சூடினார்.
- அலெக்ஸ் சாண்டர் 18ஆவது வயதில் மன்னரானார்.
- மாணிக்க வாசகர் 24ஆவது வயதில் திருவாசகம் பாடினார்.
- சந்திரகுப்தர் 25ஆவது வயதில் மௌரியப் பேரரசை நிறுவினார்.
- காந்தியடிகள் 25ஆவது வயதில் தென்னாபிரிக்காவில் அறப்போராட்டம் நடத்தினார்.
- மார்க்கோனி 27 ஆவது வயதில் வானொலியைக் கண்டுபிடித்தார்.
- நெப்போலியன் 27ஆவது வயதில் ஆஸ்திரிய நாட்டை ஆண்டான்.
- கிரஹம்பெல் 29 ஆவது வயதில் தொலைபேசியைக் கண்டுபிடித்தார்.




கேள்விக்குறி உள்ள இடத்தில் வரவேண்டிய பொருத்தமான துண்டைக் கண்டுபிடிப்போம்

# விஜய்யுடன் நடிப்பதற்கு நடிகை ஓவியா மறுப்பு



சினிமா

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடிக்கவிருக்கும் 'தளபதி 62' படத்தில் விஜய்யுடன் நடிக்க ஓவியா மறுத்தார் என்று தகவல்கள் வெளியாகின.

'பிக்பாஸ்' நிகழ்ச்சி மூலம் பரபரப்பாக பேசப்பட்டவர் ஓவியா. இதையடுத்துப் பட வாய்ப்புகளும், விளம்பர வாய்ப்புகளும் அவரைத் தேடிவந்தன. தற்போது ராகவா லோரன்ஸுடன் 'காஞ்சனா3' படத்தில் நடித்து வருகிறார்.

ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடிக்கும் அவரது 62ஆவது படத்தின் படப்பிடிப்புப் பணிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன. இந்தப் படத்தில் நடிக்க ஓவியாவுடன் பேசப்பட்டது என்றும் அதற்கு அவர் மறுப்புத் தெரிவித்தார் என்றும் தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓவியா சாதாரணமான ஒரு கதாபாத்திரத்தில் நடிப்பதற்காகவே படக்குழு அவரை அணுகியது. பாத்திரம் வலுவற்றதை அடுத்தே ஓவியா படத்தில் இருந்து விலகினார் என்று சொல்லப்படுகிறது.

**பொன்னுங்கள எல்லாம் சைட் அடிக்க மாட்டேன்...**





**அவங்க என்னைய பாக்குறாங்களான்னு அப்பப்போ திரும்பிப் பார்ப்பேன் சேர்.....**




**நிம்மதியைத் தேடி அலைவதை நிறுத்தியதில் தெரிந்தது எதையும் தேடி அலையாமலிருப்பதே நிம்மதி என்று...**

## கடந்து போதல்

- அமைதியாக அமர்ந்து பார்த்துக் கொண்டிரு.
- துயரம் வரும்போது அதை அடையாளம் கண்டு கொள்
- அது நல்லது கெட்டது என்றோ இது எனக்கு வந்திருக்கக் கூடாது என்றோ வந்திருக்க வேண்டும் என்றோ மதிப்பீடு செய்யாதே
- துன்பம் வந்திருப்பதை பற்றி மட்டும் விழிப்போடு இரு. அதை உணர்ந்திரு
- மகிழ்ச்சியை உண்டாக்க முயற்சி செய்யாதே.
- செய்தால் அடுத்த பக்கமும் சேர்ந்தே வரும்.
- மகிழ்ச்சி வந்தால் அதைப் பிடித்து வைத்துக் கொள்ள முயற்சி செய்யாதே.
- இல்லாவிடில் மற்றொரு பக்கத்தையும் சேர்ந்தே அனுபவிக்க நேரிடும்.
- திரும்பவும் துயரம் வந்து சேரும்.
- நீ தொடர்ந்து கவனித்துக் கொண்டே இருந்தால் துன்பம், மகிழ்ச்சி இரண்டையும் பார்த்துக் கொண்டே இருந்தால் திடீரென ஒரு நாள் நீ தனித்து இருப்பதை இரண்டிலிருந்தும் தனியாக பிரிந்து இருப்பதை, உணருவாய்.
- இந்த விஷயங்கள் அனைத்தும் உன்னைச் சுற்றி நடப்பவை மட்டும்தான்.
- நீ அவற்றுக்கு அப்பாற் பட்டவன் என்பது உனக்குத் தெரிய வரும்.





## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிர்பார்த்த தகவல் கிடைக்கத் தாமதமாகும். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் உழைப்புத் தேவைப்படும். உணவு விடயத்தில் கவனம் தேவை.

**இடபம்:** உடல்நலனில் அக்கறை கொள்வீர்கள். வாக்குறுதி நிறைவேற்றத் தாமதம்ாகும். தொழில், வியாபார வளர்ச்சிக்கு புதிய உத்தியைப் பின்பற்ற வேண்டும்.

**மிதுனம்:** செயலில் உற்சாகம் நிறைந்திருக்கும். தொழில், வியாபார நடைமுறையில் இருந்த சிரமம் குறையும். ஆதாயப் பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். பணவரவை விட செலவு அதிகரிக்கலாம்.

**சிங்கம்:** இஷ்ட தெய்வ அருளால் நீண்டநாள் பிரச்சினை தீரும். தொழில், வியாபாரத்தில் நல்ல பலன் ஏற்படும். பணப் பரிவர்த்தனையில் திருப்திகர நிலை உண்டு.

**கன்னி:** அவமதித்துப் பேசுவோரைக் கண்டு கொள்ளாதீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் உழைப்பு அவசியம். அளவான பணவரவு கிடைக்கும்.

**துலாம்:** நண்பர், உறவினர் அன்புடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரம் வியப்பூட்டும் வகையில் செழிப்படையும். தாராளப் பணவரவு கிடைத்துச் சேமிப்பு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** எந்தச் செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். பெண்களுக்கு பொன், பொருள் சேரும்.

**தனுசு:** பழைய சம்பவங்களால் சில தொந்தரவுகள் வரலாம். தொழில், வியாபாரம் செழித்தாலும் அதிக செலவு வரும். வாகனம் வாங்கும் எண்ணம் நிறைவேறும்.

**மகரம்:** வேலைப்பளு சஞ்சலம் தரும். நண்பரின் ஆலோசனை நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி சீராக இருக்கும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**கும்பம்:** நண்பர்கள், உறவினர்கள் அன்புடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு எளிதாக நிறைவேறும்.மாணவர்கள் படிப்பில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

**மீனம்:** சாதனை நிகழ்த்த உரிய வாய்ப்பு தேடி வரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி நிறைவேறும். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.

**கள்ளம் கபடம் இல்லாமல் வளர்ந்து விடுவது எளிதாய் இருக்கிறது, வாழ்வது தான் கஷ்டமாய் இருக்கிறது!**

**உடைந்த கண்ணாடியாக இருந்தாலும் ஒவ்வொரு பகுதியும் தெளிவாக முகம் காட்டத்தான் செய்கிறது...**

**வீசி எறிந்த பொம்மையின் அருமை அதை அடுத்த குழந்தை எடுத்து விளையாடும்போதுதான் புரிகிறது. சில நேரம் மனித மனங்களும் அப்படித்தான்**

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7 | | | | | 6 | |
| 8 | | | 2 | 6 | | 5 | | |
| | 9 | | | 8 | | | | 3 |
| | | | | | | | 2 | |
| | 7 | 5 | | 3 | | 4 | 8 | |
| | 1 | | | | | | | |
| 9 | | | | 4 | | | 1 | |
| | | 6 | | 1 | 2 | | | 9 |
| | 2 | | | | | 3 | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

### நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 7 | 3 | 1 | 8 | 6 | 2 | 5 | 9 |
| 8 | 6 | 9 | 2 | 5 | 4 | 3 | 1 | 7 |
| 1 | 2 | 5 | 3 | 9 | 7 | 8 | 4 | 6 |
| 7 | 8 | 2 | 6 | 4 | 1 | 5 | 9 | 3 |
| 3 | 9 | 4 | 7 | 2 | 5 | 6 | 8 | 1 |
| 6 | 5 | 1 | 9 | 3 | 8 | 4 | 7 | 2 |
| 2 | 1 | 8 | 5 | 7 | 3 | 9 | 6 | 4 |
| 9 | 4 | 6 | 8 | 1 | 2 | 7 | 3 | 5 |
| 5 | 3 | 7 | 4 | 6 | 9 | 1 | 2 | 8 |

# சனிப்பெயர்ச்சி ராசிபலன்கள்



இந்த வருடம் டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி சனிப்பெயர்ச்சி நடைபெறு கிறது. விருச்சிக ராசியில் இருந்து தனுசு ராசிக்கு பெயர்ச்சி ஆகிறார் சனீஸ்வர பகவான். அவர் 26.12.2020 வரை தனுசு ராசியில் இருந்து பலன் களைத் தரவுள்ளார். இந்த மூன்று ஆண்டு களில் ஒவ்வொரு ராசியினருக்கும் ஏற்படக்கூடிய பலன்கள் குறித்துப் பார்ப்போம்...



## விருச்சிகம்

எல்லோரிடமும் நல்ல பெயரை எளிதில் சம்பாதித்து விடும் விருச்சிக ராசி அன்பர்களே, நீங்கள் தோல்வியைக்கண்டு துவளாதவர். போராட்ட குணம் உடையவர்.

இதுவரை உங்களது ராசியில் இருக்கும் சனி பகவான் விலகி தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்குச் செல்கிறார்.

மூன்றாம் பார்வையால் சுக ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் அஷ்டம ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் இலாப ஸ்தானத்தையும் பார்க்கிறார்.

**பலன்கள்:**

பலவிதமான குழப்பங்கள் இருந்தும் திட சிந்தனைகளுடன் உங்கள் குறிக்கோள்களை அடைவீர்கள். வருமானத்தைப் பெருக்குவதற்கு நல்ல வழிகள் உதயமாகும். நிதி நெருக்கடிகள் ஏற்படலாம். குடும்பத்திலும் வெளி வட்டாரத்திலும் உங்கள் பேச்சுக்கு மதிப்பில்லாமல் போகலாம். எப்போதும் போல் சட்டத்தை மதித்து நடப்பீர்கள்.

இந்தத் தன்மை, சில அன்பர்களுக்குச் சாதகமான மேலிடத்துத் தொடர்புகளை உருவாக்கித் தரும். இல்லத்தில் திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடக்கும். நீங்கள் சார்ந்துள்ள துறையில் புகழின் உச்சியை நோக்கிப் படிப்படியாக முன்னேறுவீர்கள்.

எதையும் சிந்தித்துச் செயற்பட வேண்டும். சூழ்நிலைக்கு ஏற்ப செயல்முறைகளை மாற்றிக் கொண்டு நன்மைகளைக் காண்பீர்கள்.

பெற்றோர் வழியில் நிலவி வந்த மனக் கஷ்டங்கள் தீர்ந்து, குடும்பத்தில் குதூகலம் நிறையும். நீங்கள் பிரபலம் ஆவீர்கள். உங்களை நாடி வந்தவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வீர்கள். சனி பகவானால் வாகனங்களுக்குச் சிறிது பராமரிப்புச் செலவுகள் செய்ய நேரிடும். உங்களின் நண்பர்கள், உங்களுக்குத் தேவையானவற்றைத் தவிர்த்துத் தேவையற்ற விஷயங்களைப் பேச நேரிடலாம். அதனால் எவரையும் முன்னுதாரணமாகக் கொள்ளாமல், உங்களின் தனித் தன்மையை வெளிப்படுத்திச் செயலாற்றுங்கள்.

**உத்தியோகஸ்தர்களுக்கு:** தங்கள் பணிகளைச் சரியாகச் செய்து முடிப்பீர்கள். அதே நேரம் சில சமயங்களில் காரணமில்லாமல் மனதில் தைரியம் குறையும். அலுவலக வேலைகள் தொடர்பான பயணங்களால் நன்மை உண்டாகும். பண வரவுக்குக் குறைவு ஏற்படாது. உங்களின் தன்னம்பிக்கை உயரும். எதிர்பாராத பதவி உயர்வால் மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போவீர்கள்.

வியாபாரிகளுக்குக் கடும் முயற்சிகளுக்குப் பின் தகுந்த இலாபம் கிடைக்கும். கொடுக்கல், வாங்கலில் இருந்த சிரமங்கள் குறையும். தடைகள் ஏற்பட்டாலும் இறுதியில் அனைத்துச் செயல்களிலும் வெற்றியடைவீர்கள். வாடிக்கையாளர்களைக் கவர புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்தினாலும் கடன் சுமை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளவும். கூட்டாளிகளிடம் விட்டுக் கொடுத்து நடந்து கொள்ளவும்.

**கலைத்துறையினருக்கு:** புதிய வாய்ப்புகள் குறைவாகவே இருந்தாலும் பண வரவு சீராகவே தொடரும். ரசிகர்களின் ஆதரவும் அமோகமாகவே இருக்கும். உங்கள் திறமையினால் புகழைத் தக்க வைத்துக் கொள்வீர்கள். உங்களின் கற்பனை சக்தி ஊற்றுபோல் பெருகும். இது வருமானமாகவும் மாறி பயன் தரும்.

**பெண்களுக்கு:** கணவரின் அன்பும், பாசமும் அளவுக்கதிகமாகவே கிடைக்கும். ஆன்மிகச் சுற்றுலாவும், இன்பச் சுற்றுலாவும் சென்று மகிழ்ச்சி அடைவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை நிறையும். பிள்ளைகளாலும் சந்தோஷம் உண்டாகும். வெளிவட்டாரத்தில் உங்கள் செல்வாக்கு உயரும்.

**மாணவர்களுக்கு:** உழைப்பிற்கேற்ற மதிப்பெண்களைப் பெறுவீர்கள். கடுமையாக உழைத்துப் படிக்கும் மாணவர்கள் சாதனை புரிவார்கள். உழைப்புக் குறைந்தால் உயர்வும் குறையக் கூடும். ஆனால் பெற்றோர்களின் ஆதரவு உங்களை உற்சாகப்படுத்தும்.

## வரலாற்றில் இன்றைய தினம் 11.12.2017

1792 - பிரான்ஸின் லூயி மன்னர் தேசத்துரோகக் குற்றச்சாட்டின் கீழ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

1907 - நியூசிலாந்தின் நாடாளுமன்றம் தீயினால் முற்றாகச் சேதமடைந்தது.

1941 இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் மீது போர் அறிவிப்புச் செய்தது போலந்து.

1998 - தாய்லாந்து வானூர்தியொன்று விபத்துக்கு உள்ளானதில் 101 பேர் உயிரிழந்தனர்.

2001 - சீன மக்கள் குடியரசு, உலக வர்த்தக நிறுவனத்தில் இணைந்தது.

2016 - அரசியல் உரிமை கிடைத்தால்தான் தமிழர் தேசிய ரீதியில் செயலாற்றலாம் என்று வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு.

2016 - ஜெனீவா உடன்படிக்கையை அரசு நிறைவேற்ற வேண்டும் என்று மாவை வலியுறுத்தல்.

2016 - ட்ரம்பின் வெற்றியில் ரஷ்யா உதவியதா என்று விசாரணை நடத்த ஒபாமா உத்தரவு.

2016 - தென்கொரிய அதிபர் பார்க் கியூன் ஹை பதவி விலகினார்.

## நாளை

**12.12.2017**
செவ்வாய்க்கிழமை

**கார்த்திகை 26**

திதி: தசமி பி.இ. 06.05 வரை
நட்சத்திரம்: அத்தம் மு.இ. 11.35 வரை
சுபநேரம்: 10.50–12.20 வரை
ராகுகாலம்: 03.20–04.50 வரை



# முகப்பொலிவை கூட்டும் சந்தனம்

பெண்கள் தங்கள் சருமத்தின் அழகைப் பராமரிப்பதற்கு பல கிறீம்களை உபயோகிப்பதால் தோல் வறண்டு, ஒவ்வாமை போன்ற பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. இயற்கைப் பொருள்களை வைத்து செய்யப்படும் மருத்துவம் நல்ல தீர்வை தந்திருக்கிறது. மேலும்சருமத்தில்ஏற்படும்பிரச்சினைகளை எளிதில் நீக்க வல்லது.

**தக்காளி:**
சந்தனப் பொடியில் தக்காளியை அரைத்து கலந்து, வேண்டுமெனில் சிறிது முல்தானி மெட்டியையும் சேர்த்து கலந்து, முகத்திற்கு ஃபேஸ் பேக் போடலாம்.

**எலுமிச்சை சாறு:**
எலுமிச்சை சாற்றுடன் சந்தனப் பொடியை சேர்த்து கலந்து, முகத்துக்கு பேஸ் மாஸ்க் போட்டால், சருமத்தில் உள்ள இறந்தக்லங்கள் நீங்குவதோடு, பருக்கள் வராமலும் இருக்கும்.

**(24ஆம் பக்கம் பார்க்க)**

## வான் வாடகைக்கு

**K.D.H. HiRoof** வான்
வாடகைக்கு உண்டு.
(நிறுவனத்துக்கு மட்டும்)



**T.P:- 077 675 4420**

## தேவை

கட்டட பொருள்களில் அனுபவம் உடைய களஞ்சிய காப்பாளர் தேவை.
தொடர்பு - சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்.
**இல. 55, 57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 10.12.2017 | 2222 | ஊதா |

சிம்மம்
வெற்றி இலக்கங்கள்: 06 08 42 48
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி: ரூ. 3,878,736/=
2017.12.12 ம் திகதி செவ்வாய்க் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது நேரடி அழைப்பு 1919

கோடிபதி சனிதா
சீட்டிழுப்பு வாரம்: 226
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி 2017.12.10
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 77,710,304/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
Z 29 50 51 72
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது நேரடி அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 102
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2017.12.10
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 59,106,490/-
வெற்றி இலக்கங்கள்
10 28 62 70 P
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது நேரடி அழைப்பு - 0114 824 824, 0112 333 778

Galaxy Star
வெற்றி வாரம் 219
திகதி 2017.12.10
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
03 27 36 40 58
அடுத்த புதன்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 5, 359, 556/-
விசேட இல.

| | | | | |
|---|---|---|---|---|
| 4601420 | 9001500 | 1462781 | 2345814 | 6865694 |

2017.12.13 ஆம் திகதி புதன்கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றிபெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## கண்ணீர் அஞ்சலி



எமது சக சமுர்த்தி முகாமையாளர்
**திருமதி மேசி குமுதா** அவர்களின்
அன்புத்தந்தையார்

**R. வஸ்ரியாம்பிள்ளை பேதுருப்பிள்ளை**

அவர்கள் இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்.மாவட்ட சமுர்த்தி முகாமையாளர் சங்கம்.**

## மரண அறிவித்தல்

### திருமதி யோகேஸ்வரி சுப்பிரமணியம்



சித்திரமேழி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் பெரியவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி சுப்பிரமணியம் கடந்த(08.12.2017)வெள்ளிக்கிழமை இயற்கை எய்தி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் சுப்பிரமணியத்தின் பாசமிகு மனைவியும் கந்தையா - நேசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் கமலாஷினி (நோர்வே), கலாறஞ்சினி, அருந்ததி, காலஞ்சென்ற சித்திரானந்தம் (சித்தி) மற்றும் பரமானந்தம், சதானந்தம் (பிரான்ஸ்), றேனுகா (தங்கா லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயபாலசிங்கம், பேரின்பநாதன், காலஞ்சென்ற கருணானந்தன் மற்றும் கயல்விழி, இன்பவதனி, கங்காதரன் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.12.2017) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் பெரியவிளான் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பெரியவிளான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**
**077 316 6675 (பேரன்)**

# மரண அறிவித்தல்

## திருமதி பாறுவதி (பாக்கியம்) சின்னையா



வதிரி கரவெட்டி, பத்மபவனத்தினைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாறுவதி (பாக்கியம்) சின்னையா நேற்று (10.12.2017) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.


அன்னார் காலஞ்சென்ற கந்தையா சின்னையா அவர்களின் அன்புமனைவியும் காலஞ்சென்ற அம்பலவாணர் மீனாட்சி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற கந்தையா பத்தினிப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, குமாரசுவாமி மற்றும் சிவயோகநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பத்மாவதி மற்றும் பத்மநாதன் (பிரான்ஸ்), பத்மசோதி, பத்மசீலன், பத்மசெல்வி, பத்மாஈசன் (பிரான்ஸ்), சப்தகுமார் (பிரான்ஸ்), பாலமுருகன் (ஆசிரியர், யா/உடுப்பிட்டிஅ.மி.கல்லூரி), பாலாம்பிகை (டென்மார்க்), பாமதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் மல்லிகா (பிரான்ஸ்), கணேசமூர்த்தி (ஓய்வு நிலை உதவிப்பணிப்பாளர், கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களம்), கமலேஸ்வரி, யோகநாதன், வசுமதி (பிரான்ஸ்), மிதுலா (பிரான்ஸ்), பிருந்தா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் கரவெட்டி), விஜயகுமார் (டென்மார்க்), அகிலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் வாசினி (பிரான்ஸ்), வாசவன் (பிரான்ஸ்), ஜனார்த்தனன் (பிரான்ஸ்), ஜசிந்தன் (கோபி பிரான்ஸ்), வினோதராஜ் (சுவிஸ்), சிந்துஜா, திருச்செந்தூரன் ( சிரேஷ்ட விரிவுரையாளர் அரசியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்), திவான் (புகையிரத நிலைய அதிபர், மருதானை) .பிரியங்கா (விவசாயபீடம் 1 ஆம் வருட மாணவி, யாழ். பல்கலைக்கழகம்), கேசவன் , பகீரதன், கிருசாயினி, தாட்சாயினி, அனுசாயினி, மதனதீபன் (பொறியியலாளர் KDESA நிறுவனம் கொழும்பு), பிருதிவிராஜ், லக்ஷன் சாருஜன் (பிரான்ஸ்), சரண்யா (பிரான்ஸ்), சாகீசன் (பிரான்ஸ்), சாருகா (பிரான்ஸ்), சர்மிகா (பிரான்ஸ்), றொஷான் (பிரான்ஸ்), றோசி (பிரான்ஸ்), பானுஜன், ஜெனுசயன், ஹர்சயன், திவ்வியா (டென்மார்க்), தீபிகா (டென்மார்க்), தான்யா (டென்மார்க்), ஜெனி (பிரான்ஸ்), அபிலாஸ் (பிரான்ஸ்), அபினயன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் அஷ்விகா, அக்ஷயன், அஸ்வினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப்பூட்டியும் காலஞ்சென்ற செல்லாச்சி, மீனாட்சி (சந்தனம்), விமலாதேவி (ஆஸ்திரேலியா) , அழகுமணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2017) திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் வதிரி ஆலங்கட்டை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வதிரி, கரவெட்டி.**

**தகவல்:**
**சி. பாலமுருகன் (மகன் 077 749 9402)**
**ந. கணேசமூர்த்தி (மருமகன் 077 786 2353)**

## மரண அறிவித்தல்



### றேமன்ட் வஸ்ரியாம்பிள்ளை பேதுருப்பிள்ளை

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட றேமன்ட் வஸ்ரியாம்பிள்ளை பேதுருப்பிள்ளை நேற்று (10.12.2017) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான றேமன்ட் வஸ்ரியாம்பிள்ளை மேரிப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற கிளாடிஸ் அபரஞ்சிதமலர் ஆசிரியையின் அருமைக்கணவரும் அனுஷா (லண்டன்), வனஜா (நியூசிலாந்து), றூபி (லண்டன்), மேசி குமுதா (சமுர்த்தி முகாமையாளர், தெல்லிப்பழை) ஆகியோரின் பாசத்துக்குரிய தந்தையும் சாள்ஸ் (லண்டன்), Dr.தேவராசா (நியூசிலாந்து), சுரேஸ் (லண்டன்), கிறிஸ்ரி (பிரதிப்பதிவாளர்,யாழ்.பல்கலைக்கழகம் ) ஆகியோரின் அன்பு மாமனாரும் Dr.றோசலீன் (லண்டன்).நிரூசன் (மருத்துவ பீட மாணவன் ,லண்டன்), அன்ரன் வேளாங்கரன் (திட்ட முகாமையாளர், அமெரிக்கா), Dr.தேனு, பாபுஜி (மருத்துவபீட மாணவி), பிறிந்தினி (பல்வைத்தியர்), டிலான் (பொறியியலாலர்), டிலினியா (உளவியலாளர்), கிஷோக் (மாணவன் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான கிறிஸ்தோப்பர், சிறில், ஹரியற் மற்றும் அனி (ஜேர்மனி), லில்லிறோஸ், அம்புறோஸ் ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதித்திருப்பலி இன்று (11.12.2017) திங்கட்கிழமை பி.ப 3.30 மணிக்கு உடுவில் செபமாலைமாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மேசிகுமுதா - 009 421 2241844
கிறிஸ்ரி - 009 477 555 9122
அனுஷா - 0044 7425168333

தகவல்:
பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் துரைராஜா



மலர்வு 11.04.1934 | உதிர்வு 05.12.2017

ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் துரைராஜா கடந்த (05.12.2017) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - ஆச்சிமுத்து தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான துரையப்பா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நாகேஸ்வரியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், இராசம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை, பொன்னுத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ரஞ்ஜினி (இலங்கை), சாந்தினி (ஜேர்மனி), ரவீந்திரன் (கனடா), சறோஜினி (கனடா), சுகந்தினி (இலங்கை), கிருஷ்ணராணி (அமெரிக்கா), கிருஷ்ணகுமார் (கனடா), தர்சினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமிர்தலிங்கம், வேலழகன், சாந்தி, நற்குணநாதன், சத்தியசீலன், ராஜகுமார், சுகன்ஜா, ராஜகுமார் ஆகியோரின் அன்பு மாமனும் ஷர்மினி-மயூரன், பிருந்தா, சஜித், சரண்யா, ஆருணி, நிவேதன், நிஷானி, சுமித், சுமித்தா, சஜித்தா - சினோஜன், சரணி, சங்கவி, தயஷாகரி, தனுராஜ், ஸ்ரீகரராஜ், சுஜித்தா, ஸ்ரீனிக்கா, ஹரின், சாரங்கி, தயானி, அனித் ஆகியோரின் அன்புப்பேரனும் ஹரீன், ஸ்ரீநிஷா, ஷயன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.12.2017) திங்கட்கிழமை பி.ப. 5.00 - பி.ப. 9.00 இற்கும் நாளை (12.12.2017) செவ்வாய்க்கிழமை மு.ப. 8.00 - மு.ப. 9.00 இற்கும் Chapel Ridge Funeral Home, 891 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada என்னும் இடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மு.ப. 11.30 மணியளவில் Forest Lawn Mausoleum Cremation Centre, 4570 Yonge St, North York, ON M2N 5L6 என்னும் இடத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சண்லிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்.
இலங்கை - 077 464 5282
கனடா - 001 416 678 5284

தகவல்:
குடும்பத்தினர்.

## முகப்பொலிவை கூட்டும் சந்தனம்

(23ஆம் பக்கத் தொடர்ச்சி)

**தயிர்:**

தயிர் ஒரு சிறந்த கிளின்சர் என்று சொல்லலாம். எனவே அந்த தயிரை சந்தனப் பொடியில் சேர்த்து கலந்து, முகத்துக்கு மாஸ்க் போட்டால், சருமம் மென்மையாவதோடு, வெள்ளையாகும்.

**முட்டை மற்றும் தேன்:**

மற்றொரு சந்தன பேஸ் பேக் தான் இது. இதற்கு முட்டையை நன்கு அடித்து, தேன் மற்றும் சந்தனப் பொடியை சேர்த்துக் கலந்து, முகத்தில் தடவி ஊற வைத்து கழுவினால், சருமத்தில் உள்ள சுருக்கங்கள் நீங்கி, அழுக்குகள் அனைத்தும் வெளியேறி, சருமம் அழகாக வும் இளமையுடன் காணப்படும்.

**மஞ்சள் தூள்:**

சந்தனப் பொடியை மஞ்சள் தூள், ஒரு துளி எலுமிச்சை சாறு மற்றும் பால் ஊற்றி கலந்து, சருமத்தில் பூசி ஊற வைத்து கழுவ வேண்டும். இதனால் முகமானது பொலிவோடு காணப்படும்.

**முல்தானி மெட்டி:**

சந்தனப் பொடியை முல்தானி மெட்டி பவுடருடனும் சேர்த்து பேஸ் பேக் போடலாம். அதற்கு 1/2 தேக்கரண்டி முல்தானி மெட்டி மற்றும் 1/2 தேக்கரண்டி சந்தனப்பொடியை சேர்த்து, தயிர் ஊற்றி கலந்து, முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து, குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும்.



## மரண அறிவித்தல்

### திருமதி ஆரோக்கியம் சுவாம்பிள்ளை (புஸ்பம்)



வளாக வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆரோக்கியம் சுவாம்பிள்ளை (புஸ்பம்) நேற்று (10.12.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருநெல்வேலி மரக்காலை தம்பிமுத்துவின் கடைசி மகளும் காலஞ்சென்ற சுவாம்பிள்ளையின் அன்பு மனைவியும் புனிதா, கீதா (நெதர்லாந்து), கவிதா, இக்னேசியஸ் (தேவா - ஆசிரியர் செ/ஜேம்ஸ் ம. வி. குருநகர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கிறிஸ்ரி அமிர்த நாதர், கண்ணதாசன் (நெதர்லாந்து), உதயகுமார், பிரியந்தினி (உளநலப் பிரிவு யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியும் நிருக்ஷன் (R.I., பிரதேச சபை, மன்னார்), ஜனுஷியா, மிலுக்ஷன், திவ்வியா, தீபக், றியான், லக்சியா, அருணியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (11.12.2017) திங்கட்கிழமை மு.ப.10.30 மணியளவில் கல்வியங்காடு, புனித சவேரியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் அவரது பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 924 0102

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### தம்பிமுத்து சபாரத்தினம்



தோற்றம் 05.04.1937 | மறைவு 09.12.2017

அராலியைப் பிறப்பிடமாகவும் கற்பகப்பிள்ளையார் கோயிலடி, உடுவில் கிழக்கு, இணுவிலை வதிவிடமாகவும் கொண்ட தம்பிமுத்து சபாரத்தினம் 09.12.2017 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிமுத்து - சின்னப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், நிருபன் (Cey line Shipping), நித்தியா (Teacher Butter fly International School, Chankanai), நிதர்சன் (Technician, Fujarirah Real Estate - Doha) ஆகியோரின் பாசமிகு தந்தையும், எமில்ராஜா (பிரதேசசெயலகம் -கரைச்சி, கிளிநொச்சி) இன் அன்புமாமனாரும், கனகம்மா, சிவபாக்கியம், சிவரத்தினம் ஆகியோரின் அன்புச்சகோதரரும், கந்தசாமி, மகாதேவன், கனகம்மா, தயாபரன், கமலநாயகி, விக்கினேஸ்வரன், காலஞ்சென்றவர்களான இராசதுரை, கந்தையா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2017) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 614 7886

தகவல்:
குடும்பத்தினர்

# பாதீடு முடிந்த கையோடு வெளிநாடு பறக்கும் அமைச்சர்கள் இம்முறை நாட்டுக்குள் முகாம்

கொழும்பு, டிசெ. 11
உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் களம் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளதால் முக்கிய அரசியல் பிரமுகர்கள் தமது வெளிநாட்டுப் பயணங்களை கைவிடுவதற்குத் தீர்மானித்துள்ளனர் என்று தெரியவருகின்றது.
வழமையாகவே வரவு - செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு முடிவடைந்த பின்னர் சில அமைச்சர்களும், நாடாளு மன்ற உறுப்பினர்களும் தனிப்பட்ட பயணம் மேற்கொண்டு வெளிநாடுகளுக்குச் சென்றுவிடுவார்கள்.
வெளிநாடுகளிலுள்ள தமது உறவினர்களைப் பார்ப்பதற்காகவும், விடுமுறையைக் கழிப்பதற்காகவுமே இவ்வாறு பயணம் மேற்கொள்வார்கள்.
அத்துடன், வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நடைபெறும் வேளையில் மருத்துவம், தவிர தனிப்பட்ட பயணமாக வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டாம் என்று ஆளுங்கட்சி நாடாளு மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தலைமை அமைச்சரால் அறிவுறுத்தல் விடுக்கப்படும்.
இதன் காரணமாகவே பாதீடு மீதான விவாதம் முடிவடைந்த பின்னர், அரசியல் பிரமுகர்கள் வெளிநாட்டுப் பயணத்தை ஆரம்பித்து விடுவர். ஆனால், இந்த முறை அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும், முக்கிய பதவிகளை வகிக்கும் அமைச்சர்களுக்கும் வெளிநாடு செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான வேட்புமனு தயாரிப்புப் பணி, பரப்புரை வியூகம் உட்பட மேலும் சில விடயங்களாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்று அறியமுடிகின்றது. எனினும், ஒருசில அரசியல் பிரமுகர்கள் தமது பயண நாள்களை சுருக்கியுள்ளனர். (5)

## வாள்கள் கொண்டு வந்தோர் பொலிஸைக் கண்டதும் ஓட்டம்



வவுனியா, டிசெ.11
வவுனியா, பசார் வீதியில் வாள்களுடன் வந்த இருவர் பொலிஸாரைக் கண்டதும் தப்பியோடினர் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று இரவு 9 மணியளவில் நடந்துள்ளது.
வவுனியா, தர்மலிங்கம் வீதியூடாக வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வவுனியா நோக்கிச் சென்றுள்ளது. பசார் வீதியில் இருந்து மில் வீதிக்குச் செல்லும் சந்தியில் கடமையிலிருந்த இரு போக்குவரத்துப் பொலிஸார் அந்த மோட்டார் சைக்கிளை மறித்துள்ளனர். அவர்கள் பொலிஸ் உத்தியோகத்தரைத் தள்ளிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். அவர்கள் கொண்டு சென்ற வாள்கள் தவறி வீழ்ந்தன என்று தெரிவிக்கப்படுகின்றது.
இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற)

# மனித உரிமைகள் தின நிகழ்வு கிளிநொச்சியில்

கிளிநொச்சி, டிசெ.11
சர்வதேச மனித உரிமைகள் தினம் நேற்று கிளிநொச்சியில் கடைப்பிடிக்கப்பட்டது. கிளிநொச்சி பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் கரைச்சிப் பிரதேச சபை மண்டபத்தில் குறித்த நிகழ்வு காலை 10 மணியளவில் ஆரம்பமானது.
கிளிநொச்சி மாவட்டத்தில் மனித உரிமைகள் செயற்பாட்டில் ஈடுபட்டு படுகொலை செய்யப்பட்ட அருட்தந்தை கிளி அடிகளார் மற்றும் துணுக்காய் பிரதேச செயலர் ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு மாலை அணிவித்து நினைவு கூரப்பட்டது. நினைவுரைகளும் நடைபெற்றன. (ற-6)

## வாள்களுடன்...

எடுத்தபோது அவர்களைத் துரத்திச் சென்றனர். சங்கானை சிலம்புப்புளியடி ஆலயத்துக்கு அருகில் இருந்த வேலி, இளைஞர் மன்றக் கதவையும் சேதப்படுத்தினர். வீதியால் பயணித்த பெண் ஒருவரின் கழுத்தில் வாள் வைத்து அவரின் சங்கிலியை அறுத்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.
இதனால் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. சம்பவம் அறிந்த மானிப்பாய் பொலிஸார் அங்கு விரைந்தனர். ஒளிப்படங்கள் மற்றும் காணொலிகளை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகளை ஆரம்பித்தனர். சங்கிலி அபகரிப்புத் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.
தெல்லிப்பழைப் பொலிஸார் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையில் மூவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து வாள், தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படும் இருப்புப் பைப்கள் என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. அவர்களிடம் இருந்து மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டன.
கைது செய்யப்பட்ட இருவர் 27 வயதுடையவர்கள் என்றும், மற்றையவர்கள் 24 மற்றும் 21 வயதுடையவர்கள் என்றும் அச்சுவேலியைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-ரி,26)

## மக்கள்...

பது தொடர்பில் உங்கள் கருத்து என்ன?" என்று கேள்வியெழுப்பப்பட்டது.
அதற்குப் பதிலளித்த சுமந்திரன் தெரிவித்ததாவது: அரசமைப்பின் 13ஆவது திருத்தம் வந்தபோது ஒரு தற்காலிக இணைப்பு ஏற்படுத்தப்பட்டது. அது 18 வருடங்கள் நீடித்தது. அதற்கு முன்னரும் 1957ஆம் ஆண்டு பண்டா செல்வா ஒப்பந்தத்தில் இணைப்பு சாத்தியமாவதற்கான ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது..
இது நீண்டகாலமாக இருந்து வருகின்ற ஒரு நிலைப்பாடு. அதனாலேயே அது தொடர்பில் இப்போது பேசப்படுகின்றது. புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையில் இந்த இணைப்புக்கு மூன்று வழிகள் கொடுக்கப்பட்டுள்ளன.
இரண்டு மாகாணங்கள் ஒன்று சேர்வதாக இருந்தால் அந்தந்த மாகாணங்களில் வாழுகின்றவர்கள் அதற்கு இணங்கினால் இணையலாம் என்கின்ற ஒரு வழி இருக்கின்றது. அதைச் செய்தால் எமது நாட்டில் மாகாணங்களினுடைய எண்ணிக்கைக் குறையலாம். அது மக்களுடைய விருப்பப்படி நடக்கலாம். அரசமைப்பில் அதற்கான ஏற்பாட்டிலே மக்கள் விரும்பினால் ஒன்றிணையலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதுஎன்று நாடாளுமன்ற உறுப்பினர் பதிலளித்தார்.
மற்றொரு கேள்விக்குப் பதிலளித்த அவர் தெரிவித்ததாவது :
சிங்கள மக்கள் மத்தியில் உரையாற்றுகின்றபோது எங்களுக்கு சமஷ்டி வேண்டும் என்று சொல்லி அவர்களை வெல்ல முடியாது. அதற்கான காரணங்களை சரியான முறையிலே சொல்லவேண்டும். வாக்காளர்களைக் கையில் வைத்திருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கமாக இருந்தால் சந்தேகம் எழாத வகையில் என்னாலும் செயற்படமுடியும். வீரவசனம் பேசுகின்ற ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்று நானும் இருக்கலாம். சிங்களத்தில் உரையாடாமல் தமிழ் மக்களுக்கு மட்டும் அவர்களின் காதுக்கு இனியவையாக மட்டும் பேசிக்கொண்டு இருக்கலாம். அது அவர்களுக்குச் சந்தேகத்தை எழுப்பாது. ஆனால் உருப்படியாக நாட்டில் ஏதுவுமே நடக்காது. அடுத்த தேர்தல் என்னுடைய நோக்கமாக இல்லாததால் என்னுடைய மக்கள் என்னைச் சந்தேகித்தாலும் பரவாயில்லை என நான் சிங்கள மக்கள் மத்தியில் சென்று உரையாடுகின்றேன்.
தேர்தல் பரப்புரைகளின்போது எனக்கு கைதட்டல்கள் கிடைத்ததில்லை. கைதட்டல் கிடைப்பதற்கு என்ன கூறவேண்டும் என்று எனக்குத் தெரியாமல் இல்லை. கைதட்டலால் இந்த நாட்டில் ஒரு தீர்வை எட்ட முடியாது. ஏனையோருடன் உரையாடமல் நாட்டில் நல்லிணக்கம் ஏற்படாது.
நேற்றுமுன்தினம் ஒருவர் பேசியிருந்தார். எங்களைத் தனியாக விடுங்கள் நாங்கள் எங்களைப் பார்த்துக்கொள்ளுகின்றோம் என்றார். இப்படிப்பேசி நல்லிணக்கம் ஒருபோதும் வராது. ஆனால் அப்படிப் பேசாவிட்டால் எங்களுடைய மக்கள் மத்தியில் சந்தேகம் ஏற்படும். இவர் இணங்கிப் போகிறார், இவர் விலைபோய் விட்டார் போல இருக்கின்றது. இவர் இறுக்கமாகப் பேசுகின்றார் இல்லை என்று சந்தேகப்படுவார்கள். இறுக்கமாகப்பேசிக்கொண்டு இருக்கலாம். ஆனால் பிரச்சினைகள் இருந்து கொண்டே இருக்கும்.
சந்தேகத்துக்கு ஆளாவோம் என்ற பயத்தால் நாங்கள் செய்யாமலிருந்தால் நாட்டில் ஒருபோதும் இன நல்லிணக்கம் ஏற்படாதுஎன்று நாடாளுமன்ற உறுப்பினர் பதிலளித்தார்.
மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு அன்புக்கும் நட்புக்குமான இளைஞர் அமைப்பு இந்தக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தது.

## இடைக்கால...

லாம் திகதிகளில் விவாதம் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் விவாதத்துக்கான காலம் போதாமையால் அது மேலும் இரு நாள்கள் நீடிக்கப்பட்டது.
இருப்பினும் விவாதம் முடிவுக்கு வரவில்லை. இதற்கிடையில் வரவு - செலவுத் திட்ட விவாதம் ஆரம்பமாகியமையால், இடைக்கால அறிக்கை மீதான விவாதம் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.
வரவு -செலவுத் திட்ட விவாதம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமையுடன் முடிவடைந்தது. இந்த நிலையில் இன்றைய தினம் இடைக்கால அறிக்கை மீதான விவாதம் நடைபெறவுள்ளது. இன்றைய தினத்துடன் இந்த விவாதம் முடிவுக்கு கொண்டு வரப்படும். (உ-5)

## ராணுவம்...

யாழ்ப்பாண உணவுத் திருவிழா என்ற பெயரில் புதிய வணிக முயற்சியில் இராணுவம் இறங்கியுள்ளது. (உ-5)

## வாள்களுடன் வந்த...

வந்த கும்பல் வீட்டில் இருந்தவர்களை வாள்களைக் காட்டி அச்சுறுத்தினர். வீட்டில் இருந்த தளபாடங்களை வாள்கள், கோடரியால் கொத்திச் சேதப்படுத்தினர். அலுமாரியைக் கொத்திப் பிளந்து அதிலிருந்த 40 ஆயிரம் ரூபா பணம், 5 பவுண் நகை என்பவற்றைக் கொள்ளையிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.
சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. அவர்கள் அங்கு வந்தபோதும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட பிரதேசம் என்பதால் கொள்ளை தொடர்பான முறைப்பாட்டை ஏற்க முடியாது என்றனர்.
அந்தப் பகுதியில் இதே பாணியில் ஒருமாதத்துக்கு முன்னரும் கொள்ளையிடப்பட்டது என்று மக்கள் தெரிவித்தனர். (ற-ரி)

## சாவகச்சேரி...

தேர்தல்கள் ஆணையகம் அறிவித்துள்ளது.
வேட்புமனுத் தாக்கல் முடிந்த பின்னர், தேர்தல் நடைபெறும் நாள் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளால் எதிர்வரும் 27ஆம் திகதி வெளியிடப்படும்.
வேட்புமனுத் தாக்கல் இடம்பெறும் கால கட்டத்தில் மாவட்டச் செயலகங்களில் பாதுகாப்பை அதிகரிக்குமாறு, தேர்தல்கள் ஆணையகம், பொலிஸாரிடம் கோரியுள்ளது. (உ-5)

## ரத்ன தேரர்...

திட்டவட்டமாகக் கூறியுள்ளார். இதனால், ரத்தன தேரர் ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளார்.
மைத்திரி மற்றும் மகிந்த அணிகளை இணைப்பதற்குரிய அரசியல் ரீதியான பேச்சுகள் யாவும் தோல்விகண்ட நிலையில், மதத் தலைவர் என்ற ரீதியில் இரு தரப்பினரையும் இணைக்கும் முயற்சியில் ரத்தன தேரர் இறங்கியிருந்தார்.
இதன் நிமித்தம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்த தேரர், அவரின் சிறப்புச் செய்தியுடன் மகிந்த ராஜபக்சவை அண்மையில் சந்தித்திருந்தார். இதன்போது இரு தரப்பும் இணைய வேண்டிய தன் முக்கியத்துவத்தை அவர் தெளிவுபடுத்தியிருந்தார்.
அதன் பின்னர், மகிந்தவின் செய்தியுடன் மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்த நிலையிலேயே நேற்று மீண்டும் மகிந்தவுடன் ரத்தன தேரர் சந்திப்பு நடத்தியுள்ளார்.
"கூட்டு எதிரணி உறுப்பினர்கள் அனைவரும் தனித்துச் செல்லவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றனர். என்னை நம்பி வந்தவர்களைக் கைவிடமுடியாது. நாம் முன்வைத்த கோரிக்கைகளுக்கு அந்தத் தரப்பிலிருந்து (மைத்திரி அணி) உரிய பதில்கள் கிடைக்கவில்லை. அத்துடன், கட்சியின் செயலரும் கடுமையாக விமர்சித்து வருகிறார். எனவே, இனியும் இணைப்பு சாத்தியமாகாது" என்று தேரரிடம் மகிந்த தெரிவித்துள்ளார். இரு தரப்பையும் இணைப்பதற்கு இருந்த இறுதிச் சந்தர்ப்பமும் தற்போது கைநழுவிபோயுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

## புளொட்டுக்கும்...

வழங்கப்பட்டுள்ளது. மானிப்பாய் பிரதேச சபையில் தவிசாளர் பதவி முதல் இரண்டாண்டுகளும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கும், அடுத்த இரண்டு ஆண்டுகள் புளொட் அமைப்புக்கும் வழங்கப்படும்.
சங்கானைப் பிரதேச சபையின் தவிசாளர் பதவி முதல் இரண்டு ஆண்டுகள் புளொட் அமைப்புக்கும், அடுத்த இரண்டு ஆண்டுகள் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கும் வழங்கப்படவுள்ளது. (உ-5)

## மகிந்த...

அரச தலைவரை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுச் சந்தித்து அவரது அணியில் இணைந்தார். (உ-5)

## தமிழ்...

பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டம் நடத்தப்பட்டது. எதிர்கட்சித் தலைவரும், கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பங்காளிக் கட்சித் தலைவர்களும் பங்கேற்றிருந்தனர். அந்தக் கூட்டத்தில் பங்காளிக் கட்சிகள் கோரியதற்கும் அதிகமான உள்ளூராட்சி மன்றங்கள், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியால் விட்டுக் கொடுக்கப்பட்டிருப்பதாக உள்ளூர் தலைவர்களால் விசனம் தெரிவிக்கப்பட்டது. இதனால் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இரண்டாம் நிலைத் தலைவர்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.
மாவட்ட நிர்வாகிகளுடன் கலந்தாலோசிக்காமல், கட்சித் தலைமை உள்ளூராட்சி மன்றங்களைத் தாரைவார்த்துள்ளதாக அவர்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.
மன்னார் நகர சபை ரெலோவுக்கு முன்னர் வழங்கப்பட்டது. கடும் எதிர்ப்பை அடுத்து பின்னர், இரண்டு ஆண்டுகள் தமிழ் அரசுக் கட்சிக்கும், எஞ்சிய இரண்டு ஆண்டுகள் ரெலோவுக்கு என்று மாற்றப்பட்டது. ஆனால் இந்தத் தீர்மானத்தையும் ஏற்றுக் கொள்ளமுடியாது என்று தமிழ் அரசுக் கட்சியின் மன்னார் மாவட்டக் கிளையினர் போர்க் கொடி தூக்கியுள்ளனர். கட்சித் தலைமைக்கு எழுத்து மூலமான கடிதமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
இந்த ஆசனப்பங்கீட்டை ஏற்கமுடியாது என்றும், இதனை மாற்றியமைக்க வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (உ-5,101)

# வைத்தியசாலை அணி போராடி வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம், டிசெ. 11

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில், நேற்று முன் தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அணி போராடி வெற்றிபெற்றது.

திருக்குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் போதனா வைத்தியசாலை அணியை எதிர்த்து துறையூர் ஐயனார் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங் களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்தமையால் சம நிலைத் தவிர்ப் பில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:4 என்ற கோல் கணக்கில் போதனா வைத்தியசாலை அணி வெற்றிபெற்றது. (ம-23)



## அடுத்த ஆட்டங்களிலும் இல்லை கேதர் யாதவ்

இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரில் அடுத்த இரண்டு ஆட்டங்களில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளார் கேதர் யாதவ்.

தொடைப் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக கேதர் யாதவ் நேற்றைய ஆட்டத்தில் களமிறங்கவில்லை. இந்த நிலையில் ஒரு நாள் தொடரில் இருந்து முழுவதுமாக அவர் விலகியுள்ளார். அடுத்த இரண்டு ஆட்டங் களிலும் அவர் களமிறங்கமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## வென்றது மியூனிச்

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம் பியன்ஸ் லீக் தொடரில், நேற்று இடம்பெற்ற ஆட்ட மொன்றில் ஜேர்மனியின் பெயர்ன் மியூனிச் அணி வெற்றிபெற்றது.

பெயர்ன் மியூனிச் அணியை எதிர்த்து பிரான்ஸ்கழகமான பரிஸ் செயின்ட் ஜேர்மன் மோதியது. 3:1 என்ற கோல் கணக்கில் மியூனிச் அணி வெற்றிபெற்றது. மியூனிச் சார்பாக கொரென்டின் டொலிஸோ இரண்டு கோல் களையும் றொபேர்ட் லெவன்டோஸ்கி ஒரு கோலையும் பெற்றனர். பரிஸ் செயின்ட் ஜேர்மன் சார்பாகப் பெறப்பட்ட கோலை கிலியான் மப்பே பெற்றிருந்தார். (ம)




# சென். பற்றிக்ஸ் மகுடம் சூடியது

கரணவாய் டிசெ. 11

சமபோஷக் கிண்ணத்துக்காக நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் 14 வயது ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. இதில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியும் ஏழாலை சிறிமுருகன் வித்தியாலயமும் பலப்பரீட்சை நடத்தின.

ஆரம்பம் முதல் இரண்டு அணி களினதும் வீரர்கள் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினர். கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் அதே நிலைதான். ஆட்டம் நிறைவடைய ஐந்து நிமிடங்கள் இருக்கையில் பற்றிக்ஸின் சார்பாக ரஜிந்தன் கோலொன்றைப் பதிவுசெய்ய அந்தக் கோலே ஆட்டத்தின் ஒரே கோலாகவும் அமைந்தது. 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது சென். பற்றிக்ஸ். (ம-108-422)

## இன்றைய மோதல்கள்

*யங்ஸ்ரார் வி.க.*
*கால்பந்தாட்டம்*

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 23ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மருதநிலா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல் இக்பால் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

*நியூட்டன் வி.க.*
*கால்பந்தாட்டம்*

சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமராட்சி லீக் மற்றும் பருத்தித்துறை லீக் அணிகள் பங்குபற்றும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

INDIAN PREMIER LEAGUE

## 2020ஆம் ஆண்டுக்குப் பின் ஐ.பி.எல். தொடரின் போது பன்னாட்டு ஆட்டம் இல்லை

எதிர்வரும் 2020ஆம் ஆண்டின் பின்னர் ஐ.பி.எல். தொடரின்போது பன்னாட்டு ஆட்டங்களை இல்லாமல் செய்வது தொடர்பில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை பேச்சு நடத்தி வருகிறது.

இந்தியன் பிரீமியர் லீக் தொடருக்கு தற்போது அதிகளவில் ரசிகர்கள் உள்ளனர். தொடரும் மிகவும் சுவாரஸ்யம் மிக்கதாக அமையும். எனினும் ஐ.பி.எல். தொடர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது இடையிடையே இருதரப்புத் தொடர்களும் நடைபெறுவதால் வீரர்கள் அணிகளில் இருந்து பிரிந்து சென்று விடுவார்கள். இந்த நிலையில் எதிர்வரும் 2020ஆம் ஆண்டின் பின்னர் ஐ.பி.எல். தொடரின் போது பன்னாட்டு கிரிக்கெட் சபையின் ஆட்டங்களைத் தவிர்ப்பது தொடர்பில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை பேச்சு நடத்தி வருகிறது. (ம)

## கோக்லி – அனுஸ்கா இத்தாலியில் திருமணம்

இந்திய அணியின் தலைவர் கோக்லியும், அனுஸ்கா சர்மாவும் இத்தாலியில் திருமணம் செய்யவுள்ளனர் என்று மீண்டும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களில் இருந்து கோக்லி ஓய்வு பெற்றார். இதையடுத்து அவருக்கு சுமார் 20 நாள்கள் ஓய்வு கிடைத்துள்ளது. இந்தக் காலப்பகுதியில் அவர் அனுஸ்கா சர்மாவை திருமணம் செய்யவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் இதை அனுஸ்கா தரப்பு மறுத்தது. எனினும் பிரபல ஆங்கில ஊடகமொன்று இத்தாலியில் இவர்களின் திருமணம் நடைபெறவுள்ளது என்று தெரிவித்துள்ளது. (ம)

# பண்டத்தரிப்பு பெண்கள் அணி கிண்ணம் வென்றது



இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்டச் சங்கம் 14 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையில் நடத்திய சமபோஷ கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி கிண்ணம் வென்றது.


தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் தெல்லிப் பழை மகாஜனக் கல்லூரியை பலத்த போராட்டத்தின் பின் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி. அந்த அணி தனது இரண்டாவது ஆட்டத்தில் வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியை 6:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி நடப்பு வருட சமபோஷக் கிண்ணத்தைத் தனதாக்கியது. (ம-108-422)

# சொல்லியடித்தார் திசர பெரேரா

இந்திய அணியை வீழ்த்த முடியும் என்று தெரிவித்திருந்த இலங்கை அணியின் தலைவர் திசர பெரேரா, தற்போது அதைச் செயலிலும் காட்டினார்.

தொடர் ஆரம்பமாகும் முன்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையில், "மத்தியூஸ் ஒருநாள் தொடரில் பந்துவீசுவார். அவர் டெஸ்ட் ஆட்டங்களில் பந்து வீசவில்லை. அவர் ஒருநாள் மற்றும் ரி-20 ஆட்டங்களுக்கு நல்லவிதமாகத் தயாராகியுள்ளார். இது எங்களுக்கு சரியான சமநிலையை வழங்குகிறது. எங்கள் அணிக்கு சிறந்த பங்களிப்பை மத்தியூஸ் வழங்குவார் என்ற நம்பிக்கை உள்ளது. இந்திய அணியில் விராட் கோக்லி இல்லை. அவர் ஒரு தலைசிறந்த வீரர். ஆனால், நாங்கள் அதுகுறித்து சிந்திக்கவில்லை. நாங்கள் எங்களுடைய சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்துவோம். எங்களால் வெற்றி பெற முடியும்" என திசர மேலும் தெரிவித்திருந்தார்.

இந்தியாவுக்கு எதிராக நேற்று நடைபெற்ற ஆட்டம்தான் இலங்கை அணியின் தலைவராக திசர பெரேராவின் முதலாவது ஆட்டமாகும். அத்துடன் தொடர்ச்சியாக 12 ஒருநாள் ஆட்டங்களில் தோல்வியடைந்திருந்த இலங்கை அணி இந்தியாவுக்கு எதிராக இந்திய மண்ணில் வைத்து என்ன செய்யப்போகிறது என்றும் பெரியளவில் எதிர்பார்ப்பு நிலவியது. இந்த எதிர்பார்ப்புக்களுக்குப் பதிலாக மிகப்பெரிய வெற்றிபெற்று சாதித்துள்ளது இலங்கை. (ம)





# சுரங்க லக்மலிடம் பணிந்தது இந்தியா

இந்தியாவுக்கு எதிராக நேற்று நடைபெற்ற முதலாவது ஒருநாள் ஆட்டத்தில், சிறு பதற்றமும் இல்லாமல் வெற்றிபெற்றது இலங்கை அணி. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இந்திய அணியின் ஆரம்ப வீரர்களாக ரோகித் சர்மா மற்றும் தவான் இருவரும் களமிறங்கினர். ஓட்டமெதையும் பெறாத நிலையில் தவானை வீழ்த்தினார் மத்தியூஸ். ரோகித் சர்மா 2 ஓட்டங்களுடனும், டினேஸ் கார்திக் ஓட்டமெதையும் பெறாமலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். 9 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் ஸ்ரோஸ். மனீஸ் பாண்டே வெறும் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பாண்டியாவால் முடிந்தது 10 ஓட்டங்கள். இந்திய அணி வெறும் 29 ஓட்டங்களில் தனது 7ஆவது இலக்கை இழந்திருந்தது.

இத்தனைக்கும் மறுமுனையில் தனித்துப் போராடிக் கொண்டிருந்தார் டோனி. குல்தீப் யாதவ் ஓரளவு நிலைக்க மறுமுனையில் சிக்சர், பவுண்டரிகளை விளாசிக்கொண்டிருந்தார் டோனி. இந்திய அணி 50 ஓட்டங்களைத் தொடுவதென்பதே மிகப்பெரிய விடயமாக இருந்த நிலமை மாற்றம்பெற்று 100 ஓட்டங்களைத் தொட்டது இந்தியா. டோனி அரைச்சதம் கடந்தார். அவர் 65 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 112 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இந்தியா.

பந்துவீச்சில் லக்மல் 4 இலக்குகளையும், பெர்னான்டோ 2 இலக்குகளையும், மத்தியூஸ், பெரேரா, பதிரண, தனஞ்சய ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி 7 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார் குணதிலக. ஓட்டமெதையும் பெறாத நிலையில் திரிமன்னேவை வீழ்த்தினார் புவனேஸ்வர் குமார். எனினும் தரங்க ஓர் முனையில் நிலைத்துநின்று அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார். அவர் 49 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும் மத்தியூஸ், டிக்வெல்ல இணைந்து ஆட்டத்தை வெற்றியுடன் முடித்து வைத்தனர்.

ஆட்டநாயகனாக 10 பந்துப்பரிமாற்றங்களை வீசி 4 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்கள் உள்ளடங்களாக வெறும் 13 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 இலக்குகளைக் கைப்பற்றிய லக்மல் தெரிவானார். (ம)

# மே.தீவுகள் பின்னிலை

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி பின்னடைவைக் கண்டுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. நேற்றுமுன்தின முதல்நாள் முடிவில் 7 இலக்குகளை இழந்து 286 ஓட்டங்களைப் பெற்றிருந்தது நியூசிலாந்து.

பன்ரெல் 12 ஓட்டங்களுடனும், வாக்நெர் ஒரு ஓட்டத்துடனும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். மேலதிகமாக ஒரு ஓட்டத்தையேனும் பெறாமல் ஆட்டமிழந்தார் வாக்நெர். சவுத்தி, போல்ட் இருவரும் பின்வரிசையில் எதிர்பாரா ஆட்டத்தை வெளிப் படுத்தினார்கள். முடிவில் சகல இலக்குகளை இழந்து 373 ஓட்டங்களைக் குவித்தது நியூசிலாந்து.

பந்துவீச்சில் கபிரியேல் 4 இலக்குகளையும், றோச் 3 இலக்குகளையும், கம்மின்ஸ் 2 இலக்குகளையும், ரெய்பர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு ஆரம்ப வீரர்களாக பிரீத்வைட் மற்றும் பவல். ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்தார் பவல். பிரீத்வைட் ஒரு முனையில் நிலைத்துநிற்க மறுமுனையில் ஓரளவு நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார் ஹெட்மயர். அவர் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். கோப், சேஸ் இருவரும் பதின்மத்தைத் தாண்டவில்லை. அரைச்சதம் கடந்தார் பிரீத்வைட். டவ்ரிச் 35 ஓட்டங்களைப் பெற்றார். 66 ஓட்டங்களுடன் பிரீத்வைட்டும் ஆட்டமிழக்க நேற்றைய இரண்டாம் நாள் முடிவில் 8 இலக்குகளை இழந்து 215 ஓட்டங்களைப் பெற்றுள்ளது மேற்கிந்தியத் தீவுகள் அணி. ரெய்பர் 22 ஓட்டங்களுடனும், கம்மின்ஸ் 10 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)



# குத்துச்சண்டையின்போது கிழிந்து தொங்கியது காது

அமெரிக்காவில் நடைபெற்ற குத்துச் சண்டையில் இங்கிலாந்து வீரரின் காது கிழிந்து விளையாட்டு உலகில் பரபரப்பாகியள்ளது.

அமெரிக்காவின் லொஸ் வெகாஸில் உள்ள சின் சிட்டியில் நேற்றுமுன்தினம் குத்துச்சண்டை போட்டி நடைபெற்றது.. இதில் மெக்சிகோவின் பிரான்சிகோ வர்காஸ் இங்கிலாந்தின்லிவர்பூலைச் சேர்ந்த ஸ்டீபன் சிமித் ஆகியோர் பலப்பரீட்சை நடத்தினர். இந்த போட்டியில் மெக்சிகோ வீரர் பிரான்சிஸ்கோ வர்காஸ் ஆதிக்கம் செலுத்தினார். இவரது தாக்குதலுக்கு ஸ்டீபன் சிமித்தால் ஈடுகொடுக்க முடியவில்லை.

9ஆவது சுற்றின்போது பிரான்சிஸ்கோ வர்காஸ் குத்தியதில் ஸ்டீபன் ஸ்மித்தின் காது கிழிந்து தொங்கியது. அதன் பின்னர் வர்காஸ்வெற்றிபெற்றார் என்று அறிவிக்கப்பட்டார். (ம)



# பரிசீலிக்கப்படுகிறார் லசித் மலிங்க



இந்திய அணிக்கு எதிரான ரி-20 தொடருக்கான இலங்கை அணியில் மலிங்கவின் பெயர் பரிசீலிக்கப்படுகிறது.

இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடர் முடிந்தபின்னர்ரி-20 தொடர் நடைபெறவுள்ளது. ரி-20 தொடரின்முதல்மூன்றுஆட்டங்களும் முறையே டிசெம்பர் 20, 22, 24 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளன. இந்தத் தொடருக்கான இலங்கை உத்தேச அணி அதாவது 20 வீரர்களின் பெயர்களை உள்ளடக்கிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணியில் மலிங்க இடம்பிடித்தார். மலிங்கவுடன் ஜீவன் மெண்டிஸின் பெயரும் பரிசீலனைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த 20 வீரர்களில் இருந்து 15 வீரர்கள் இந்தியாவுக்கு எதிரான ரி-20 தொடருக்கான அணியில் இடம்பிடிப்பார்கள். (ம)

# வென்றது சிந்து

யாழ்ப்பாணம், டிசெ. 11

நவாலி சென். றொக்ஸ் விளையாட்டுக் கழகமும், இந்து இளைஞர் மன்றமும் இணைந்து நடத்தும் லீக் முறையிலான தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஆலடி சிந்து அணி வெற்றிபெற்றது.

ஆலடிசிந்து விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அறிவொளி விளையாட்டுக் கழக அணி மோதிய ஆட்டத்தில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக அணி 12:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

# இந்தியா சவாலானது சொல்கிறார் அம்லா

"இந்திய அணி சவாலானது" என்று தெரிவித்தார் தென்னாபிரிக்க அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அம்லா. இலங்கைக்கு எதிரான தொடரின் பின்னர் இந்திய அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது. இந்தத் தொடர் தொடர்பில் பெரும் எதிர்பார்ப்புக்கள் நிலவுகின்ற நிலையில் இவ்வாறு தெரிவித்தார் அம்லா. "இந்திய அணி தற்போது சமபலம் பெற்றுத் திகழ்கிறது. அந்த



அணி அன்னிய மண்ணிலும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தக்கூடிய தகுதியை தற்போது பெற்றுள்ளது. எமக்கெதிரான தொடரில் இந்திய அணி மிகப்பெரும் சவாலை வெளிப்படுத்தும். ஆனால் அந்தச் சவாலைச் சந்திப்பதற்குத் தயாராகவே உள்ளோம்" என அம்லா மேலும் தெரிவித்தார். முன்னதாக தென்னாபிரிக்க அணியின் முன்னாள் தலைவர் சிமித், "தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடர்தான் இந்திய அணிக்கு உண்மையான சவால்" என்று தெரிவித்திருந்தமைகுறிப்பிடத்தக்கது.

**சமையல் ஆள்கள் தேவை**

மானிப்பாயில் உள்ள Restorant ஒன்றிற்கு சமையலில் முன் அனுபவம் உள்ள சமையல் ஆள்கள் "Cook" தேவை.
(ஆண் / பெண்) இருபாலரும்

தொடர்புகளுக்கு :-076 852 2913

## கண்களை திறக்கும் தோல்வி

### ரோகித் தெரிவிப்பு

இலங்கைக்கு எதிராக நேற்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் படுதோல்வியடைந்த இந்திய அணியின் பொறுப்புத் தலைவர் ரோகித் சர்மா, "இந்தத் தோல்வி கண்களைத் திறக்கும் தோல்வி" என்று தெரிவித்தார்.

ஆட்டம் முடிந்த பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே ரோகித் இவ்வாறு தெரிவித்தார்.

"இன்னும் இரண்டு ஆட்டங்கள் உள்ளன. நான் இன்னொன்றையும் தெளிவுபடுத்துகிறேன், இன்று தரநிலைக்கு ஏற்ப நாம் விளையாடவில்லை. ஓட்டங்களைக் குவிக்கவில்லை. பந்துவிச்சாளர்கள் தம்மால் இயன்றதைச் செய்தனர். துடுப்பாட்டத்தில் ஏற்பட்ட தடுமாற்றம் தோல்விக்குக் காரணமாகிறது. இன்றைய நாள் எமக்கு உரியது அல்ல. இந்தத் தோல்வி கண்களைத் திறந்துள்ளது. இதிலிருந்து மீண்டு ஒன்றிணைந்து அடுத்த ஆட்டங்களில் களமிறங்குவோம்" என ரோகித் மேலும் தெரிவித்தார். (ம)

# ரியல் மட்ரிட் அபாரம்




ஐரோப்பியக்கழகங்களுக்குஇடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் அபார வெற்றி பெற்றது ரியல் மட்ரிட் அணி.

ரியல் மட்ரிட்டை எதிர்த்து செவில்லா மோதியது. ஆட்டத்தின் மூன்றாவது நிமிடத்தில் முதல்கோலைப்பதிவுசெய்து கோல்கணக்கை ஆரம்பித்து வைத்தார் நாச்சோ. 23ஆவது, 31ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் பதிவுசெய்தார் ரொனால்டோ. ரொனி குரூஸ் 38ஆவது நிமிடத்திலும், ஹார்மி 42ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 5:0 என்ற கோல் கணக்கில் ஆதிக்கம் செலுத்தியது மட்ரிட்.

இரண்டாம் பாதியில் மேலதிக கோலெதுவும் பதிவாகவில்லை. முடிவில் 5:0 ஏன்ற கோல் கணக்கில் வெற்றிபெறது ரியல் மட்ரிட். (ம)

**வேலைவாய்ப்பு**

யாழ். நகரில் இயங்கிவரும்
இரு ஹோட்டல்களிற்கு
(Park View Hotel, Fort Way Hotel)
Cook, House Keeper, Roomboy
தேவை.

தொடர்பு - 077 343 8373

**வேலையாள்கள் தேவை**

213, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
"லிங்கன் கிறீம் ஹவுஸ்"

1) கொத்து ரொட்டி, ரொட்டி தயாரிப்பவர்.
2) கிளினிங் வேலை (ஆண், பெண்)
3) சிட்டை எழுதுனர் (Bill clerk)

சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
"நிறுவனர்"
லிங்கன் கிறீம் ஹவுஸ்




நடப்பு வருடத்துக்கான தங்கப் பந்து விருதை தனதாக்கியிருந்தார் ரொனால்டோ. இந்த விருதை வென்றதன் பின்னர் அவர், தான் களமிறங்கிய முதலாவது ஆட்டமான செவில்லாவுக்கு எதிரான நேற்றுமுன்தின ஆட்டத்தில் பல்லாயிரக் கணக்கான ரசிகர்களுக்கு முன்பாக தனது விருதைக் காண்பித்தார். (ம)

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி சண்முகம்



ஏழாலையைப் பிறப்பிடமாகவும், காளி கோயிலடி பத்தமேனி, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் ,தற்போது ஐயனார் கோயிலடி சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சண்முகம் (நாகேந்திரம்) நேற்று (10.12.2017) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சண்முகம் (நாகேந்திரம்) அவர்களின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா பார்வதி தம்பதியரின் அன்புமருமகளும் யோகலக்சுமி, நாகபூசணி, சரஸ்வதி காலஞ்சென்ற நேசராணி மற்றும் சிவசெல்வம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் தவஞானசெல்வம் , கலைவாணி, கலைரூபி, தவரூபன், தவறஞ்சன் ஆகியோரின் அன்புத்தாயாரும் நந்தினி, பாலகுமாரன், கோபி, உசா, ஜெயந்தி ஆகியோரின் அன்புமாமியும் கம்ஷிகா, சயந்திகா, சபரிகிரிஷன், பானுஷிகா, சாருஜா, சாருகேசன், அங்கஜன், நஸ்ரியா, காயத்திரி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2017) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் சுன்னாகம் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாவத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.12.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.